# ஆர்.எஸ்.எஸ்

## வரலாறும் அரசியலும்

இந்துக்களின் காவலன் என்று அவர்கள் சொல்வார்கள்.
இந்தியாவின் அபாயம் என்று இவர்கள் சொல்வார்கள்.

எது உண்மை?

பா. ராகவன்



# ஆர்.எஸ்.எஸ்

## வரலாறும் அரசியலும்

பா. ராகவன்

https://telegram.me/aedahamlibrary

ஆர்.எஸ்.எஸ்: வரலாறும் அரசியலும்
by Pa Raghavan

Copyright © 2020 by Pa Raghavan

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, including photocopying, recording, or other electronic or mechanical methods, without the prior written permission of the author, except in the case of brief quotations embodied in critical reviews and certain other noncommercial uses permitted by copyright law.

Author's Home Page: www.writerpara.com
Email: writerpara@gmail.com

https://telegram.me/aedahamlibrary

# பொருளடக்கம்


1. பிள்ளையார் சுழி

2. ஒரு மனிதர், ஒரே மனிதர்

3. உடலும் உள்ளமும்

4. தடைக்கல்

5. பரிவாரம்

6. மேலிருந்து கீழ், இடமிருந்து வலம்

7. தேசம் எங்கள் உயிர்மூச்சு

8. இரண்டாவது தடை

9. மத மாற்றம், மதக்கலவரங்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ்

10. காஷ்மீர் முதல் கேரளம் வரை - 1

11. காஷ்மீர் முதல் கேரளம் வரை - 2

12. அயோத்தி

13. நெருடாத உறவு

14. மோடி வித்தை

கால வரிசை

உதவிய நூல்கள், ஆதாரங்கள்


https://telegram.me/aedahamlibrary

# 1. பிள்ளையார் சுழி

ஆதியிலே அந்த ஊருக்கு லவபுரி என்று பெயர். காட்டுக்குப் போய் வந்து, அயோத்திக்கு மன்னனாக முடிசூட்டப்பட்டு, சரயுவில் கரைந்து காலமான பிற்பாடு ஹிந்துக்களுக்குக் கடவுளான, ராமனின் மகன்களுள் ஒருவனான லவன் நிர்மாணித்த நகரம் என்று சொல்லுவார்கள். அதற்கு ஆதாரம் தேடத் தொடங்கினால் இன்னோர் அயோத்தி அபாயம் அவசியம் ஏற்படும். சந்தேகத்துக்கு இடமில்லாமல் கி.பி. பதினோறாம் நூற்றாண்டு முதல் லாகூரின் பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்களாகவே இருந்துவந்திருக்கிறார்கள். ஹிந்துக்கள் உண்டு. சீக்கியர்கள் நிறையவே உண்டு. ஆனாலும் பெரும்பான்மை முஸ்லிம்கள்தான்.

அவர்கள்தான் அங்கே விவசாயம் பார்த்து வந்தார்கள். வண்டியோட்டிகளாகவும் பெட்டிக்கடைக் காரர்களாகவும் இருந்தார்கள். பெரிய பதவிகளில் ஹிந்துக்கள் இருந்தார்கள். அரசுப் பணிகளில் சீக்கியர்கள் இருந்தார்கள். வியாபாரம் இந்த இருவர் வசமே இருந்தது. பெரிய கட்டடங்கள், பெருமளவு நிலம் ஹிந்துக்களுடையனவாகவும் சீக்கியர்களுடையனவாகவுமே இருந்தன. அவர்கள் படித்தவர்களாக இருந்தார்கள். பெரிதும் முதலாளிகளாக இருந்தார்கள். முஸ்லிம்கள் தொழிலாளிகளாக.

1940 மார்ச் 22, 23, 24ம் தேதிகளில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில் பாகிஸ்தான் என்கிற தனிநாடு பிறந்தே தீரவேண்டியது அவசியம் என்று முஹம்மதலி ஜின்னா தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியபோது - அதற்கான காரணங்களை அடுக்கியபோது, மெல்ல மெல்ல லாகூர் சூடாக ஆரம்பித்தது. முதலாளிகளான ஹிந்துக்களும் சீக்கியர்களும் கவலைகொள்ள ஆரம்பித்தார்கள்.

1945 ம் ஆண்டு இறுதி மாதங்களில் பஞ்சாப் மாகாண சட்டமன்றத் தேர்தல் பிரசாரம் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதற்குமுன் அப்படி இல்லை. அந்த முறை முஸ்லிம் லீக் மிகத் தீவிரமாக வகுப்புவாதம் பேச ஆரம்பித்தது. முஸ்லிம்களே, விழித்துக்கொள்ளுங்கள். அனைத்து மதத்தவரும் சமம் என்று காங்கிரஸ் சொல்லிக் கொண்டிருப்பது வெறும் வார்த்தை. நம்பவே முடியாத, நம்பவே கூடாத ஆசாமிகள் அவர்கள். முஸ்லிம்களை ஒதுக்கி ஓரங்கட்டுவதில் கைதேர்ந்தவர்கள். காலமெல்லாம் கூலிப் பிழைப்பு

https://telegram.me/aedahamlibrary

நடத்தி சாகப்போகிறீர்களா? நம் தகுதி உணர்ந்து, தராதரம் புரிந்து, தன்மானத்துடன் வாழ விரும்புகிறீர்களா? இது முஸ்லிம்கள் மிகுந்த மாகாணம். முஸ்லிம் லீக் வெற்றி பெற்றால்தான் உங்களுக்கு விமோசனம். காங்கிரசுக்கோ அகாலி தளத்துக்கோ ஆதரவு தெரிவித்தால் உங்கள் விதி அன்றோடு எழுதப்பட்டுவிட்டதென்று முடிவு செய்துகொள்ளுங்கள்.

ஒரு முடிவோடு இருந்தார் ஜின்னா. ஒரு முடிவோடு பிரசாரம் செய்தார்கள் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்கள். இது பஞ்சாபில் பல முஸ்லிம்களுக்கே பிடிக்கவில்லை. திடீரென்று இத்தனை அழுத்தமாக மதவாதம் பேச என்ன அவசியம்? இது சிக்கல் தரும். நிச்சயமாகப் பிரச்னை வரும். மக்களின் அன்றாட அமைதி குலையப்போகிறது. சந்தேகமில்லை.

விமரிசித்தவர்கள் அனைவரும் முஸ்லிம் லீகைச் சாராத முஸ்லிம்கள். ஒன்றுபட்ட இந்தியாவை நேசித்தவர்கள். பிரிவினைவாதத்தைக் கண்டால் காத தூரம் ஓட விரும்பியவர்கள். அவர்கள் முஸ்லிம் லீக்குக்கு அல்ல; இஸ்லாத்துக்கு  எதிராகக் கலகம் செய்கிறார்கள் என்று முஸ்லிம் லீக் சொல்லிவிட்டது. அப்படிப்பட்ட பலருக்கு எதிராக ஃபத்வாக்கள் வழங்கப்பட்டன. முஸ்லிம் லீகுக்கு எதிராகப் பேசிய முஸ்லிம்கள் பலர் இறந்தபோது அடக்கம் செய்ய யாரும் போகக்கூடாது என்றெல்லாம் உத்தரவிட்டார்கள். மீறிச் சென்றவர்கள் மீது தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன.

பஞ்சாப், குறிப்பாக லாகூர் மெல்ல மெல்ல சூடாகிக்கொண்டிருந்தது. சீக்கிரம் கொதிநிலையைத் தொட்டுவிடும் என்று அந்த 1945ம் ஆண்டின் இறுதியில் தெரிய ஆரம்பித்தது.

பஞ்சாப் மாகாண சட்டசபையில் அப்போது 175 இடங்கள் இருந்தன. அந்தத் தேர்தலில் முஸ்லிம்லீக் எழுபத்தி ஐந்து இடங்களைக் கைப்பற்றியது. இது அதிகம். எதிர்பார்த்ததைவிட அதிகம். அறுதிப் பெரும்பான்மை இல்லை என்றாலும் சபையின் தனிப்பெரும் கட்சி என்னும் அந்தஸ்து அவர்களுக்குக் கிடைத்தது. இது, அதற்குமுன் காணாதது. தவிரவும் முஸ்லிம் லீக் வெற்றி பெற்றதில் பெரும்பாலான இடங்கள் ஆளும் யூனியனிஸ்ட் கட்சிக்குச் சொந்தமாக இருந்தவை. அவர்களுக்கு அந்தத் தேர்தலில் வெறும் 18 இடங்களே கிடைத்தன. காங்கிரசுக்கு ஐம்பது. அகாலி தளத்துக்கு இருபத்தி இரண்டு.

எழுபத்தி ஐந்து இடங்கள் என்பது ஆட்சியமைக்கப் போதாது. கூட்டணி

https://telegram.me/aedahamlibrary

வேண்டும். ஆனால் முஸ்லிம் லீக் யாரோடு கூட்டணி வைக்க இயலும்? எனவே யூனியனிஸ்ட் கட்சியும் காங்கிரசும் அகாலி தளமும் கூட்டணி வைத்து ஆட்சியைப் பிடித்தன.

இது கொதி நிலைக்கு வெகு பக்கத்தில் கொண்டுவந்து சேர்த்த தருணம்.

1947 ஜனவரி பிறந்தது. இருபது தேதி வரை பெரிய பிரச்னை ஏதுமில்லை. திடீரென முஸ்லிம் லீக், பஞ்சாப் அரசுக்கு எதிரான நேரடி நடவடிக்கையில் இறங்கப்போவதாக அறிவித்தது. அதாவது கிளர்ச்சி. அதாவது கலவரம். அதாவது அடிதடி.

சொல்லிவைத்தமாதிரி முஸ்லிம் லீகின் ‘ஆயுதப் பிரிவாக’ அன்று அறியப்பட்ட முஸ்லிம் நேஷனல் கார்ட் அமைப்பைச் சேர்ந்த ‘வீரர்கள்’ பஞ்சாபின் பல முக்கிய நகரங்களில் கத்தி மற்றும் துப்பாக்கி தெரியச் சுற்றிவரத் தொடங்கினார்கள். குறிப்பாக, லாகூரில் ஒரு பரேடு நடத்துமளவுக்கு அவர்கள் பெருகி நின்றார்கள். வெகு நிச்சயமாக சீக்கியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் பெரிய பாதிப்பு இருக்கும் என்று தெரிந்தது. மைனாரிடி சீக்கியர்கள். மைனாரிடி ஹிந்துக்கள்.

எனவே அவர்களைக் காப்பாற்றுவதற்கு அவர்களுடைய தரப்பிலிருந்து ஒரு சிலர் புறப்பட்டார்கள். யாராவது தாக்கினால் பதிலுக்குத் தாக்க ஆயத்தமாவோம். என்ன வந்தாலும் விட்டுவிடக்கூடாது.

சீக்கியர்கள், குறுங்கத்தி எடுத்துக்கொண்டார்கள். ஹிந்துக்கள் கத்தி மட்டுமில்லாமல் கைத்தடி, கருங்கல் போன்றவற்றையும் எடுத்துக்கொண்டார்கள்.

கூட்டணி அரசின் அப்போதைய பஞ்சாப் முதல்வர் பெயர் கிஸர் திவானா (Khizr Tiwana). யூனியனிஸ்ட் கட்சியின் தலைவரும் அவர்தான். பார்த்தார். எப்படியானாலும் ஒரு கலவரத்துக்கு விதையூன்றாமல் ஓயாது முஸ்லிம் லீக். அவர்கள் ஆரம்பித்தால் நிச்சயமாக அடுத்தவர்கள் தொடர்வார்கள். மாநிலம் ரணகளமாகும். இரண்டுபடும். அதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றாலும், தடுக்க வேண்டியது அரசின் கடமை. ஏதாவது செய்யவேண்டும். உடனே.

அவர் முஸ்லிம் லீகின் ஆயுதப் பிரிவான முஸ்லிம் நேஷனல் கார்டைத் தடை செய்து அறிவித்தார் (ஜனவரி 24, 1947).

தடை செய்தால் தீர்ந்துவிடுமா? லாகூரில் மூளத் தொடங்கியிருந்த வெப்பம் அதிகரித்தது. கிளர்ச்சிகள் பெரிதாயின. முஸ்லிம் லீக் கட்சித்

https://telegram.me/aedahamlibrary

தலைமையிடமிருந்து தொண்டர்களிடம் பரவியிருந்த வன்முறை வெறி, மெல்ல மெல்ல மக்களிடம் ஊடுருவத் தொடங்கியது. ஆங்காங்கே அடிதடிகள் ஆரம்பித்தன. கதவுகள் உடைக்கப்பட்டன. சிறு நெருப்புகள் பற்றிக்கொண்டன. காயம் பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. வீதியில் காவலர்களைப் பார்த்தால் கல்வீச ஆரம்பித்தார்கள். பாகிஸ்தான் வேண்டும். பாகிஸ்தான் வேண்டும். பாகிஸ்தான் வேண்டும்.

லாகூர் கொதிக்கத் தொடங்கிவிட்ட போது, பஞ்சாபின் அன்றைய மிக முக்கியமான சீக்கியத் தலைவர்களுள் ஒருவரான மாஸ்டர் தாராசிங், சட்டமன்ற வளாகத்தில் தன் இடுப்பில் இருந்த குறுவாளை எடுத்து உயர்த்தியபடி ஒரு வார்த்தை சொன்னார். பாகிஸ்தான் முர்தாபாத் (மார்ச் 3, 1947).

கொதிகலன் அன்று வெடித்தது.

யார் முதலில் அடித்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் கிடையாது. முதலில் விழுந்த பிணம் ஹிந்துவுடையதா, முஸ்லிமுடையதா, சீக்கியருடையதா என்று தெரியாது. முதல் பிணத்தை அடையாளம் காண்பதற்குள் நூற்றுக்கணக்கில் அவை விழத் தொடங்கிவிட்டன.

லாகூரில்தான் தொடங்கியது. பஞ்சாப் முழுதும் பரவ வெகுநேரம் ஆகவில்லை. எல்லையோர கிராமங்கள் எங்கும் ஹிந்துக்களை முஸ்லிம்கள் தேடித்தேடிக் கொல்லத் தொடங்கினார்கள். முஸ்லிம்களை ஹிந்துக்கள் விரட்டி விரட்டி அடிக்கத் தொடங்கினார்கள். தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட முஸ்லிம் நேஷனல் கார்ட் உறுப்பினர்களும் சரி; ஹிந்துக்களும் சரி. எந்தத் தடையையும் பொருட்படுத்தவில்லை. ஒருவர் மாற்றி ஒருவர் அடித்துக்கொண்டார்கள். ஊரடங்கு உத்தரவு இருந்தது. அதை ஒதுக்கிவைத்துவிட்டுச் சண்டையிட்டார்கள்.

மார்ச் ஐந்தாம் தேதி ராவல் பிண்டிக்கு இந்தக் கலவரம் பரவியது. அங்கு வசித்துவந்த ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் தேடித்தேடிக் கொல்லப்பட்டார்கள். உயிருடன் எரிக்கப்பட்டார்கள். கத்திக் குத்துப் பட்டு நடு வீதியில் ரத்தம் சொட்டச்சொட்ட, அரை உயிரில் அல்லாடிக்கொண்டிருந்தோர் நிறையப்பேர். குறைந்தது இரண்டாயிரம் முஸ்லிம் அல்லாதவர்கள் அங்கே ஒருசில தினங்களில் இறந்திருக்கலாம் என்று ஸ்டாக்ஹோம் பல்கலைக் கழகத்தின் அரசியல் வரலாற்றுப் பிரிவுப் பேராசிரியர் இஷ்டாக் அஹமத் எழுதுகிறார்.

https://telegram.me/aedahamlibrary

(Forced migration and ethnic cleansing in Lahore in 1947: Some first person accounts - Ishtiaq Ahmed).

பாகிஸ்தான் என்ற தேசம் பிரித்துத் தரப்பட்டாலொழிய இந்தக் கலவரங்கள் அடங்காது என்று தேசமெங்கும் பேசத் தொடங்கினார்கள். வேண்டவே வேண்டாம், முழு ஹிந்துஸ்தானத்தையும் முஸ்லிம் லீகே ஆளட்டும், பிரிவினை வேண்டாம் என்று காந்தி சொன்னார். நேருவுக்கும் படேலுக்குமே அதில் உடன்பாடில்லை என்று மவுண்ட் பேட்டனிடம் தெரிவிக்கப்பட்டது. பெரியவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தார்கள். கலவரக்காரர்கள் தொடந்து தாக்கிக்கொண்டே இருந்தார்கள். மக்கள் தொடர்ந்து இறந்துகொண்டே இருந்தார்கள்.

ஜூலை மாதம் பிறந்தபோது கிட்டத்தட்ட வட இந்தியா முழுதும் கலவரம் தாண்டவமாடிக்கொண்டிருந்தது. பஞ்சாப் எல்லையில் சொல்லி மாளாத ரத்தம். பாகிஸ்தான் பிரிவது உறுதி ஆகிவிட்ட போதும் கலவரத்தை நிறுத்த வழியின்றிப் போனது. ஆகஸ்ட் பிறந்தபோது லட்ச லட்சமாக அகதிகள் இடம்பெயர ஆரம்பித்தார்கள். வழியெல்லாம் கலவரம். ஆயிரக்கணக்கில் மக்களை ஏற்றிக்கொண்டு இரு புறமும் வந்த ரயில்கள்தோறும் பிணங்கள். இறந்த உடல்களைக் கண்ட கணத்தில் பற்றிக்கொண்ட ஆவேசம், இன்னும் பல உடல்களைத் தரையில் கிடத்த வழி செய்தது.

பஞ்சாப்புக்குக் குறுக்கே கிழிக்கப்பட்ட கோட்டின் இருபுறமும் நிகழ்ந்த கலவரங்கள் கணக்கு வழக்கில்லாதவை. லாகூரில் தொடங்கி, மாநிலம் முழுதையும் ரத்தக்காடாக்கியது பிரிவினை. அதுவே பிறகு வட இந்தியா முழுதும் பரவியது.

அந்தச் சமயத்தில் ஹிந்துக்களைக் காப்பாற்றத் தன்னைத் தானே நியமித்துக்கொண்ட அமைப்புகளுள் முக்கியமானது ஆர்.எஸ்.எஸ்.

பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு மூளத் தொடங்கிய கலவர நெருப்பிலிருந்து ஹிந்துக்களைக் காப்பாற்ற ஆர்.எஸ்.எஸ். மேற்கொண்ட  முயற்சிகள், வெடி குண்டு தயாரிப்பது வரை முன்னேறியது சரித்திரம். முஸ்லிம்களிடம் அப்போது வெடிகுண்டுப் புழக்கம் குறைவு. அவர்கள் பெரும்பாலும் பெட்ரோல் அடைத்த பாட்டில்களை மட்டுமே குண்டுகளாகப் பயன்படுத்தினார்கள். எல்லைப் பகுதிகளில் வசித்துவந்த கிராமத்து மக்கள் மீது அவர்கள் நிகழ்த்திய மிகக் கொடூரமான தாக்குதல்களுக்கு  பதிலளிக்கும் விதமாக, முஸ்லிம்

https://telegram.me/aedahamlibrary

குடியிருப்புகள் மீது ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் கையெறி குண்டுகளை வீசினார்கள். அவர்களே தயாரித்த நாட்டு வெடிகுண்டுகள். கத்திகள் பயன்படுத்தப்பட்டன. கற்கள் மூட்டை மூட்டையாகப் பயன்படுத்தப்பட்டன. யாரையும் விடாதே. ஒருத்தரையும் விடாதே. பிடி. உதை. கொல்லு.

அவர்கள் இவர்களைக் கொன்றார்கள். இவர்கள் அவர்களைக் கொன்றார்கள். ஆனந்த சுதந்தரம் அதன்பிறகு வந்து சேர்ந்தது.

*

1948ம் ஆண்டு மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்டதை அடுத்து ஆர்.எஸ்.எஸ் இயக்கம் இந்திய அரசால் தடை செய்யப்பட்டதுதான் அந்த இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட முதல் தடை என்று பொதுவில் சொல்லப்படுகிறது. உண்மையில் பஞ்சாப் முதல்வர் கிஸர் திவானா, முஸ்லிம் நேஷனல் கார்டைத் தடை செய்த அன்றே பஞ்சாபில் ஆர்.எஸ்.எஸ்ஸையும் தடை செய்து உத்தரவிட்டார்.

உத்தியோகபூர்வமான முதல் தடை அதுதான். ஆனால் ஒரு மாநில அளவில் விதிக்கப்பட்ட தடை என்பதால் பெரிதாக வெளியே தெரியாமல் போய்விட்டது.

https://telegram.me/aedahamlibrary

# 2. ஒரு மனிதர், ஒரே மனிதர்

நவீன இந்தியாவின் நல்லது கெட்டது அனைத்தும் மகாத்மா காந்தியிடமிருந்து தொடங்குகின்றன. அவரை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள், விமரிசிப்பவர்கள், முரண்படுபவர்கள், வழிபடுபவர்கள், வசைபாடுகிறவர்கள் என்றுதான் இந்தியாவில் பிரிவுகள் உண்டே தவிர, காந்தியைக் கடந்துபோகாமல் எந்த ஓர் இயக்கமும் உருவாகவில்லை. குறிப்பாக அரசியல், சமூகத் தளங்களில். ஹிந்துத்துவ இயக்கங்களும் விலக்கல்ல. எனவே, ஆர்.எஸ்.எஸ்ஸும்.

காந்தியின் முதன்மைச் சீடரான ஜவாஹர்லால் நேரு தன்னை ஒரு மதச்சார்பற்ற மனிதராக அறிவித்துக்கொண்டதுபோல காந்தி செய்ததில்லை. அவர், ஹே, ராம் என்று சொல்லிக்கொண்டு இறந்த ஓர் ஹிந்து. வழிபாடுகள், சடங்கு சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் எதிலும் சமரசமில்லாதவர். அவரது ஒழுக்கங்கள் அனைத்தும் மதத்திலிருந்து பெறப்பட்டவை. தமது சுய பரீட்சைகளால் அவர் தம் நியதிகளைப் பட்டை தீட்டி வைத்துக்கொண்டிருந்தார். இறுதிக்காலம் வரை பரீட்சைகளை நிறுத்தியதில்லை. மதம் என்பதை ஒரு நிறுவனமாக அல்லாமல் ஒழுக்கங்களின் தரவுத்தளமாக அவர் பார்த்தார். தனது கடவுளுக்கு சத்தியமென்று பெயரளித்து, ஒட்டுமொத்த மனித குலத்துக்கான பணியையே கடவுளின் பணியாக முன்னிறுத்தியது அவரது ஆன்மிகம். தென் ஆப்பிரிக்கா, இந்தியா என்று அவர் பணியாற்றிய களங்கள் எதுவானாலும் அணுகுமுறை ஒன்றுதான். அக்கறையும் அர்ப்பணிப்பும் ஒரே மாதிரியானவைதான். அவரது ஹிந்துத்துவம் உச்சரித்த ஒரே மந்திரம் அஹிம்சை. வாளாகவும் கேடயமாகவும் அந்த ஒன்றைத் தவிர, இறுதிவரை அவர் இன்னொன்றை நாடியதில்லை. அதற்கு அவருக்கு அவசியமும் இருக்கவில்லை.

காலம் எதைக் கோருகிறது என்பது அவருக்குப் புரிந்திருந்ததால்தான் இது சாத்தியமானது. அது புரியாமல், மதத்தை அதன் தன்னியல்பான புராதன வடிவத்தில் மட்டுமே அணுக முடிந்தவர்களால் காந்தியைப் புரிந்துகொள்ள முடியாமல் போனது. மதம் உள்பட எதுவுமே மனித குலத்தின் நலனுக்காகத்தான் என்பது காந்தியின் பார்வை. ஹிந்து

https://telegram.me/aedahamlibrary

அல்லது முஸ்லிம்  என்கிற அடையாளத்துக்குப் பிறகுதான் மற்ற எதுவும் என்பது அவரோடு முரண்பட்டவர்களின் பார்வை.

இந்த அடிப்படையைப் புரிந்துகொண்டபிறகு  ஆர்.எஸ்.எஸ்ஸின் தோற்றத்துக்கான அவசியத்தைப் புரிந்துகொள்ள முயல்வதே சரியாக இருக்கும்.

*

நாம் ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து இதைத் தொடங்கவேண்டும். 1920, 21, 22 மூன்று ஆண்டுக் காலம் பிரிட்டிஷ் அரசை சுத்தமாகச் செயல்படவிடாமல் அடித்த முயற்சி அது. தொடங்கிவைத்தவர் மகாத்மா காந்தி.

ஜாலியன் வாலாபாக் சம்பவம், ரவுலட் சட்டம் (எமர்ஜென்சி போன்ற ஒரு சட்டம். இதன்படி விசாரணையின்றி யாரையும் இரண்டாண்டுகள் வரை சிறையில் வைக்கலாம்) என்று பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறை மேலோங்கத் தொடங்கியிருந்த சமயம். வன்முறையின்மூலம் எதையும் சாதிக்க முடியாது என்று காந்தி மிகத் தீர்மானமாக நம்பினார். ஆனால் எதிர்த்தாகவேண்டும். கடுமையாக. அச்சம் கொள்ளத்தக்க வகையில். தனி நபரோ, ஓர் இயக்கமோ எதிர்ப்பது போதாது. தேசமே எதிர்க்கவேண்டும். அரசுக்கு எதிராக நடத்தப்படும் அந்தக் கிளர்ச்சி இயக்கம் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாக இருக்கவேண்டும் என்று அவர் கருதினார்.

விளைவு, ஒத்துழையாமை இயக்கம். இதன் தத்துவம் மிகவும் எளிதானது. நாங்கள் வன்முறையில் ஈடுபடமாட்டோம். கலவரத்தில் இறங்கமாட்டோம். காவல் துறைக்கு வேலை வைக்கமாட்டோம். ஆனால் அரசுக்கு அடிபணியப்போவதில்லை. இந்தியச் சந்தையில் பிரிட்டன் கொண்டு வந்து குவிக்கும் பொருள்களை இந்தியர்கள் யாரும் வாங்கமாட்டார்கள். சுதேசி இயக்கம் வலுப்பெறும். சொந்தமாக நூல் நூற்றுத் துணி தைத்து உடுத்திக்கொள்வோம். போதும். ஆடம்பரம் வேண்டாம். பகட்டு முக்கியமில்லை. ஆனால் நான் வாங்காததனால் உனக்கு ஏற்படப்போகிற நஷ்டம் சிறிதல்ல. நீ அலறுவாய். அலறவேண்டும். அஞ்சி நடுங்க வேண்டும். இனி இந்தியக் கடைகளில் பிரிட்டிஷ் பொருள்கள் இருக்காது. எல்லாம் சுதேசிச் சரக்குகள்.

ஓர் அரசின் பொருளாதார அடித்தளத்தையே அசைத்துப் பார்க்கிற முயற்சியாக அது இருந்தது. துணியில்தான் ஆரம்பித்தது. துணிந்து

https://telegram.me/aedahamlibrary

அத்தனை விதங்களிலும் அரசுக்கு அதிர்ச்சிதரத்தக்க அமைதி நடவடிக்கைகள் தொடர ஆரம்பித்தன.

ஒரு தேசமே போராடுகிறது என்று வெளியே தெரியாது. அமைதியாகவே இருப்பார்கள். எல்லாம் தன் இயல்புப்படியே இருக்கும். ஆனால் எதுவும் அரசுக்குச் சாதகமாக இருக்காது. மிகக் கடுமையான பொருளாதார இழப்புக்கு வித்திடக்கூடியதாக இருக்கும்.

காந்தியின் இந்தச் செயல்திட்டம், தொடங்கிய வினாடியில் இருந்து பலனளிக்கத் தொடங்கியது. தேசம் முழுதும் கேள்வி கேட்காமல் பின்பற்ற ஆரம்பித்தது. ஒரு மகத்தான நூதனப் புரட்சி என்று உலகமே வியக்கத் தொடங்கியது. இந்தியாவை ஆண்டுகொண்டிருந்த பிரிட்டிஷ் அரசு நெருக்கடி தாளாமல் திக்குமுக்காட ஆரம்பித்தது. அரசுப்பணியில் இருந்த அத்தனை இந்தியர்களும் வேலையிலிருந்து வெளியேறினார்கள். நீதிமன்றங்களில் வாதாட வழக்கறிஞர்கள் கிடைக்கவில்லை. தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டன. ஆட்சிப்பணியில் இருந்தவர்கள், ராணுவத்தில் இருந்தவர்கள், போக்குவரத்துத் துறையில் பணியாற்றியவர்கள், தபால் தந்தி போன்ற அத்தியாவசியச் சேவைகளில் இருந்தவர்கள் அத்தனை பேரும், அத்தனை பேரும் வேலைக்குப் போக மறுத்தார்கள். அரசு இயந்திரம் இயங்கமுடியாத நிலைக்கு வெகு வேகமாகச் சென்றுகொண்டிருந்தது.

காந்தி அமைதியாக இருந்தார். அனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்தார். அவரது வேண்டுகோ ள் ஒன்றே ஒன்றுதான். இதற்குப் பெயர் சத்தியாகிரகம். அமைதியான முறையில் மட்டுமே செய்யப்படவேண்டியது. நாம் எதிர்க்கிறோம் என்பது அரசுக்குத் தெரியவேண்டியதுதான் முக்கியம். எதிர்ப்பு எந்தக் கட்டத்திலும் வன்முறையாகிவிடக்கூடாது. அவ்வளவுதான்.

லட்சக்கணக்கான மக்களுக்கு அவரைப் புரிந்தது. மனமாரப் பின்பற்றினார்கள். கேள்வி கேட்காமல் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார்கள். சில தலைவர்களுக்கு இதில் உடன்பாடில்லை. என்ன இது போராட்டம் சவசவவென்று? இது என்ன பலனைத் தரப்போகிறது? வேலைக்குப் போகாத மக்கள் நாளை வீட்டில் அடுப்பெரிய வழியில்லாது போனால் என்ன செய்வார்கள்? சத்தியாகிரகத்தைப் பாதியில் விட்டுவிட்டுப் போய்விடமாட்டார்களா? என்ன அபத்தம் இது? இதிலென்ன நூதனம் இருக்கிறது? சுத்த பைத்தியக்காரத்தனம்.

திலகருக்குப் பிடிக்கவில்லை. முஹம்மதலி ஜின்னாவுக்குப்

https://telegram.me/aedahamlibrary

பிடிக்கவில்லை. அன்னி பெசண்ட், பிபின் சந்திர பால் என்று வேறு பலருக்கும் பிடிக்கவில்லை. முஸ்லிம் லீக், காந்தியின் இந்த ஒத்துழையாமை இயக்கத்தை வலுவாகக் கண்டித்துப் பேசியது.

காந்தி கோபப்படவில்லை. அவர்களை நிராகரிக்கவும் இல்லை. அவர் அமைதியாகவே இருந்தார். அவரை இளைய தலைமுறையினரால் புரிந்துகொள்ள முடிந்தது. அவர்கள் பெரும்பான்மை மக்களாக இருந்தார்கள். ஹிந்துக்களாகவும் முஸ்லிம்களாகவும் பார்சிகளாகவும் கிறிஸ்தவர்களாகவும் இருந்தாலும், காந்தியின் வழியைப் பின்பற்றத் தயாராக இருந்தார்கள். நேருவும் படேலும் அவரைத் தீவிரமாக ஆதரித்தபடியால், காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தைக் கடைக்கோடி வரை கொண்டுபோய்ச் சேர்த்தது.

முஸ்லிம் தலைவர்களிலும் மௌலானா அபுல் கலாம் ஆசாத், முஹம்மதலி-சவுக்கத்தலி சகோதரர்கள், அப்பாஸ் தியாப்ஜி போன்றவர்கள் காந்தியின் பக்கம் நின்றார்கள்.

1919ம் ஆண்டு மகாத்மா காந்தி, காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மிதவாத எண்ணம் கொண்டவர்கள் அவர் பக்கமும், தீவிரப்போக்கில் நாட்டம் கொண்ட வர்கள் எதிர்ப்பக்கமுமாக இரு கட்சிகள் இயக்கத்துக்குள் உருவாகியிருந்தது வெளிப்படை யாகத் தெரிந்தது. ஆனால் எதிர்ப்பவர்களும் புரிந்துகொண்டாக வேண்டிய அவசியத்தை அவருடைய ஒத்துழையாமை இயக்கத்தின் வெற்றி உறுதிப்படுத்திக்கொண்டிருந்தது.

1922வரை நிலைமை இப்படித்தான். அந்த வருடம் பிப்ரவரி 4ம் தேதி ஒரு சம்பவம் நடந்தது. உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூருக்கு அருகே சௌரிசௌரா என்றொரு சிறு நகரம். அங்கு அன்று சுமார் இரண்டாயிரம் பேர் திரண்டு ஊர்வலம் போய்க்கொண்டிருந்தார்கள். ஒரு சாராயக்கடை மறியல் போராட்டம் அது. தடுக்க வந்த போலீசாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுவிட்டது. ஒரு கணம். கூட்டம் கட்டுப்பாட்டை இழந்துபோனது.

சத்தியாகிரகத்தின் அடிப்படை அஹிம்சை என்று காந்தி சொல்லியிருந்தார். எக்காரணம் கொண்டும் வன்முறையில் ஈடுபடக்கூடாது என்பது அவரது தீர்மானமான உத்தரவு. சௌரிசௌராவில் அன்றைக்கு அந்த உத்தரவை மக்கள் மறந்துபோனார்கள்.

விளைவு, இருபத்திரண்டு போலீசார் கலவரத்தில் தாக்கப்பட்டு

https://telegram.me/aedahamlibrary

இறந்துபோனார்கள். காவல் நிலையம் தீவைக்கப்பட்டது. ஊரடங்கு உத்தரவு, அவசர நிலைப் பிரகடனம், வீடு வீடாகப் பரிசோதனை என்று பிராந்தியமே அதகளமானது.

அதுதான் தொடக்கம். இல்லை. அதுதான் முடிவு. சட்டென்று காந்தி சொன்னார். ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிடுகிறேன்.

அதிர்ந்துவிட்டது காங்கிரஸ். அதிர்ந்துவிட்டார்கள் இந்திய மக்கள். ஒட்டுமொத்த தேசத்தில் ஒரே ஓரிடத்தில் ஏற்பட்ட ஒரு சிறு பிழை. அதற்காக, ஒரு மாபெரும் வெற்றிப்போராட்டத்தையே கைவிடுவதா?

ஆம். சந்தேகமில்லை. அதுதான் சரி என்று காந்தி சொன்னார். அவரது சத்தியாகிரகத்தின் அடிப்படையே அஹிம்சைதான் என்னும்போது அதைக் கேள்விக்குள்ளாக்கக்கூடிய சம்பவம் ஒன்று நடந்தால் என்ன? ஓராயிரம் நடந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்.

ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிடுவதாக காந்தி அறிவித்தது இருவேறு விதமான உணர்ச்சி அலைகளை தேசமெங்கும் உருவாகியது. முதலாவது, அவரது அறப்போராட்டத்தின் நேர்மை குறித்த சரியான புரிதல். இது பெரும்பான்மை மக்களிடம் ஏற்பட்டது. 1947வரை அவரது பாதையில் சற்றும் வழுவாமல் பின் தொடர்வதற்கான ஆத்மிக உந்துதலை அதுவே அவர்களுக்குத் தந்தது.

அடுத்தது, காந்தியின் அரசியலை சராசரிகளின் அரசியல் தளத்தில் வைத்துப் பார்த்து எடைபோட்டு, அவரை நம்புவதில் அர்த்தமில்லை என்று ஒருசாரார் முடிவு செய்தது.

ஏற்கெனவே காங்கிரசில் இருந்த தீவிரவாதப் பிரிவினர், காந்தியின் நடவடிக்கைகளில் அதிருப்தியுற்று இருந்தார்கள். ஒத்துழையாமை இயக்கத்தை அவர் திரும்பப் பெறுவதாக அறிவித்தது, அவரது தலைமையிலான காங்கிரஸ் மீதே சிலர் நம்பிக்கை இழந்து தனிப்பாதையில் செல்ல முடிவெடுக்கக் காரணமானது.

*

ஹிந்துத்துவ உணர்வாளர்கள் காந்தியைத் தவிர்க்க நினைத்ததன் மிக முக்கிய அடிப்படை, அவர் முஸ்லிம்கள்மீது அபரிமிதமான அன்பும் அனுதாபமும் கொண்டிருந்ததுதான். அதை ஹிந்துக்கள் மீதான ஓரவஞ்சனை என்று புரிந்துகொள்ளவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். முஸ்லிம் லீகின் பிரிவினைவாதப் பேச்சைக் காட்டிலும்

https://telegram.me/aedahamlibrary

ஜின்னாவைத் தீவிரமாக காந்தி கண்டிக்கவில்லை, ஒதுக்கிவைக்கவில்லை என்பதை அவர்கள் அபாயகரமானதாகப் பார்த்தார்கள்.

தேசமே அவர்பின்னால் திரண்டு நின்றதை ஒத்துழையாமை இயக்கத்தின் வெற்றி அவர்களுக்கு நிரூபித்திருந்தது. இந்நிலையில் காந்தியின் முஸ்லிம் ஆதரவு நிலைபாடு என்பது ஒவ்வொரு கட்டத்திலும் ஹிந்துக்களுக்கு எதிராக அவர்களைக் கொம்பு சீவிவிடுவதாகவே அமையும் என்று அவர்கள் கருதினார்கள்.காங்கிரசில், திலகருடன் வெகு நெருக்கமாகப் பழகி வந்தவரும் மிகத் தீவிரமான ஹிந்துத்துவவாதியும் நாத்திகருமான வினாயக் தாமோதர் சாவர்க்கர், 1922ம் ஆண்டு காந்தி தனது ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்றதுமே ஹிந்து மகா சபையில் சென்று இணைந்துகொண்டார்.

1915 முதல் இயங்கிவந்த இயக்கம் அது. காங்கிரசின் மதச்சார்பின்மைக் கொள்கையின்மீது நம்பிக்கை இல்லாத, முஸ்லிம் லீகின் பிரிவினைவாத கோரிக்கையைக் கடுமையாக எதிர்க்கக்கூடிய ஹிந்துக்களுக்கான இயக்கம் என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டுத் தொடங்கப்பட்ட இயக்கம்.

நாக்பூரில் அப்போது திலகர் வழி காங்கிரஸ்காரர்களுடன் இணைந்து தீவிரமாகச் சமூகப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர் டாக்டர் ஹெட்கேவார். 1920ல் நாக்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தன்னார்வத் தொண்டர்கள் பிரிவின் துணைத்தலைவராக சுழன்று சுழன்று பணியாற்றியவர். ஒத்துழையாமை இயக்கத்துக்குப் பிறகு அவர் தனக்கெனத் தேர்ந்தெடுத்த பாதைதான் ஆர்.எஸ்.எஸ் என்கிற ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்.

ஒரு விஷயம். 1920 நாக்பூர் காங்கிரஸில், அந்தத் தன்னார்வப் பணியாளர் பிரிவுக்கு வழங்கப்பட்ட பெயர் பாரதீய ஸ்வயம் சேவக் மண்டல். மாநாடு நடைபெறும் தினங்கள் முழுதும் அவர்கள் போலீஸ்காரர்கள் மாதிரி காக்கி உடுப்பு அணிந்து இருக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருந்தது.

1925ம் ஆண்டு விஜயதசமி நாளன்று ஹெட்கேவார் தனது இயக்கத்தைத் தொடங்கியபோது அதற்கு இட்ட பெயர் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங். அதன் சீருடை, அதே காக்கி அரை நிஜார் என்றும் சொல்லப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

# 3. உடலும் உள்ளமும்

ஹிந்து தேசியம்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் சித்தாந்தம், செயல்பாடுகள், எண்பத்தி ஐந்து ஆண்டு கால இருப்பின் பொருள் அனைத்தையும் சுருக்கிச் சொல்லுவதென்றால் இதுதான். மிகத் தெளிவாக, மதத்தை முன்வைத்த ஓர் அரசியல் பாதையைத் தனதாக்கிக்கொண்ட இயக்கம்.

1925, செப்டெம்பர் 27ம் தேதி, நாக்பூரில் உள்ள டாக்டர் ஹெட்கேவாரின் வீட்டில் மிகச் சிறிய, எளிமையான, ஆனால் உறுதியான ஓர் அறிவிப்புடன் ஆர்.எஸ்.எஸ். தொடங்கப்பட்டது. ‘இன்று நம் சங்கத்தைத் தொடங்குகிறோம். உடலளவில், அறிவுத்தளத்தில், இன்னும் சாத்தியமுள்ள, அவசியமான அனைத்து வகையிலும் நம்மைத் தயாரித்துக்கொள்வோம். இலக்கை அடைவது முக்கியம்.’

ஓர் அச்சம் இருந்தது. அச்சம்தான். வேறு சொல்லில் அதைக் குறிப்பிட இயலாது. ஹிந்துக்களின் போர்க்குணம், காந்தியத் தாக்கத்தால் முற்றிலுமாக நிர்மூலமாகிவிடுமோ என்கிற அச்சம். அந்தப் போர்க்குணம் அவசியம் என்று டாக்டர் ஹெட்கேவார் நினைத்தார். அவரது நண்பர்களும் அப்படியே நினைத்தார்கள். ஒரு பொது எதிரியாக அவர்கள் முஸ்லிம்களைப் பார்த்தார்கள். பிரிவினை கோரும் முஸ்லிம் லீகைக் கடுமையாக வெறுத்தார்கள். ஒரு பிரச்னை என்று வந்தால் ஹிந்துக்கள் ஓடி ஒளியாமல் எதிர்த்து நிற்க உடலுறுதி மிக்கவர்களாக, மனத்திண்மை கொண்டவர்களாக இருக்கவேண்டியது அவசியம் என்று கருதினார்கள்.

அடித்தட்டு மக்களிடையே ஒரு சாராரிடம் அந்தப் போர்க்குணம் இருந்தது. ஆனால் அது ஒருங்கிணைக்கப்பட்டதில்லை அதுவரை. தங்களை ஹிந்துக்கள் என்று கருதி, அதன்பொருட்டு ஒன்றுசேர அவர்களுக்குத் தெரியவில்லை அல்லது யாரும் சொல்லித் தரவில்லை. படித்த ஹிந்துக்கள், உடனடியாக காந்தியால் ஈர்க்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இந்நிலையில், ஒரு வீரம் மிக்க ஹிந்து சமுதாயத்தைத் தட்டி எழுப்புவது அல்லது அப்படியொன்றைக்

https://telegram.me/aedahamlibrary

கட்டி உருவாக்குவது காலத்தின் தேவை என்று டாக்டர் ஹெட்கேவார் கருதினார்.

கேசவ பலிராம் ஹெட்கேவார், மகாராஷ்டிர  மாநிலத்தில், ஆந்திரபிரதேச எல்லையில் உள்ள குந்தாகுர்த்தி என்னும் கிராமத்தில் பிராமண குடும்பத்தில் பிறந்தவர். அடிப்படைப் பள்ளிப் படிப்புக்குப் பிறகு மருத்துவம் படிப்பதற்காகக் கல்கத்தாவுக்குச் சென்றார். அங்கே அவருக்குச் சில புரட்சிகர இயக்கங்களுடன் தொடர்பு ஏற்பட்டது. அனுஷிலான் சமிதி, ஜுகாந்தார் போன்ற அமைப்புகளின் உறுப்பினர்களுடன் பழக ஆரம்பித்து, அவர்கள்மூலம் ஆயுதப் போராட்டம் ஒன்றே தேசத்தை விடுதலை பெறச்செய்ய வழி என்னும் கருத்துக்கு வந்து சேர்ந்தார். கொஞ்சகாலம் அங்கே சில ஆயுதப்பயிற்சிகளிலும் அவர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் ஹெட்கேவாருக்கு பகத் சிங் பாணிப் போராட்டத்தில் நம்பிக்கை இருக்கவில்லை. ஒருங்கிணைக்கப்பட்ட, நீடித்த நோக்கில் பலன் தரக்கூடிய, உறுதியான செயல்பாடுகளின்மூலமே இலக்கை அடையமுடியும் என்று பல சமயம் அவர் தம் நண்பர்களிடம் சொல்லியிருக்கிறார். அவர் திலகரைக் கண்டடைந்தது இதன் தொடர்ச்சியே. ஓர் ஹிந்து தேசியவாதியாகத் தன்னால் உணர முடிந்த அடையாளத்தை, முழு தேசத்து மக்களும் உணராதிருப்பதே அனைத்துப் பிரச்னைகளுக்கும் அடிப்படை என்று அவர் நினைத்தார். இதனாலேயே சாவர்க்கரின் ‘ஹிந்து ராஷ்ட்ரா’ சித்தாந்தமும் அவரைக் கவர்ந்தது.

யார் ஹிந்து? அது வெறும் மத அடையாளமல்ல. நிச்சயமாக அல்ல. ஹிந்து மதத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். பவுத்தராக இருக்கலாம். ஜைனராகவோ, சீக்கியராகவோ இருக்கலாம். இந்த மண்ணில் வேர் கொண்ட, இந்த மண்ணைத் தனதாக நினைக்கக்கூடிய அனைவரும் ஹிந்துதான். இந்த மண்ணின் புனிதத் தலங்களின்மீது மதிப்புக் கொண்ட அனைவரும் ஹிந்துக்கள். இந்த தேசத்தின் ஒருமைப்பாட்டை விரும்புகிற யாரும் ஹிந்துக்கள்.

அதனாலேயே முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் இம்மண்ணைச் சார்ந்தவர்களாக ஏற்க இயலாது. அவர்களது வேர்கள் மெக்காவிலும் மதினாவிலும் ஜெருசலேமிலும் இருக்கின்றன. இந்த மண்ணைச் சேர்ந்தவர்கள் என்றால் பிரித்துப் பார்ப்பார்களா? பிரிவினை பேசுவார்களா? பேசுகிறார்களே? இதிலிருந்தே புரியவில்லை?

சாவர்க்கர் பிரமாதமாகப் பேசுவார். உணர்ச்சி பொங்கப்பேசுவார்.

https://telegram.me/aedahamlibrary

பேச்சிலும் எழுத்திலும் எப்போதும் அனலடிக்கும்படி பார்த்துக்கொள்வது அவர் வழக்கம். சர்ச்சை அவரது அடிப்படை நோக்கமல்ல. மாறாக, ஹிந்துக்கள் அடையாளம் இழந்து போய்விடக்கூடாது என்ற பதற்றம் அவரிடம் இருந்தது. இறுதிவரை இருந்தது. அதன் வெளிப்பாடுகளாகத்தான் அவரது பேச்சும் எழுத்தும் இருந்தன.

ஹெட்கேவாரைச் சாவர்க்கர் கவர்ந்தது வியப்பல்ல. சரியாகத் திட்டமிட்டு உழைத்தால் ஹிந்து தேசியம் என்னும் இலக்கை அடைவது சிரமமல்ல என்று அவர் கருதினார். உடல் உறுதிக்கான பயிற்சிகளையும் பாரம்பரிய விளையாட்டுகளையும் சித்தாந்த வகுப்புகளையும் தேசபக்திச் சொற்பொழிவுகளையும் கலந்து ஒருமணி நேர வகுப்புக்கான பாடமாக உருமாற்றிய அவரது செயல் இதன் தொடர்ச்சியே.

இது அர்த்தமில்லாத செயல்பாடல்ல. வெகு நிச்சயமாக, மிகத் தெளிவான குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

‘ஷாகா’ என்ற பதத்தின் பொருள் தெரியாதவர்களுக்குக் கூட அந்தப் பெயர் பரிச்சயமாக இருக்கும். ஆர்.எஸ்.எஸ். என்றதுமே நினைவுக்கு வரக்கூடிய அவர்களது பயிற்சி வகுப்புக்கான அடையாளச்சொல் என்று சட்டென்று பதில் வரும். உண்மையில் ஷாகா என்றால் கிளை என்ற எளிய பொருள்தான்.

நாக்பூரில், தன் வீட்டில் மிகக்குறைந்த அளவு சிறுவர்களைக் கொண்டு தொடங்கப்பட்டபோதே டாக்டர் ஹெட்கேவார், அப்பயிற்சி வகுப்புக்கு ஷாகா என்றுதான் பெயரிட்டார். பக்கத்தில் இருந்த மைதானத்தில் கபடி, கோகோ போன்ற பாரம்பரிய இந்திய விளையாட்டுகளை விளையாடச் சொல்லுவது.உடற்பயிற்சிகள் செய்வது. வியர்த்துக் களைத்திருந்தாலும் உள்ளுக்குள் புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கும் அத்தருணத்தில் ஹெட்கேவார் மெல்லிய குரலில் இதமாகத் தனது சித்தாந்தப் பிரசங்கத்தைத் தொடங்குவார்.

நமது அனைத்துப் பிரச்னைகளுக்கும் மூலகாரணம் என்னவென்று யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா? அடிமைப்பட்டிருக்கிறோம். ஒடுக்குகிறார்கள். சுயமரியாதையின்றி வாழப் பணிக்கப்பட்டிருக்கிறோம். நமது பாரம்பரியம், பண்பாடு, கலாசாரப் பெருமைகளை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அது தெரிந்தால் இப்படி அடிமைப்பட்டிருப்பது பற்றிய குற்ற உணர்ச்சி உங்களுக்கு வரும். குற்ற உணர்வு சிந்திக்க வைக்கும். சிந்தனை

https://telegram.me/aedahamlibrary

தெளிவடையும்போது, செயல்வேகம் பிறக்கும். காலம் காலமாக அன்னியர்கள் நம்மைச் சுரண்டிக்கொண்டிருப்பதை நிறுத்துவதற்கு வழி தேடச் சொல்லும். எங்கு பார்த்தாலும் பிராந்தியவாதம். எங்கு பார்த்தாலும் சாதிய அடக்குமுறைகள். சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள். ஹிந்துக்களாகிய நாம், நம்மை நம் இயல்பான அடையாளத்தில் ஏன் உணரத் தவறுகிறோம்? மதச்சார்பற்ற அரசியல் பேசுகிறது காங்கிரஸ். யாருக்கு? ஹிந்துக்களுக்கு மட்டும். நம் தேசத்தில் இருக்கிற முஸ்லிம்கள் மதம் சாராதிருக்கிறார்களா? பிரிவினை பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாட்டைத் துண்டாடத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது நாம் விழித்துக்கொள்ளாவிட்டால் மீளாத் துயிலில் ஆழ்ந்துவிடுவதைத் தவிர வேறு போக்கிடமின்றிப் போய்விடும்.

ஹெட்கேவார் தமது இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு ஸ்வயம்சேவக் என்ற பெயரளித்தார். எதையும், யாரையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்காதே. நமக்கு வேண்டியதை நாம்தான் போராடிப் பெற்றாக வேண்டும். நமக்குச் சேவை செய்ய வேறு யாரும் வரப்போவதில்லை. நாமே செய்துகொண்டால்தான் உண்டு. நாம் என்றால் ஹிந்து சகோதரர்கள். ஹிந்து என்கிற உணர்வுள்ளவர்கள். போலி மதச்சார்பின்மை பேசிக்கொண்டிருப்பவர்கள் இதில் சேர்த்தியில்லை.

ஒரு மணி நேரம்தான் ஒரு நாளைக்கு. உடற்பயிற்சிகள், விளையாட்டு, சிறு சொற்பொழிவு, தேசபக்திப் பாடல் என்று ஒரு கதம்பமாக நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டிருக்கும். சிறுவர்கள் முதல் இளைஞர்கள்வரை பல்வேறு வயதுக்காரர்கள் வருவார்கள். யாருக்கும் எந்த நிர்ப்பந்தமும் இல்லை. இஷ்டப்பட்டவர்கள் வரலாம். கலந்துகொள்ளலாம். பிடித்திருந்தால் திரும்ப வரலாம். அடிக்கடி வரலாம். தொடர்ந்து வந்தால் ஆர்.எஸ்.எஸ்ஸின் உறுப்பினராக அடையாளம் பெறலாம்.

ஹெட்கேவாருக்கு ஷாகாக்களை தேசமெங்கும் உருவாக்கும் எண்ணம் இருந்தது. அதுதான். அது ஒன்றுதான் இயக்கத்தைப் பரவ வழி செய்யும்.

எனவே, வந்துகொண்டிருந்த ஸ்வயம்சேவக்குகளில் அதிக ஆர்வம் காட்டிய சிலரைத் தனியே தேர்ந்தெடுத்தார். அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியளித்தார். பிரசாரக்குகள் என்று பெயர் கொடுத்தார். இயக்கத்துக்காகத் தம் முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தவர்கள் அவர்கள். திருமணம் செய்துகொள்ளவில்லை. குடும்பம் நடத்தவெனத் தனக்கொரு உத்தியோகம் வேண்டும் என்று எண்ணாதவர்கள். இது

https://telegram.me/aedahamlibrary

தேசப்பணி. மிகப்பெரிய சமூகப்பணி. இதைவிட முக்கியம் வேறெதுவுமில்லை. ஹெட்கேவார் சொல்லிக்கொடுத்ததைச் சற்றும் மாற்றாமல் பின்பற்றக்கூடியவர்கள்.

அவர்கள்மூலம் ஷாகாக்களை நாக்பூருக்கு வெளியே பரப்ப ஆரம்பித்தார் டாக்டர்.

*

பத்து வருடங்களுக்குள் ஆர்.எஸ்.எஸ். வட இந்தியாவில் பெற்ற செல்வாக்கு மிக அதிகம். மிக முக்கியக் காரணம், ஹிந்து மதத்தின் அனைத்துப் பிரிவுகளுக்குள்ளும் தவறாமல் கடைப்பிடிக்கப்படும் சாதிய ஏற்றத்தாழ்வுகளை ஆர்.எஸ்.எஸ். முற்றிலுமாக ஒதுக்கிவைத்தது. பிராமணர்கள் வந்தார்கள். க்ஷத்திரியர்கள் வந்தார்கள். வைசியர்கள் வந்தார்கள். சூத்திரர்கள் என்று மற்றவர்களால் ஒதுக்கிவைக்கப்பட்டவர்களும் தலித்துகளும் ஆதிவாசி மக்களும் ஷாகாக்களுக்கு வரலாம் என்று சொல்லப்பட்டது.

இன்னும் ஒரு படி மேலே சென்று, அவர்கள் வரும்வரை காத்திராமல், அவர்கள் இடத்துக்கே சென்று ஷாகாக்களை நடத்தவும் ஆர்.எஸ்.எஸ். தயங்கவில்லை. ‘ஹிந்து’ என்கிற ஓர் அடையாளம் நமக்குப் போதும். அத்தனை பிரச்னைகளுக்கும் அடிப்படைக் காரணமான சாதிய ஏற்றத்தாழ்வுகளை ஒழித்துக்கட்டி, இந்த ஓர் அடையாளத்தில் ஒன்று சேர்வோம் என்று பிரசாரக்குகள் முழங்கினார்கள்.

இதற்கு மிக நல்ல பலன் இருந்தது. 1939ம் ஆண்டு ஐந்நூறு ஷாகாக்களில் சுமார் நாற்பதாயிரம் உறுப்பினர்கள் சேர்ந்திருந்தார்கள். அடுத்த நான்கு ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை எழுபத்தி ஐயாயிரத்தைத் தாண்டியது.

1940ம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில், பாகிஸ்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, தேசமெங்கும் ஹிந்துக்கள் - முஸ்லிம்கள் கிட்டத்தட்ட சம அளவில், அல்லது ஹிந்துக்கள் சற்றே குறைந்த எண்ணிக்கையில் வசிக்கும் பகுதிகளில் எல்லாம் ஆர்.எஸ்.எஸ்ஸில் சேர்வதற்கு ஹிந்துக்கள் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கினார்கள். எந்தக் கணமும் இரு தரப்பினர் இடையே பதற்றம் பரவலாம் என்று எங்கெங்கு சொல்லப்பட்டதோ, அங்கெல்லாம் ஹிந்துக்கள் ஆர்.எஸ்.எஸ்ஸைத் தஞ்சமடைய ஆரம்பித்தார்கள்.

https://telegram.me/aedahamlibrary

ஒரு நம்பிக்கை உருவாக ஆரம்பித்திருந்தது. தேச பக்தர்கள். காங்கிரஸ்காரர்களாக இருந்தால்தான் தேசபக்தி வருமென்பதில்லை. சுதந்தரப் போராட்டத்தின் ஒரே பிரதிநிதியாகக் காங்கிரஸைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அவரவர் நம்பிக்கைகள், அவரவர் வழிமுறைகள். ஆனால் இலக்கு ஒன்று. நாளைக்கு முஸ்லிம்களால் ஒரு பிரச்னை என்று வந்தால் காங்கிரஸ்காரர்கள் தடியோடு வந்து காவலிருக்கப்போவதில்லை. காந்தி உண்ணாவிரதம் இருப்பார். அதுகூட முஸ்லிம்கள் தாக்கப்பட்ட பிறகு நடக்கும். நமக்கு என்று யார் இருக்கிறார்கள்?

டாக்டர் ஹெட்கேவார், மிகக் கவனமாகச் சில காரியங்கள் செய்திருந்தார். தொடக்கம் முதலே. 1930ம் ஆண்டு காங்கிரஸ் பூரண சுயராஜ்ஜியம் ஒன்றே லட்சியம் என்று தீர்மானம் செய்து அறிவித்தபோது, உடனடியாக அனைத்து ஷாகாக்களிலும் ஜனவரி 26ம் தேதியை சுதந்தர தினமாகக் கொண்டாடச் சொல்லி அவர் உத்தரவிட்டார். தவிரவும் சில ஸ்வயம்சேவகர்களுடன் சத்தியாகிரகத்திலும் ஈடுபட்டு சிறை சென்றார்.

இது காங்கிரஸ் அனுதாபிகளாக இருந்தவர்களுக்கும் பிடித்தது. ஆர்.எஸ்.எஸ். தெளிவாகச் சொன்னது. நீங்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக வேண்டுமானாலும் இருங்கள். அது ஒரு பொருட்டல்ல. இது ஓர் அரசியல் கட்சியல்ல. சமூக இயக்கம். உங்கள் கட்சி அடையாளம் இங்கு முக்கியமல்ல. நீங்கள் தேர்தல் பிரசாரங்களுக்குப் போகிறீர்களா? பொருட்டல்ல. ஏதாவது ஒரு கட்சி சார்ந்து தேர்தலில் நிற்கிறீர்களா? பிரச்னையில்லை. கட்சி அரசியலுடன் நமக்குச் சம்பந்தமில்லை.

1930-40 காலக்கட்டங்களில் மிக உறுதியாக, நிதானமாக, வலுவாக ஆர்.எஸ்.எஸ். வட இந்தியா முழுதும் பரவ ஆரம்பித்தது. சந்தேகமில்லாமல் ஹிந்துக்களுக்கான இறுதிப் புகலிடமாக அடையாளம் காணப்பட்டது. ஹிந்து மகாசபை, ஆரிய சமாஜம் போன்ற அமைப்புகளும் வலுவாக வேரூன்றியிருந்தபோதிலும் ஆர்.எஸ்.எஸ்ஸின் ஷாகா போன்ற ஓர் ஏற்பாடு அவர்களிடம் இல்லாதது, இயக்கப் பரவலுக்கு வழி செய்யாது போய்விட்டது.

இடையே நடந்த இரண்டு முக்கியச் சம்பவங்கள் ஆர்.எஸ்.எஸ்ஸின் இடத்தையும் இருப்பையும் இன்னும் அழுத்தம் திருத்தமாக ஹிந்துக்கள் மத்தியில் உறுதி செய்யக்கூடியனவாக அமைந்ததையும் குறிப்பிட வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

முதலாவது, 1932ம் ஆண்டு டிசம்பரில் மத்திய அரசு ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அரசுப் பணியில் இருப்பவர்கள் ஆர்.எஸ்.எஸ்ஸில் உறுப்பினராக இருக்கக்கூடாது.

ஒரு மதவாத அமைப்பு. வெகு நிச்சயமாக இது மக்கள் மத்தியில் பிரிவினை எண்ணங்களை ஆழமாக விதைப்பதற்காகவே செயல்படுகிறது. எனவே அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்களாவதை அனுமதிக்க முடியாது என்றது சட்டம்.

இரண்டு ஆண்டுகளில் அந்தச் சட்டம், அவையிலேயே தோற்கடிக்கப்பட்டது. ஆர்.எஸ்.எஸ். ஒரு சமூக இயக்கம். அரசியல் தொடர்பில்லாதது. சாதி வித்தியாசம் பாராமல் ஹிந்துக்கள் மத்தியில் நல்ல காரியங்கள் செய்து வருகிற இயக்கம். இதென்ன அபத்தமான சட்டம்? அரசு ஊழியராக உள்ள ஓர் ஹிந்து ஆர்.எஸ்.எஸ். அனுதாபியாகவோ உறுப்பினராகவோ இருப்பதில் அரசுக்கு என்ன கேடு?

பெருவாரி உறுப்பினர்களின் கருத்துக்கு மதிப்பளித்து அரசாங்கம் அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றது, ஆர்.எஸ்.எஸ்ஸின் செல்வாக்கு வளர ஒரு காரணமாயிற்று.

இன்னொரு காரணம், 1934ம் ஆண்டு வார்தாவில் தொடங்கியிருந்த ஆர்.எஸ்.எஸ்ஸின் குளிர்கால முகாமுக்கு மகாத்மா காந்தி வருகை தந்ததும் ஒரு வரி வாழ்த்தியதும். மிக நிச்சயமாக அது அவர்களுக்குப் பெரிய அளவில் உதவியதை மறுக்க முடியாது.

இதுதான் காரணம் என்று சொல்ல முடியாது போனாலும் 1936ல் 'ராஷ்ட்ர சேவிகா சமிதி' என்னும் பெண்கள் பிரிவு உருவாவதற்கும் பல ஹிந்துப் பெண்கள் ஆர்வமுடன் முன்வந்து ஆர்.எஸ்.எஸ்ஸில் இணைவதற்கும் இது ஒரு தூண்டுகோலாகவாவது இருந்திருக்கவேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

# 4. தடைக்கல்

சரியாக அறுபத்தி இரண்டு வருடங்களுக்கு முன்பு மகாத்மா காந்தி படுகொலையில் பங்கு பெற்ற கொலையாளிகளிடம் விசாரணை நடந்துகொண்டிருந்தபோது, அவர்களுள் ஒருவன் நீதிமன்றத்தில் மிக வெளிப்படையாக, உண்மையை மறைக்கும் எந்த உத்தேசமும் இன்றிப் பேசினான். அவன் பெயர் திகம்பர் ராமச்சந்திர பாட்ஜே.(அப்ரூவர்)

'நாங்கள் (நாதுராம் வினாயக் கோட்சே மற்றும் நாராயண் ஆப்தே உள்ளிட்ட கொலையாளிகள் குழு) ஜனவரி 17ம் தேதி சாவர்க்கரின் வீட்டுக்குப் போனோம். வெற்றியோடு திரும்புங்கள் என்று வாழ்த்தி விடை கொடுத்தார். திரும்பி வரும்போது ஆப்தே மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டு வந்தான். காந்தியின் காலம் முடிகிறது; இந்த முயற்சி வெற்றிகரமாக நடந்தேறும் என்று சாவர்க்கர் நினைக்கிறார் என்று சொன்னான்.'

காந்தி படுகொலைச் சதியில் சாவர்க்கருக்கு உறுதியான பங்கு இருந்ததாக விசாரணை அதிகாரியும் பம்பாய் காவல் துறை உதவி கமிஷனருமான  ஜாம்ஷிட் டி. நகர்வாலா அடித்துச் சொன்னார். அதை நிரூபிக்க இயலாமல் போனது. திகம்பர பாட்ஜேவின் வாக்குமூலம்கூட, சாவர்க்கரின் 'வாழ்த்து'களைச் சொன்னதே தவிர, திட்டத்தில் அவருடைய நேரடிப் பங்களிப்புக்கு சாட்சியமாக உருப்பெறவில்லை. நீதிமன்ற நடவடிக்கைகளின்போது சாவர்க்கர் பேசிய சில விஷயங்களேகூட அவருக்கும் காந்தி கொலை தொடர்பான உண்மைகளுக்குமான உறவைச் சொல்லக்கூடியதாகத்தான் இருந்தன. இது அப்போது தெரிய வாய்ப்பில்லாது போனது. பிறகு தெரிந்தது. நீதி, சாட்சியங்களால் மட்டுமே வாழ்வது.

ஓர் உதாரணம் காட்டினால் இது எளிதில் புரிந்துவிடும். 'கோட்சேவும் நாராயண் ஆப்தேவும் நாகரிலும் பூனாவிலும் இந்து மகாசபைக்காக ஊழியம் செய்துகொண்டிருப்பதாகச் சொல்லி என்னிடம் வந்து அறிமுகப்படுத்திக்கொண்டார்கள்' என்று சாவர்க்கர் சொன்னார். படுகொலைச் சம்பவத்துக்கு முன்னர் சந்தித்ததை மறுக்க முடியாத காரணத்தால், முன்னறிமுகமே இல்லாதவர்கள் போன்றதொரு

https://telegram.me/aedahamlibrary

தொனியில் இருந்தது அந்த வாக்குமூலம்.

பிறகு விசாரணைகள் முடிந்தன. குற்றவாளிகள் தூக்கிலிடப்பட்டார்கள். ஆதாரங்கள் போதாத காரணத்தால் சாவர்க்கர் விடுவிக்கப்பட்டார். அவரும் பிறகு காலமானார் (பிப்ரவரி 26, 1966). ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு பதினெட்டு ஆண்டுகள் சிறையில் இருந்துவிட்டுத் திரும்பிய கோட்சேவின் தம்பி கோபால் கோட்சே அதன்பின் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார். காந்தி படுகொலையும் நானும் என்பது அதன் பெயர்.

அந்தப் புத்தகம் பல உண்மைகளை உரக்கவே பேசியது. 1937ம் ஆண்டு முதல் சாவர்க்கர் போன இடங்களுக்கெல்லாம் நாதுராம் கோட்சேவும் உடன் சென்றதையும் இருவரும் நெருங்கிப் பழகியதையும் ஓர் ஹிந்து ராஜ்ஜியம் அமைப்பதற்கான கனவுகளை இணைந்து வளர்த்ததையும் பெருமையுடன் பறைசாற்றியது. கோட்சேவின் இளமைப்பருவம் குறித்து எழுதப்பட்ட அனைத்துக் குறிப்புகளிலும் அவன் 1930ம் ஆண்டே சாவர்க்கரைச் சந்தித்துவிட்ட விவரம் உறுதிசெய்யப்படுகிறது.

சாவர்க்கர் இறந்திருந்தாலும் நீதிமன்றத்தில் அவர் பேசிய பொய் அப்போதும் அப்படியே இருந்தது. கோபால் கோட்சே வெளியே வந்த பிறகு வருடம்தோறும் நாதுராம் நினைவுநாளில் சொற்பொழிவாற்றுவதையும், செய்த காரியம் பற்றிய பெருமிதத்தை நினைவுகூர்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். 2005ம் ஆண்டு அவர் இறக்கும்வரை அப்படித்தான்.

இந்திய ஜனநாயகம் அதை அனுமதித்தது.

மே 4, 2002ம் ஆண்டு, அப்போதைய இந்திய உள்துறை அமைச்சராக இருந்த எல்.கே. அத்வானி, அந்தமான் - போர்ட் ப்ளேயர் விமான நிலையத்துக்கு வீர் சாவர்க்கர் விமான நிலையம் என்று பெயர் சூட்டினார். கிட்டத்தட்ட ஒரு வருட இடைவெளியில் (பிப்ரவரி 26, 2003) நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் சாவர்க்கரின் உருவப்படத்தை ஜனாதிபதி அப்துல் கலாம் திறந்துவைத்தார்.

இந்திய ஜனநாயகம் இதையும் அனுமதித்தது.

*

சாவர்க்கருடன் அத்தனை நெருக்கமாக இருந்த நாதுராம் கோட்சே, ஆர்.எஸ்.எஸ்ஸிலும் உறுப்பினராக இருந்தான். தவிர்க்க முடியாதது.

https://telegram.me/aedahamlibrary

பூனா மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து, ஓர் ஹிந்து உணர்வாளனாகத் தன்னை அறிந்த, பிராமண வகுப்பைச் சேர்ந்த நாதுராம், ஆர்.எஸ்.எஸ்ஸை அறியாமலோ, அணுகாமலோ இருந்திருக்க நியாயமில்லை. எப்படி மிகச் சிறு வயதில் அவனது ஆதர்ச புருஷராக மகாத்மா காந்தி இருந்தது இயல்பானதோ, அதே அளவு இயல்பானது இது.

தபால் துறையில் வேலை பார்த்துவந்த நாதுராமின் தந்தைக்கு 1930ம் ஆண்டு பணி இடமாற்ற உத்தரவு ஒன்று வந்தது. ரத்னகிரிக்கு அவர்கள் குடும்பம் பெயர்ந்தது. அங்குதான் நாதுராம் முதல் முதலில் சாவர்க்கரைச் சந்தித்தான். அப்போது அவனுக்கு வயது இருபது.

ஆர்.எஸ்.எஸ்ஸின் தொடக்ககால உறுப்பினர்களுள் ஒருவனான நாதுராம், தனது வாலிப வயதில் கண்டடைந்த சாவர்க்கரை, ஆர்.எஸ்.எஸ் தலைவர்களைக் காட்டிலும் தீவிரம் மிக்கவராக உணர்ந்தான். ஹிந்து மகாசபையில் அவனது ஈடுபாடு இதன்மூலம் ஏற்பட்டதுதான்.

ஹிந்து மகாசபையில் தன்னை இணைத்துக்கொண்டு, அதன் பணிகளில் ஈடுபடத்தொடங்கியபிறகு, எத்தனை காலம் அவன் ஆர்.எஸ்.எஸ்ஸிலும் உறுப்பினராக இருந்தான் என்பதற்குச் சரியான புள்ளிவிவரங்கள் கிடைப்பதில்லை. ஆனால் காந்தி படுகொலைச் சம்பவத்தின்போது நாதுராம், ஆர்.எஸ்.எஸ். உறுப்பினராக இல்லை. விலகியிருந்தான். இது மறுக்க முடியாதது.

ஜனவரி 30, 1948 அன்று பிர்லா மந்திரில் பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் சென்றுகொண்டிருந்த மகாத்மா காந்தியை நாதுராம் கோட்சே சுட்டுக்கொன்றான். பிப்ரவரி 4ம் தேதி, இந்திய அரசு ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைத் தடை செய்து அறிவித்தது.

ஆர்.எஸ்.எஸ்., மிகப்பெரிய கொந்தளிப்புக்கு உள்ளான காலக்கட்டம். என்ன செய்வதென்று யாருக்கும் புரியவில்லை. அப்போது அதன் நிறுவனர் டாக்டர் ஹெட்காவார் உயிருடன் இல்லை. அவர் ஜூன் 21, 1940 அன்று காலமானார். தனக்குப் பின் ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைமைப் பொறுப்புக்கு (சர்சங்கசாலக் என்பார்கள்) அவர் கைகாட்டியிருந்தவர், மாதவ சதாசிவ கோல்வால்கர் என்ற விலங்கியல் துறைப் பேராசிரியர். பனாரஸ் ஹிந்து பல்கலைக் கழகத்தில் அவர் ஆசிரியராக இருந்தார். பிறகு தமது சொந்த ஊரான நாக்பூருக்குத் திரும்பி வந்து, ராமகிருஷ்ண மடத்தோடு தொடர்புகொண்டு அதன் பணிகளில் ஈடுபட்டிருந்தார். சுத்த

https://telegram.me/aedahamlibrary

பிரம்மச்சாரி. நாக்பூர் ராமகிருஷ்ண மடத்தின் தலைவராக அப்போது இருந்த சுவாமி அகண்டானந்தரிடம் தீட்சை பெற்று சன்னியாசியாகவும் ஆனவர். ஆர்.எஸ்.எஸ்ஸில் அவரை ‘குருஜி’ என்று அழைப்பார்கள்.

இடைப்பட்ட காலங்களில் அவருக்கு ஆர்.எஸ்.எஸ். தொடர்பு ஏற்பட்டு, ஹெட்கேவாரின் நம்பிக்கைக்கும் விருப்பத்துக்கும் உரியவராகிப் போனது இயல்பான விஷயம். கோல்வால்கரின் படிப்பு, பார்வை, அர்ப்பணிப்பு உணர்வு மூன்றும் ஹெட்கேவாரைக் கவர்ந்திருந்தது. தனக்குப்பின் இயக்கத்தை வழிநடத்தச் சரியான நபர் என்று அவர் முடிவு செய்தார்.

அவரது நம்பிக்கை பொய்க்கவில்லை. 1940ம் ஆண்டு தலைமைப் பொறுப்புக்கு வந்ததுமுதல் தேசமெங்கும் ஆர்.எஸ்.எஸ்ஸின் ஷாகாக்களைத் தொடங்குவதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார் கோல்வால்கர். ஷாகாக்களை நடத்தக்கூடிய தகுதி படைத்த ஸ்வயம்சேவக்குகளை உருவாக்குவதற்காக அதிகாரிகள் பயிற்சி முகாம்களையும் அவர் தொடங்கினார்.

ஆனால் ஒரு வித்தியாசம். கோல்வால்கர் காலத்தில் ஆர்.எஸ்.எஸ். சுதந்தரப் போராட்டச் செயல்பாடுகளிலிருந்து பெருமளவு விலகி நிற்க ஆரம்பித்தது. ஒரு கவன ஈர்ப்புக்காகவாவது ஹெட்கேவார் சிறை சென்று வந்தது போன்ற காரியங்களில் கோல்வால்கர் அக்கறை செலுத்தவில்லை. மிக வெளிப்படையான உதாரணங்களாக இரண்டைச் சொல்லலாம்.

41ம் ஆண்டு நடைபெற்ற தனிநபர் சட்ட மறுப்பு இயக்கத்திலோ, அதற்கு அடுத்த ஆண்டு ஆரம்பமான வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலோ ஆர்.எஸ்.எஸ். ஈடுபடவேயில்லை. லாகூர் முஸ்லிம் லீக் மாநாட்டை அடுத்து, முஸ்லிம்களை எதிர்கொள்வது ஒன்றுதான் மிக முக்கியமான பணி என்று ஆர்.எஸ்.எஸ். முடிவு செய்துவிட்டதுபோன்ற தோற்றம் கிடைக்கத் தொடங்கியது அப்போதுதான்.

லாகூரில் ஆரம்பித்த கலவரம் தேசமெங்கும் பரவத் தொடங்கிய 1946ம் ஆண்டின் இறுதி மாதங்களில் ஆர்.எஸ்.எஸ். மிகத் தீவிரமாகக் களத்தில் இறங்கி வேலை பார்க்கத் தொடங்கியது. வேறு கவனமோ, வேறு சிந்தனையோ கிடையாது. அகதி முகாம்களில் ஹிந்துக்களுக்கான சேவைகள். அந்தப் பக்கம் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் பதில் தாக்குதல்கள். இரண்டே பணி. இடைவிடாத பணி. வங்காளம், பஞ்சாப், மகாராஷ்டிர மாகாணங்களில் அக்காலக்கட்டத்தில்

https://telegram.me/aedahamlibrary

ஹிந்துக்களிடையே முஸ்லிம்கள் மீதான ஒரு பேரச்சம் உருவாகி வலுப்பெற ஆர்.எஸ்.எஸ். நிகழ்த்திய பிரசாரங்கள் ஒரு முக்கியக் காரணம் என்பதை மறுக்க முடியாது. அகதி முகாம்களில் அவர்கள் செய்த சேவைகள், ஹிந்துக்கள் மத்தியில் ஆர்.எஸ்.எஸ். சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட செல்வாக்கைப் பெறப் பேருதவி புரிந்தது. இவர்களைத் தவிர நம்மைக் காப்பாற்ற யாருமில்லை என்றே வங்காளத்தில் ஹிந்துக்கள் பேசினார்கள். பல்வேறு இடங்களில் குவியத் தொடங்கிய ஹிந்து அகதிகள் இதை உறுதிப்படுத்தும் விதமாக, ஆர்.எஸ்.எஸ்ஸுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள்.

கோல்வால்கர், தமது பிரசாரகர்கள் மூலம் மிகத் திறமையாக இந்த விவரங்களை தேசமெங்கும் கொண்டு சேர்க்க ஏற்பாடு செய்தார். ஹிந்துக்களே, புரிந்துகொள்ளுங்கள். தன்னலமற்ற சேவை என்பது இதுதான். எங்களுக்கு அரசியல் லாபங்களில் ஆர்வமில்லை. பெயர், புகழ், பேப்பரில் போட்டோ எதிலும் அக்கறையில்லை.எங்கே ஹிந்துக்கள் துன்பப்படுகிறார்களோ, அங்கே ஆர்.எஸ்.எஸ். இருக்கும். எங்கே ஹிந்துக்களுக்கு எதிராகக் கையோ கத்தியோ உயர்கிறதோ, அங்கே அதை முறிக்கவும் ஆர்.எஸ்.எஸ். இருக்கும்.

முதல் பத்தாண்டு காலத்தில் ஹெட்கேவாரின் முயற்சியில் ஆர்.எஸ்.எஸ்ஸின் உறுப்பினர்கள் எண்ணிக்கை என்ன இருந்ததோ, அதன் இரு மடங்கை அடுத்த இரு வருடங்களில் கோல்வால்கர் சாதித்தார். மகாத்மா காந்தி படுகொலைச் சம்பவம் நடந்த சமயம் ஆர்.எஸ்.எஸ்ஸின் அதிகாரிகளுக்கான பயிற்சி பெற்றவர்கள் மட்டும் பதினைந்தாயிரம் பேர் இருந்தார்கள். என்றால், உறுப்பினர்களின் எண்ணிக்கையைச் சொல்லவேண்டியதில்லை.

*

இந்த வளர்ச்சிக்கு ஒரு மாபெரும் தடையாக மகாத்மா காந்தியின் படுகொலைச் சம்பவம் வந்து சேர்ந்தது. ஆர்.எஸ்.எஸ். மீதான தடையுத்தரவு, ஸ்வயம்சேவக்குகள் அத்தனை பேரையும் பதறவைத்தது. கோல்வால்கர் அவசர அவசரமாக காந்தி கொலைச் சம்பவத்துக்குத் தனது அதிர்ச்சியைத் தெரிவித்து நேருவுக்கும் படேலுக்கும் முன்னதாகத் தந்தி அனுப்பியிருந்தார். காந்திக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக தேசமெங்கும் ஷாகாக்களின் பணி பதிமூன்று தினங்களுக்கு நிறுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்.

ஆனால் காவல் துறைக்குச் சந்தேகம் இருந்தது. அரசுக்குச் சந்தேகம்

https://telegram.me/aedahamlibrary

இருந்தது. மக்களுக்கும்.

மக்களின் சந்தேகம், கோபமாக உருப்பெற்றபோது தேசமெங்கும் ஆர்.எஸ்.எஸ்ஸின் பல அலுவலகங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டன. அதன் முக்கிய உறுப்பினர்களின் வீடுகளின்மீதும் தாக்குதல் நடைபெற்றது. மகாராஷ்டிர மாநிலத்தில் இந்தக் கோபம், ஒட்டுமொத்த பிராமணர்கள்மீது திரும்பியது. (ஆர்.எஸ்.எஸ்ஸின் நிறுவனர், இரண்டாவது தலைவர், இயக்கத்தின் பல முக்கியப் பிரமுகர்கள் அனைவரும் பிராமணர்கள். கோட்சே ஒரு பிராமணன்.)குறிவைத்து அடித்தார்கள். நிறையக் கலவரம். நிறைய சேதம்.

பிப்ரவரி 2-3 தேதிகளுக்குள் இந்தக் கலவர அலை தேசமெங்கும் பரவிவிட்டிருந்த நிலையில், ஆர்.எஸ்.எஸ்ஸைத் தடை செய்து அரசு உத்தரவு வெளிவந்தபோது கோல்வால்கர் தவித்துப் போனார்.விசாரணைக்காகப் பல ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் கைதாகலாம் என்று தெரிந்தது.முக்கியஸ்தர்கள், முடிந்த விதங்களில் தலைமறைவானார்கள். ரகசியக் கூட்டங்களில் அவர்களது அடுத்த திட்டங்கள் பேசப்பட்டன. என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்? இது சிக்கல். பெரிய சிக்கல். காந்தி கொலையில் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு நேரடி/மறைமுகத் தொடர்புகள் ஏதும் கிடையாது என்பது உண்மை. இதை நீதிமன்றத்தில் முறைப்படி நிரூபித்துவிட முடியும். ஆனால் மக்கள் மத்தியில் சரிந்துகொண்டிருக்கும் செல்வாக்கை மீட்பது எப்படி? நீதிமன்ற நிரூபணங்கள் மக்களுக்குப் போதாது. அதுவும் மகாத்மா விஷயத்தில். காந்தியின் மரணம் என்பது அவர்களுடைய நம்பிக்கையின் மரணம். நிச்சயமாக மன்னிக்கமாட்டார்கள்.

கோல்வால்கர், உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துத் தம் தரப்பு நியாயத்தை எடுத்துச் சொல்ல முயற்சிகள் செய்து பார்க்க ஆரம்பித்தார். படேலுக்கு ஆர்.எஸ்.எஸ்.மீது கொஞ்சம் அனுதாபம் இருந்தது. நேருவுக்குச் சுத்தமாகக் கிடையாது. மதச்சார்பின்மை என்னும் சித்தாந்தத்தையே ஒரு மதமாக வார்த்தெடுக்க முயற்சி செய்துகொண்டிருந்தவர் அவர். என்ன சமாதானம் சொன்னாலும் அவரது உக்கிரம் தீராது என்று தெரிந்தது.

கோல்வால்கர் படேலுக்கும் நேருவுக்கும் நீண்ட, விரிவான கடிதங்கள் எழுதினார். காந்தி கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆர்.எஸ்.எஸ்ஸின் செயல் திட்டத்தில் இம்மாதிரியான செயல்பாடுகளுக்குச் சற்றும் இடம் கிடையாது.பிராமணர்களும் ஹரிஜனங்களும் ஒரே வரிசையில்

https://telegram.me/aedahamlibrary

உட்கார்ந்து சாப்பிடும் ஆர்.எஸ்.எஸ்ஸின் பண்பாட்டைப் பார்த்து மகாத்மாவே பாராட்டியிருப்பதை நீங்கள் நினைவுகூரலாம். இது ஒரு சமூக இயக்கம். அரசியல் நோக்கங்கள் அற்றது. கலாசாரத் தளத்தில் தீவிரமாக இயங்குவதையே நோக்கமாகக் கொண்டது.

பலனில்லை. விதித்த தடை விதித்ததுதான். வழக்கு துரிதமாக நடந்துகொண்டிருக்கிறது. சற்றுப் பேசாதிருக்கிறீர்களா?

கோல்வால்கர் திரும்பவும் கடிதங்கள் எழுதினார். அக்கம்பக்கத்து தேசங்களில் கம்யூனிசம் வளர்ந்துகொண்டிருப்பதன் விளைவான அபாயங்கள். இந்திய இளைஞர்கள் அதில் ஈர்க்கப்படுவதன் முக்கியத்துவம். அதைத் தடுக்கக்கூடிய ஒரே அமைப்பான ஆர்.எஸ்.எஸ் இப்போது தடையில் இருக்கிறது. இது தேசிய அபாயம் அல்லவா?

மறுபுறம் ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை விலக்கக் கோரி ஒரு மாபெரும் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டது. ஒன்பது லட்சம் கையெழுத்துகள் சேகரித்தார்கள்.சத்தியாகிரகம் நடத்தினார்கள். பல்லாயிரக்கணக்கில் கைதானார்கள். தொடர்ந்து பேசியும் எழுதியும் தம் தரப்பு நியாயங்களை முன்வைத்துக்கொண்டே இருந்தார்கள்.

வல்லப பாய் படேல், கோல்வால்கருக்கு எழுதினார். வேறு வழியே இல்லை. ஆர்.எஸ்.எஸ். தனது நடைமுறைச் செயல்பாடுகளை முற்றிலும் மாற்றிக்கொண்டாலொழிய தடை நீக்கம் சாத்தியமில்லை.

பலபேர் சமரசத் தூது சென்றார்கள். அரசுக்கும் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கும் இடையே சில பொதுவான இணக்க உடன்படிக்கைகள் சாத்தியமாவதற்கு ஏதாவது வழியுண்டா? ஆலோசிக்கப்பட்டன.

நேரு சில விஷயங்களில் தீர்மானமாக இருந்தார்.

1. ஆர்.எஸ்.எஸ்ஸுக்கென்று ஒழுங்காக விதிமுறைகள் எழுதப்பட்டு, அவை பதிவு செய்யப்படவேண்டும். அமைப்பின் செயல்பாடுகள் முறைப்படி வகுக்கப்படவேண்டும்.

2. இஷ்டப்படி யார் வேண்டுமானாலும் வரலாம், இருக்கலாம், போகலாம் என்றில்லாமல், ஒழுங்கான உறுப்பினர் பட்டியல் வேண்டும்.

3. பெற்றோர் அனுமதியின்றி சிறுவர்களை இயக்கத்தில் சேர்க்கக்கூடாது.

4. அரசியல் வேலைகளில் இறங்கக்கூடாது. கலாசாரத் தளங்களில்

https://telegram.me/aedahamlibrary

மட்டும் பணியாற்றலாம்.

கோல்வால்கர் ஒப்புக்கொண்டார். நீண்ட போராட்டத்துக்குப் பிறகு 1949ம் ஆண்டு ஜூலை 12ம் தேதி ஆர்.எஸ்.எஸ். மீதான அதிகாரபூர்வத் தடை விலக்கிக்கொள்ளப்பட்டது.

அந்த ஆண்டு இறுதியில் காந்தி கொலை வழக்கு ஒருவாறு முடிவுக்கு வந்தது. நாதுராம் வினாயக் கோட்சேவையும் நாராயண் தத்தாத்ரேய ஆப்தேவையும் நவம்பர் 15ம் தேதி தூக்கிலிட்டார்கள். சாவர்க்கர் விடுதலை ஆனார். கொலை வழக்கை விசாரித்த கபூர் கமிஷன் தனது அறிக்கையில் காந்தி கொலைச் சதியில் ஆர்.எஸ்.எஸ்ஸுக்குத் தொடர்பில்லை என்று (கபூர் கமிஷன் அறிக்கை பாகம் 1, பக்கம் 165) அறிவித்தது.

*

ஆனால், தலைவலி தலைவலிதான். இன்றுவரை ஆர்.எஸ்.எஸ்ஸைச் சீண்டுவதற்கு அதுதான் மிகப்பெரிய ஆயுதமாக இந்திய அரசியல்வாதிகளுக்கு இருக்கிறது. காந்தி கொலையில் தொடர்புடையவர்கள்.

ஆர்.எஸ்.எஸ்ஸும் சலிக்காமல் அதை மறுத்து வந்திருக்கிறது.

2004ம் ஆண்டு இந்திய மனித வளத்துறை அமைச்சராக இருந்த அர்ஜுன் சிங் மிகத் தீவிரமாக ஒரு சமயம் இந்த ஆயுதத்தைப் பிரயோகித்தார். ஆர்.எஸ்.எஸ்ஸின் ஒரே சாதனை காந்தியைக் கொன்றதுதான் என்று சொன்னார் அவர்.

கொதித்துவிட்டார்கள். உடனே காந்தி கொலையான ஒரு மாதத்துக்குள் சர்தார் படேல் நேருவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றைத் தங்கள் தரப்பு ஆதாரமாக இணைத்து தேசம் முழுதும் உள்ள அரசியல் தலைவர்களுக்கும் மீடியாவுக்கும் அனுப்பியது ஆர்.எஸ்.எஸ். (Forced migration and ethnic cleansing in Lahore in 1947: Some first person accounts - Ishtiaq Ahmed)

‘கிடைத்திருக்கும் ஆதாரங்களின் அடிப்படையில் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு இதில் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெளிவாகத் தெரிகிறது. சாவர்க்கரின் நேரடி மேற்பார்வையில் இயங்கும் ஹிந்து மகாசபாவின் தீவிர மதவெறிக் குழு ஒன்றுதான் சதித் திட்டத்தைத் தீட்டியிருக்கிறது.’

https://telegram.me/aedahamlibrary

படேல் எழுதிய கடிதத்தின் உயிர் நாடியான வரி இதுதான். ஆர்.எஸ்.எஸ்ஸைக் காப்பாற்றிய வரி. சாவர்க்கரைக் குற்றம் சாட்டும் வரியும்கூட.

காந்தி கொலையானபோது ஆர்.எஸ்.எஸ். ஒன்று செய்திருக்கலாம். கோட்சேவைக் கண்டித்து ஓர் அறிக்கை. போதும்.

ஆனால் செய்யவில்லை.

https://telegram.me/aedahamlibrary

# 5. பரிவாரம்

வெகு நிச்சயமாக அது ஒரு மறுபிறப்பு. மகாத்மா காந்தி கொலைச் சம்பவத்தை அடுத்து ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டபோது, இதோடு இந்த இயக்கம் முடிந்தது என்று பேசியவர்கள் அதிகம். தடை நீக்கப்பட்ட பிறகும்கூட ஆர்.எஸ்.எஸ்.மீதான சந்தேகப்பார்வை பெரும்பாலும் விலகாமலே இருந்தது. ஓர் அற்புதம் நிகழ்ந்தாலொழிய மறுபடியும் பழைய துடிப்புடன் செயல்படுவது சிரமம் என்று பேசப்பட்டது.

அப்படிப்பட்ட அற்புதங்கள் ஏதும் நிகழவில்லை. ஆனால் ஆர்.எஸ்.எஸ் திரும்பவும் வளரத் தொடங்கியது. சட்டை உரித்துப் போட்டுவிட்டு நகர்ந்துபோகும் பாம்பைப் போல, தன் மீது சுமத்தப்பட்ட பழியைக் களைந்து முன்னேறத் தொடங்கியது. செயல், செயல், செயல் என்று தேசம் முழுதும் அவர்கள் களப்பணியில் முழு மூச்சுடன் ஈடுபட ஆரம்பித்தார்கள். திரும்பவும் ஷாகாக்கள் இயங்கத் தொடங்கின. புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

கொள்கைகள், கோஷங்கள் எதிலும் மாற்றமில்லை. செயல்பாட்டில் எந்த மாறுதலும் இல்லை. அணுகுமுறையில், வெளிப்பாடுகளில் சற்றும் வித்தியாசமில்லை. அதே ஆர்.எஸ்.எஸ். அதே ஹிந்து தேசிய இலக்கு. அதே களப்பணி.

ஆனால் ஒரு காரியம் செய்தார்கள். மிக முக்கியமான காரியம். மகாத்மாவின் படுகொலையை அடுத்து ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர் முதல் ஏராளமான உறுப்பினர்கள் வரை சிறைப்பட்டிருந்த போதும் சரி, தடை நீக்கம் கோரிப் போராடிக்கொண்டிருந்தபோதும் சரி. இயக்கத்துக்கு வெளியில் இருந்து யாருமே அவர்களை ஆதரிக்கவில்லை. உதவிக்கு வரவில்லை. ஆசார்ய கிருபளானி, ஜி.டி. பிர்லா போன்ற மிகச் சில தனி மனிதர்கள் கோல்வால்கருக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர்களாக இருந்ததபடியால் தடை நீக்கத்துக்குச் சில சிறு முயற்சிகள் செய்து பார்த்ததை மறுக்க முடியாது. ஆனால் அரசியல் கட்சிகளும் சரி, சமூக இயக்கங்களும் சரி. ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பு தடை செய்யப்பட்டது தவறு என்று பேச

https://telegram.me/aedahamlibrary

எந்தச் சந்தர்ப்பத்திலும் முன்வரவில்லை. ஒரு பிரச்னை என்று வந்தால் தமக்காகக் குரல் கொடுக்க இயக்கத்துக்கு வெளியே ஒருவர்கூடக் கிடையாது என்பது கோல்வால்கருக்குப் புரிந்த தருணம் அது.

தடை நீக்கப்பட்டபிறகு அவரது ஒரே சிந்தனை அது பற்றியதாகத்தான் இருந்தது. ஏதாவது செய்ய வேண்டும். செய்தே ஆகவேண்டும். ஆர்.எஸ்.எஸ்ஸின் செயல்பாடுகள் முடங்காமல் ஒழுங்காக நடைபெறவேண்டுமானால், அதற்குச் சில ஆதரவாளர்கள் வேண்டும். சமூக, அரசியல் தளங்களில் பேசக்கூடியவர்கள். பேசினால் எடுபடக்கூடிய அளவுக்கு செல்வாக்கோடு. மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய அமைப்புகள். வெவ்வேறு தளங்களில் பணியாற்றக்கூடிய இயக்கங்கள். ஆனால் ஒரு பொது நோக்கத்தில் ஒருங்கிணையக்கூடிய சாத்தியம் வேண்டும். ஆர்.எஸ்.எஸ் என்பது ஒரு தனிமரமல்ல. அது ஒரு குடும்பம். இது தொடக்கம் முதலே சொல்லப்பட்டு வருவது. ஆனால் ஒரு குடும்பம் போதாது. பெரிய, மிகப்பெரிய குடும்பமாக அது வளர்ச்சியுற வேண்டும். பல குடும்பங்களின் கூட்டமைப்பாக இருக்கவேண்டும்.

வாசுதேவ குடும்பகம் என்னும் பதத்தை ஆர்.எஸ்.எஸ். பயன்படுத்தும். சங் பரிவார் என்றால் எளிதில் புரியும்.

*

கோல்வால்கர் ஒருமுறை, ‘சங்கம் பரவும். பெரிய அளவில் பரவும். என்றாவது ஒருநாள் இந்தியாவில் உள்ள ஹிந்துக்களின் எண்ணிக்கைக்கும் ஆர்.எஸ்.எஸ்ஸின் உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கும் வித்தியாசம் இல்லாது போகும் என்பது என் நம்பிக்கை’ என்று சொன்னார்.

அதற்கான முயற்சிகளின் தொடக்கத்தைத் தனது ‘இரண்டாவது பிறப்பின்’போது ஆர்.எஸ்.எஸ். ஆரம்பித்தது. ஒரு வகையில் அது காலத்தின் கட்டாயமாகவும் இருந்தது.

இந்தியாவெங்கும் கம்யூனிஸ்டுகள் இளைஞர்களிடையே கவனம் பெறத் தொடங்கியிருந்தார்கள். மேற்கு வங்காள கம்யூனிஸ்டுகள். ஆந்திர பிரதேச கம்யூனிஸ்டுகள். அமைதி கம்யூனிஸ்டுகள். ஆயுத கம்யூனிஸ்டுகள். அறிவு கம்யூனிஸ்டுகள். அவர்கள் பள்ளி, கல்லூரிகளில் ஊடுருவியிருந்தார்கள். தொழிற்சங்கங்களில் ஊடுருவியிருந்தார்கள். நாடாளுமன்ற ஜனநாயக அரசியலிலும் கிளர்ச்சி அரசியலிலும் வஞ்சனையில்லாமல் பங்கு பற்றினார்கள். ஆந்திரத்தில்

https://telegram.me/aedahamlibrary

நில உடைமையாளர்கள் மீது தாக்குதல் நிகழ்த்தி, நிலங்களைப் பிடுங்கி கிராமத்து மக்களிடம் கொடுத்துக்கொண்டிருந்த கம்யூனிஸ்டுகள், மிகப்பெரிய அளவில் பேசப்பட்டுக்கொண்டிருந்தார்கள். காங்கிரசுக்கு ஒரே பெரிய மாற்றாக கம்யூனிஸ்டுகள் இந்தியாவில் தலையெடுத்துவிடக்கூடும் என்கிற அச்சம், இந்தியாவின்மீது அக்கறை அல்லது ஆர்வம் கொண்ட அனைத்து முதலாளித்துவ தேசங்களுக்கும் அன்று இருந்தது.

இந்தியாவுக்குள் அந்தக் கவலை அதிகமாக இருந்த இயக்கங்களுள் முக்கியமானது ஆர்.எஸ்.எஸ்.

தனது வலதுசாரி தேசியவாதத்தை மக்களிடையே பரப்பி, அவர்களது ஆதரவைப் பெறுவது மட்டுமல்ல; கம்யூனிஸ்டுகளின் செயல்பாடுகளுக்கு ஆதரவின்றிப் போகச் செய்வதும் அவர்களுக்கு ஒரு பெரிய செயல்திட்டமாக இருந்தது.

1948 ஜூலையில் ஆரவாரம் ஏதுமின்றி எளிமையாகத்தொடங்கப்பட்டு, அடுத்த ஆண்டு, அதே ஜூலையில் முறைப்படி பதிவு செய்யப்பட்ட அமைப்பாக உலகுக்கு அறிமுகமான அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத் (ABVP) இந்த வகையில் ஆர்.எஸ்.எஸ்ஸின் முதல் குழந்தை என்று சொல்லலாம். ஆர்.எஸ்.எஸ்ஸின் சித்தாந்தங்களால் கவரப்பட்ட சில மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து தொடங்கிய அமைப்பு என்று ஏ.பி.வி.பி.யை அறிமுகம் செய்தார்கள். கல்வித்துறையில் ஒரு மகத்தான மறுமலர்ச்சி என்பது அவர்களது குறிக்கோளாக அறியப்பட்டது.

உறுதியான, திட்டவட்டமான வலைப்பின்னல். சந்தேகமில்லாத தேசிய நோக்கு. சாதிச் சிடுக்குகளுக்கு அப்பாற்பட்ட, குறுங்குழு வாதங்களைத் தவிர்த்த மாணவர்களின் ஒருங்கிணைப்பு.

பல்கலைக்கழக அளவில்தான் முதலில் தொடங்கப்பட்டது. பிறகு மெல்ல மெல்ல கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் என்று ஏ.பி.வி.பி. விரிவடையத் தொடங்கியது. வட இந்தியாவில், குறிப்பாக பிகார், குஜராத் போன்ற மாநிலங்களில் ஹிந்து மாணவர்களிடையே ஏ.பி.வி.பிக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. எங்கெல்லாம் கல்வித்துறையில் சாதி அரசியல் புகும் சாத்தியங்கள் உண்டோ, அங்கெல்லாம் ஏ.பி.வி.பியினர் கிளர்ச்சி கோஷங்களுடன் வந்துவிடுவார்கள்.

ஏ.பி.வி.பியின் மாணவர் தலைவர்கள் பெரும்பாலும் ஆர்.எஸ்.எஸ்ஸின் ஷாகாக்களில் தயாரானவர்களாக இருந்தார்கள். அவர்கள் மேலும்

https://telegram.me/aedahamlibrary

மேலும் மாணவர்களை ஷாகாக்களுக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். ஹிந்து தேசியம் என்பது உணவாகவும் உணர்வாகவும் அவர்களுக்கு ஊட்டப்பட்டது. பம்பாயைச் சேர்ந்த யஷ்வந்த்ரோ கேல்கர் என்னும் பேராசிரியர் ஏ.பி.வி.பியின் 'வளர்ச்சி அலுவலரா'கப் பொறுப்பேற்ற பிறகு இந்த மாணவர் யூனியனின் ஆழ அகலங்கள் குறிப்பிடத்தகுந்த அளவு விரிவடைய ஆரம்பித்தது.

மாணவர் சக்தியை ஒருங்கிணைப்பது என்பதற்கு அரசியல் ஒரு முக்கியக் கண்ணியாகப் பயன்படுத்தப்படுவதைத் தமிழகத்தில் நாம் பார்த்திருக்கிறோம். மொழிப் போராட்ட காலம் ஓர் உதாரணம். கட்சி அரசியலுக்கு அவர்களைப் பயன்படுத்துவது, தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துவது போன்றவையும் தேசமெங்கும் சர்வ சாதாரணமாக நடக்கும் விஷயம்.

ஆனால் ஏ.பி.வி.பியின் செயல்பாடுகள் முற்றிலும் மாணவர் வட்டத்துக்குள்ளாக, கல்வித்துறை சார்ந்தே வடிவமைக்கப்படவேண்டும் என்பதை பேராசிரியர் யஷ்வந்த்ரோ கேல்கர் வலியுறுத்தினார். அதே சமயம் கல்வித்துறையை பாதிக்கக்கூடிய அரசியல் செயல்பாடுகள் நிகழுமானால் களத்துக்கு வரக்கூடிய முதல் யூனியன் ஏ.பி.வி.பியாக இருந்தது. மாணவர்கள் மட்டுமல்லாமல் (ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்களாகவும் அனுதாபிகளாகவும் இருந்த) ஆசிரியர்களும் பேராசிரியர்களும்கூட இதன் உறுப்பினர்களாக இருந்ததுதான் பிற மாணவர் யூனியன்களுக்கும் ஏ.பி.வி.பிக்குமான அடிப்படை வித்தியாசமாக இருந்தது. யூனியனின் விரிவாக்கத்துக்குப் பேருதவி புரிந்ததும் இதுதான்.

இன்று குறைந்தபட்சம் ஒன்றரைக்கோடி உறுப்பினர்களைக் கொண்ட ஒரே மாணவர் யூனியன் ஏ.பி.வி.பிதான். இந்தளவு உறுப்பினர்களைக் கொண்ட இன்னொன்று இங்கில்லை.

ஆர்.எஸ்.எஸ்ஸின் தோற்றம் முதலே அவர்களுக்கு இந்த நோக்கம்தான். பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவர்களை இயக்கத்தில் சேர்ப்பதில்தான் டாக்டர் ஹெட்கேவார் அதிக ஆர்வம் செலுத்தினார். ஹிந்து தேசிய உணர்வை விதைப்பதற்கு அதைக் காட்டிலும் சரியான பருவம் வேறில்லை என்பது அவர் கருத்து. ஏ.பி.வி.பி. பள்ளிகள் மட்டத்தில் பரவத் தொடங்கியபோது ஆர்.எஸ்.எஸ்ஸின் அடையாளங்களான உடற்பயிற்சியுடன் கூடிய சித்தாந்த வகுப்புகள், தேசபக்திப் பாடல்கள் போன்றவை அங்கும் மூத்த மாணவர்கள் மூலமாகவே அறிமுகப்படுத்தப்பட்டன.

https://telegram.me/aedahamlibrary

*

புதிய கல்விச்சாலைகளைத் திறப்பது அடுத்தத் திட்டம். ஏ.பி.வி.பியின் வெற்றி இதற்கு உந்துதல் அளித்திருக்கலாம். அல்லது மரபார்ந்த ஹிந்து பாரம்பரியத்தின் அடியொற்றிய கல்வி நிறுவனங்களைத் தொடங்குவது, அவர்களுடைய இன்னொரு மிக முக்கிய ‘சமூகத் திட்ட’மான கிறிஸ்தவ மிஷனரிகளின் செயல்பாட்டுக்கு ஓர் அவசியமான மாற்று என்றும் கருதியிருக்கலாம்.

1952ம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த பண்டிதரும் ஆர்.எஸ்.எஸ்ஸின் மிக முக்கிய உறுப்பினர்களுள் ஒருவருமான நானாஜி தேஷ்முக் என்பவரை உத்திரபிரதேச மாநிலம் கோரக்பூருக்கு அனுப்பினார்கள்.

சரஸ்வதி சிசு மந்திர் அப்போது பிறந்தது. கல்வித்தாயின் குழந்தைகள் குடிகொள்ளும் கோயில் என்று இந்தப் பெயரைத் தமிழாக்கலாம். உத்திரபிரதேசத்தில் தொடங்கப்பட்ட இந்தக் கல்வி இயக்கம், வெகு விரைவில் தேசம் முழுவதற்கும் பரவியது. ஆர்.எஸ்.எஸ்ஸின் பிரசாரக்குகள் மூலம் சாத்தியமுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் இதனை விரிவாக்கினார்கள். ஒன்றாம் வகுப்பு, முடிந்தால் அதற்கு முந்தைய முன் பள்ளிப் பயிற்சிகளில் தொடங்கி, அடிப்படைக் கல்வி, ஆரம்பக் கல்வி அளிப்பதில் இது மிகத் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தது. பெரிய விளம்பரங்கள் இருக்காது. பிரம்மாண்டமான பெயர்ப்பலகைகளும் அவசியமில்லை. கட்டாய வரி வசூல் போன்ற கட்டணச் சுமைகளுக்கு இடமில்லை. குழந்தைகளைப் படிக்க வைக்க சிரமப்படும் ஹிந்துக் குடும்பங்களா? வரலாம். கதவு திறந்தே இருக்கும்.

பல நூற்றுக்கணக்கான சிசு மந்திர்கள் உருவாகத் தொடங்கின. பெரும்பாலும் பின் தங்கிய, கிராமப்புறப் பகுதிகளில் இதனைத் தொடங்குவதிலேயே பிரசாரக்குகள் ஆர்வம் செலுத்தினார்கள். கிறிஸ்தவ மிஷனரிகள் செல்வாக்குள்ள பள்ளிகளை நடத்தும் பகுதிகள் என்றால் இன்னும் கூடுதல் ஆர்வம். 1977ம் ஆண்டு இந்த சிசு மந்திர்கள் அனைத்தும் ‘வித்யா பாரதி’ என்னும் பெயரில் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்புகளாக்கப்பட்டன. தேசமெங்கும் சுமார் இருபதாயிரம் பள்ளிகள். ஒரு லட்சம் ஆசிரியர்கள். இருபத்தி ஐந்து லட்சம் மாணவர்கள்.

மதம் கலந்த தேசிய உணர்வு, இந்தப் பள்ளிகளில் படிக்கும் சிறுவர்களுக்கு ஊட்டப்படுகிறது. பிரார்த்தனைகள், சமஸ்கிருத

https://telegram.me/aedahamlibrary

சுலோகங்கள் அவசியம் உண்டு. பண்டிகைகள், திருவிழாக்கள் அவற்றின் முழு முக்கியத்துவத்துடன் கொண்டாடப்பட வலியுறுத்தப்படுகிறது. பாரம்பரிய இந்திய விளையாட்டுகள், இந்தியக் கலைகளுடனான எளிய அறிமுகம் அவசியம் தரப்படும்.

பொருளாதார ரீதியில் பின் தங்கிய பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே ஆர்.எஸ்.எஸ்ஸுக்கான மறைமுக செல்வாக்கு வளர இந்த வித்யாபாரதி பள்ளிக்கூடங்கள் பெருமளவு உதவுவதை மறுக்க முடியாது.

*

ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு நேரடி அரசியலில் ஈடுபடும் எண்ணம் எக்காலத்திலும் இருந்ததில்லை. ஹிந்து மகாசபைக்கும் ஆர்.எஸ்.எஸ்ஸுக்குமான அடிப்படை வேறுபாடே அங்கிருந்துதான் தொடங்குகிறது. ஹிந்து தேசியம் என்னும் நோக்கம் பொதுவானதாக இருந்தாலும் மகாசபை, சாத்தியமுள்ள அனைத்து விதங்களிலும் அரசியலில் தன்னைத் திணித்துக்கொள்ள முயற்சி செய்தது. டாக்டர் ஹெட்கேவார் அதை முற்றிலும் நிராகரிக்கக்கூடியவராக இருந்தார். சமூக, கலாசாரத் தளங்களில் மாற்றம் விளைவிப்பது, மறுமலர்ச்சிக்கு வித்திடுவதுதான் ஆர்.எஸ்.எஸ்ஸின் நோக்கம் என்று அவர் சொன்னார்.

ஆனால் மகாத்மா காந்தி படுகொலைக்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தும் அரசியல் காரணங்களால் தீர்மானிக்கப்பட்டவையே என்று ஆர்.எஸ்.எஸ். உறுதியாக நம்பியது. ஒரு சில ஆர்.எஸ்.எஸ். பிரசுரங்களில், ‘பண்டித நேருவைவிட குருஜி கோல்வால்கரின் புகழும் செல்வாக்கும் மக்கள் மத்தியில் வளர்ந்துகொண்டிருந்தது சகிக்காமல்தான் இயக்கத்தை முடக்கப்பார்த்தார்கள்’ என்று எழுதியிருக்கிறார்கள்!

எப்படி ஆனாலும், தனக்கான அரசியல் சகாக்கள் என்ற ஓர் இனத்தின் அவசியத்தை ஆர்.எஸ்.எஸ். உணர்ந்துவிட்டது. நேரடியாகத் தேர்தல் அரசியலில் பங்குபெறும் எண்ணம் இல்லாவிட்டாலும், அப்படியொரு அமைப்பு அல்லது கட்சியின், தோழமை அல்லது நிழல்வெளி தனக்கு அவசியம் என்பதைப் புரிந்துகொண்டுவிட்டது.

டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி அப்போது சுதந்தர இந்தியாவின் முதல் அமைச்சரவையில் தாம் வகித்துவந்த தொழில் துறை அமைச்சர் பதவியிலிருந்து விலகும் எண்ணத்தில் இருந்தார். வங்காளத்தின் புகழ்பெற்ற அரசியல்வாதி. சுதந்தரப் போராட்டம் நடந்துகொண்டிருந்த

https://telegram.me/aedahamlibrary

காலத்தில், பிரிட்டிஷ் இந்தியாவின் வங்காள மாகாண சட்டமன்றத்தின் உறுப்பினராகப் பதவி வகித்தவர் அவர். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டமன்றத்துக்குச் சென்றவர். காங்கிரஸ், சட்டமன்றத்திலிருந்து விலகுவது என்று முடிவெடுத்தபோது, ராஜினாமா செய்துவிட்டு அடுத்த வருடத் தேர்தலில் சுயேச்சையாக நின்று வென்றவர் (1941-42).

டாக்டர் முகர்ஜி, ஒரு காங்கிரஸ்காரராகத் தமது அரசியல் வாழ்வைத் தொடங்கினாலும் ஓர் ஹிந்து உணர்வாளராகவே அவரால் சகஜமாக இருக்க முடிந்திருக்கிறது. இதனால்தான் அவர் ஹிந்து மகாசபையின் உறுப்பினராக இணைந்தபோது முன்னைக்காட்டிலும் தீவிரமாக அரசியல் வேலைகள் பார்க்க முடிந்தது. கொஞ்ச காலம்தான். 1944ல் அவர் மகாசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்.

அபாரமான பேச்சாளர். களத்தில் இறங்கி வேலை பார்ப்பதில் சமர்த்தர். டாக்டர் முகர்ஜியால் இளைஞர்களை வெகுவாக ஈர்க்க முடிந்ததுதான் பெரிய விஷயமாகப் பார்க்கப்பட்டது. முஸ்லிம் லீகின் பிரிவினைக் கோரிக்கைக்கு எதிரான அவரது செயல்பாடுகள் ஹிந்து இயக்கங்கள் மத்தியில் வெகுவாக சிலாகிக்கப்பட்டவை. ஆனால் நிலைமை கட்டுக்குள் இல்லை என்பது புரிந்த சமயம், ‘சரி, உங்களுக்குப் பாகிஸ்தான் வேண்டுமென்றால் மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டுப் போய்விடுங்கள். இங்கே நின்று இன்னும் என்ன பேச்சு?’ என்று கேட்டார்.

ஹிந்து மகா சபையில் முகர்ஜியும் சாவர்க்கரும் சம காலத்தில் பணியாற்றியவர்கள்தாம். ஆனால் மகாத்மா காந்தி படுகொலைச் சம்பவத்தை மிகக் கடுமையாகக் கண்டித்தவர்களுள் முகர்ஜி முக்கியமானவர்.

சுதந்தர இந்தியாவின் முதல் அமைச்சரவையில் முகர்ஜியைச் சேர்த்திருந்தார் ஜவாஹர்லால் நேரு. ஆனால் அகதிகள் விஷயத்தில் நேருவின் நிதானப்போக்கு, பாகிஸ்தான் அரசியல்வாதிகளுடன் சமரசமான உடன்படிக்கைச் சாத்தியங்களை நோக்கிய முயற்சிகள் போன்றவை அவருக்குப் பிடிக்கவில்லை.1950ம் ஆண்டு அமைச்சரவையிலிருந்து அவர் ராஜினாமா செய்தார்.

புதிதாக ஒரு கட்சி தொடங்கும் உத்தேசம் அவருக்கு இருந்தது. தீவிரமான ஹிந்து தேசியவாதியான முகர்ஜி அப்படியொரு கட்சி தொடங்கினால் அதற்கு முழுமையான ஆதரவு தருவது என்று

https://telegram.me/aedahamlibrary

ஆர்.எஸ்.எஸ். முடிவு செய்தது.

இதை இன்னொரு விதமாகவும் சில ஆய்வாளர்கள் வருணிக்கிறார்கள். குறிப்பாக கிறிஸ்டஃப் ஜஃப்பர்லட் போன்ற ஆர்.எஸ்.எஸ்ஸின் மேற்கத்திய விமரிசகர்கள், ‘டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியுடன் இணைந்து பாரதீய ஜன சங்கத்தைத் தோற்றுவித்தது ஆர்.எஸ்.எஸ்.’ என்று எழுதுகிறார்கள். இந்திய இடதுசாரி விமரிசகர்களோ, ‘முகர்ஜியை வைத்து ஜன சங்கத்தை ஆர்.எஸ்.எஸ். ஆரம்பித்தது’ என்றே சொல்லிவிடுகிறார்கள்.

தனக்கொரு அரசியல் கட்சித் தொடர்பு தேவை என்று ஆர்.எஸ்.எஸ். கருதியதில் மாற்றுக் கருத்தில்லை. அதை ஆர்.எஸ்.எஸ்ஸேதான் உருவாக்கியதா, ஹிந்து தேசியவாதியான டாக்டர் முகர்ஜி கட்சி தொடங்கியபோது அதை ஆதரிக்க முடிவு செய்ததா என்ற இரு வாதங்களுக்குள் பெரிய வித்தியாசமும் இல்லை. தனது இலக்கில் மிகத் தெளிவாக ஆர்.எஸ்.எஸ். முன்னேறத் தொடங்கிவிட்டது என்பதுதான் இங்கே கவனிக்கப்படவேண்டியது.

*

1952ம் ஆண்டு சுதந்தர இந்தியாவின் முதல் பொதுத்தேர்தல்கள் நடந்தன.  டாக்டர் முகர்ஜியின் பாரதீய ஜன சங்கம் அந்தத் தேர்தலில் மிகுந்த உற்சாகத்துடன் போட்டியிட்டது. அநேகமாக, வட இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சங்கத்துக்காக ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள் சுழன்று சுழன்று வேலை பார்த்தார்கள். கட்சி என்றாலே காங்கிரஸ் என்று கிட்டத்தட்ட இந்தியா முழுவதிலும் பெரும்பாலான மக்கள் மனத்தளவில்  தீர்மானம் செய்துவிட்டிருந்த நிலையில், ஒரு புதிய கட்சியை மக்களிடம் சரியாக அறிமுகப்படுத்தி, அதன் நோக்கங்களையும் கொள்கைகளையும் எடுத்து வைத்து ஆதரவுகோர அவர்களுக்கு அதிக அவகாசம் இருக்கவில்லை.

ஆனாலும் உற்சாகம் குன்றாமல் அவர்கள் வேலை பார்த்தார்கள். டாக்டர் முகர்ஜி ஓரளவு பிரபலமானவர். மேற்கு வங்கத்தில் அவருக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அவர் காங்கிரஸ் சார்பில் நின்றபோதும் சரி, சுயேச்சையாக நின்றபோதும் சரி, பிறகு ஹிந்து மகாசபையில் இணைந்தபோதும் சரி, விலகி வந்து தனிக்கட்சி தொடங்கியபோதும் சரி. அவருடைய செல்வாக்குக்கு அங்கே எந்த பங்கமும் இல்லை. அவரை மக்களுக்குத் தெரியும். அவர் கொள்கைகளையும்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் தேர்தலில் அவரது கட்சி நிறுத்திய வேட்பாளர்கள் அத்தனை பேரும் புதியவர்கள். ஹிந்து தேசியவாதிகள். ஆர்.எஸ்.எஸ்., மற்றும் ஹிந்து மகாசபா முகாம்களில்  தயாரானவர்கள். மகாத்மா காந்தியின் படுகொலைக்குப் பிறகு அதுவே அவர்களுக்கு மிகப்பெரிய பிரச்னையாக இருந்தது. வோட்டுக்கேட்டுப் போகிறவர் காந்தியைக் கொன்ற குழுவிலிருந்து வந்தவர் என்று வெளிப்படையாகவே மக்கள் பேசினார்கள். யூதர்கள் அனைவரும் இயேசுவைக் கொன்றவர்கள் என்று யூத எதிர்ப்பாளர்கள் வருணித்ததற்கு நிகரானது இது.

அந்த முதல் தேர்தலில் பாரதீய ஜன சங்கத்துக்கு மூன்று இடங்களில் மட்டும் வெற்றி கிடைத்தது. காங்கிரஸ் கட்சி 364 இடங்களில் வெற்றி பெற்று அசைக்க முடியாத வலிமையுடன் ஆட்சியமைத்தது. தேசமெங்கும் பதிவான மொத்த ஓட்டுகளில் எழுபத்தி ஆறு சதவீதம் காங்கிரஸுக்கு. மிச்சத்தை தேசமெங்கும் பல்வேறு உதிரிக்கட்சிகள் பங்கிட்டுக்கொண்டன.

நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த மகத்தான தோல்வியை மறந்து, தொண்டர்கள் புத்துணர்ச்சி கொள்ள டாக்டர் முகர்ஜி காஷ்மீர் பிரச்னையைக் கையில் எடுத்தார். இந்திய சரித்திரத்தின் அழிக்கமுடியாத கருப்புப் பக்கங்களுள் ஒன்றான காஷ்மீர் பண்டிட்டுகள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப்படுகொலைச் சம்பவம் குறித்தும் அதற்காகப் போராடப் போன டாக்டர் முகர்ஜியின் முயற்சிகள் பற்றியும் அங்கே ஆர்.எஸ்.எஸ். செய்த வேலைகள் குறித்தும் பின்னால் விரிவாகப் பார்க்கலாம்.

ஆர்.எஸ்.எஸ். தன் திட்டப்படி தனக்கான அரசியல் இயக்கத்தை அடைந்துவிட்டது. அதுதான் முக்கியம். பாரதீய ஜனசங்கம் பின்னாளில் ஜனதாவுடன் இணைந்து கொஞ்ச காலம் அரசியல் நடத்திவிட்டு, வெகு விரைவில் பாரதிய ஜனதாவாக உருப்பெற்றுவிட்டது. அன்று ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்களில் காக்கி அரை நிக்கருடன் கபடியும் கொக்கோவும் விளையாடிய சிறுவர்கள் பின்னாளில் அடல் பிஹாரி வாஜ்பாயாகவும் லால் கிஷன் அத்வானியாகவும் நமக்குப் பெரும் தலைவர்களாக அறிமுகமானது சரித்திரம்.

*

ஜனசங்கம் உருவாகிக்கொண்டிருந்த அதே காலக்கட்டத்தில் (1952) ஆர்.எஸ்.எஸ். மிக முக்கியமான இன்னொரு பணியில் தீவிரமாக இறங்கியிருந்தது. சொல்லப்போனால், இன்று வரை ஆர்.எஸ்.எஸ்ஸின்

https://telegram.me/aedahamlibrary

அனைத்துப் பணிகளிலும் தலையாயதும் அதி முக்கியத்துவம் வாய்ந்ததுமானது என்று அதைத்தான் சொல்லவேண்டும். அரசியல் ஆகிவிட்ட படியால் பாபர் மசூதி விவகாரம் தேசமறிந்த ஒன்றாகிவிட்டது. அப்படியொரு சூழல் இன்னும் ஏற்படாதபடியால் ஆர்.எஸ்.எஸ்ஸின் மதமாற்றத்துக்கு எதிரான நடவடிக்கைகள் செய்தி முக்கியத்துவம் பெறாதிருக்கின்றன.

வனவாசி கல்யாண் ஆஸ்ரம். இந்தப் பெயரைக்கூடப் பலபேர் கேள்விப்பட்டிருக்க நியாயமில்லை. பெயரில் இருக்கும் சாதாரணத்துவத்துக்கும் செயல்பாடுகளில் இருக்கும் தீவிரத்துக்கும் சம்பந்தம் இல்லை. இன்று வட இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ்ஸின் சகோதர அமைப்பான வனவாசி கல்யாண் ஆசிரமம் இயங்காத மாநிலங்களே அநேகமாகக் கிடையாது. தெற்கிலும் உண்டு. எங்கு அவசியமோ அங்கே. நகர்ப்புறங்களில் நீங்கள் பார்க்க முடியாது. கிராமங்களிலும்கூட. வனவாசி கல்யாண் ஆசிரமத்தின் செயல்பாடுகளை அறியவேண்டுமானால் நாம் வனவாசிகள் என்று ஆர்.எஸ்.எஸ். குறிப்பிடும் ஆதிவாசிகளின் குடியிருப்புப் பகுதிகளுக்குப் போனால்தான் முடியும்.

1952ம் ஆண்டு ஜஸ்பூர் என்ற இடத்தில் (இன்றைய சத்தீஸ்கரில் உள்ளது.) ஆர்.கே. தேஷ்பாண்டே என்ற ஆர்.எஸ்.எஸ்காரர் முதல் முதலில் வனவாசி கல்யாண் ஆஸ்ரமை ஆரம்பித்தார். ஒரிஸ்ஸா, பிகார், மத்தியபிரதேசம், உத்திர பிரதேச மாநிலங்களில் அன்று கிறிஸ்தவ மிஷனரிகள் மிகத் தீவிரமாக ஆதிவாசிகளிடையே மத மாற்றத்துக்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தன.

பல்லாண்டு காலமாக அடையாளமின்றி, ஆதரிப்போர் இன்றி, காடுகளிலும் மலைகளிலும் சிறு பயிர் செய்து, கால்நடைகள் மேய்த்து பிழைப்பு நடத்திக்கொண்டிருந்த ஆதிவாசிகள். விவசாயக் கூலிகளாகப் பிழைக்கச் சென்று பல இடங்களில் கொத்தடிமைகளாகச் சிக்கிக்கொண்டவர்கள்.

மிஷினரிகள் அவர்களைக் குறி வைத்து மத மாற்ற முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. ஆதிவாசிகளுக்கான மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் அமைத்துத் தருவது அதன் முக்கியமான அம்சம். இந்த இரண்டு செயல்பாடுகளின்மூலம் அவர்களின் மனத்துக்கு வெகு நெருக்கமாகச் சென்று விட முடிவதை ஆர்.எஸ்.எஸ். கவனித்தது. மிஷினரிகளின் வெளிநாட்டுப் பணம் அச்சமூட்டக்கூடிய அளவு அதிகமாக இருந்தாலும், இந்தச் செயல்பாடுகளின்மூலம் ஆதிவாசிகள்

https://telegram.me/aedahamlibrary

சமூகத்தவரை அவர்கள் கொத்துக்கொத்தாக கிறிஸ்தவத்துக்கு மாற்றிக்கொண்டிருப்பதைத் தடுத்தே தீரவேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் வனவாசி இயக்கம், கிட்டத்தட்ட மிஷினரிகளின் பாணியிலேயே தனது எதிர் செயல்பாடுகளைத் தொடங்கியது.பள்ளிக்கூடங்கள். மருத்துவமனைகள். எளிய குடியிருப்புப் பகுதிகள். இவற்றைக் கட்டித் தருவது. மதம் மாறிய ஆதிவாசிகளிடையே சென்று பேசி, திரும்பவும் அவர்களை ஹிந்து மதத்துக்கு மாறவைப்பது. அதுவரை மாறாதிருப்போரை எச்சரித்து, மிஷினரி ஆள்களிடமிருந்து தள்ளி இருக்கவைப்பது.

மிஷினரிகளுடனான ஆர்.எஸ்.எஸ்ஸின் யுத்தம் இன்னும் விரிவானது. அதைத் தனியொரு அத்தியாயமாகவே பின்னால் பார்க்கலாம். வனவாசி கல்யாண் ஆஸ்ரம் என்னும் அமைப்பைத் தொடங்கியதன்மூலம் ஆர்.எஸ்.எஸ். சாதித்தவற்றுள் மிக முக்கியமானது, அடித்தட்டு மக்களுடனான ஒரு வலுவான வலைப்பின்னல். மதச்சார்பின்மை பேசும் அரசியல்வாதிகள் பெரும்பாலும் எட்டிப்பார்க்காத, பார்க்க விரும்பாத அவர்களுடைய வாழ்க்கையில் நுழைந்து, அவர்களுடைய சுக துக்கங்களில் பங்கெடுப்பதன்மூலம், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதன்மூலம், அவர்களை ஆர்.எஸ்.எஸ்ஸின் உறுப்பினர்களாக்குவதன்மூலம் இரண்டு சாத்தியங்கள் அவர்களுக்குக் கிடைத்துவிடுகிறது.

ஒன்று, ஆர்.எஸ்.எஸின் அடிப்படை நோக்கமான மத மாற்றங்களுக்கு எதிரான போர். அதில் கிடைக்கும் வெற்றிகள். இரண்டாவது, ஆர்.எஸ்.எஸ். ஒரு பிராமண இயக்கம் என்னும் குற்றச்சாட்டை வலுவிழக்கச் செய்வது. சாதி பேதமற்ற ஒரு ஹிந்து தேசிய இயக்கம் என்ற தன் அடையாளத்தை உயர்த்திப் பிடிக்க முடிவது.

*

1955ம் ஆண்டு பாரதீய மஸ்தூர் சங்கம் என்னும் தொழிற்சங்கம் உருவானதும் அறுபதாம் ஆண்டு பாரதீய கிஸான் சங்கம் என்னும் விவசாயிகள் சங்கம் உருவானதும் ஆர்.எஸ்.எஸ்ஸின் அடுத்தக்கட்ட வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுவன.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் தொழிற்சங்கங்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கிய சமயத்தில், அவற்றுக்கு வலுவான மாற்றாக ஒரு

https://telegram.me/aedahamlibrary

வலதுசாரித் தொழிற்சங்கத்தை உருவாக்கி வலுப்பெறச் செய்யவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். விரும்பியது. கோல்வால்கர், டி.பி. தெங்காடி என்னும் ஆர்.எஸ்.எஸ். பிரசாரக்கிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார்.

அவர் காங்கிரஸ் தொழிற்சங்கமான ஐ.என்.டி.யு.சியில் இணைந்து பணியாற்றி, கொஞ்சம் கொஞ்சமாக செல்வாக்குப் பெற்று, தொழிற்சங்க சூட்சுமங்களையும் பயின்று, அதிலிருந்து பிரிந்து வந்து பாரதிய மஸ்தூர் சங்கத்தை ஆரம்பித்தார். 'நமது முதல் எதிரி கம்யூனிஸ்டுகள்தான்' என்று தெங்காடி அறிவித்தார். இன்றுவரை இந்த இரு எதிரெதிர் துருவங்களின் மோதல் தொழிற்சங்க உலகில் தொடர்ந்தபடிதான் இருக்கின்றன.

கிட்டத்தட்ட மூவாயிரத்தி ஐந்நூறு யூனியன்கள், ஐம்பது லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள். ஆர்.எஸ்.எஸ்ஸின் தொழிற்சங்க பலம் சாதாரணமானதல்ல.

இதன் தொடர்ச்சி அல்லது நீட்சியாகவே நாம் கிஸான் (என்றால் விவசாயி) சங்கத்தையும் பார்க்கவேண்டும். விவசாய மேம்பாட்டுக்கான புதிய வழிமுறைகளைக் கண்டடைவது, விவசாயிக்கு மகிழ்ச்சி தரத்தக்க வகையில் விலை நிர்ணயம் செய்யப் பாடுபடுவது. இரண்டே குறிக்கோள் என்று சொல்லப்பட்டது.

ஒப்பீட்டளவில் தொழிற்சங்கம் அளவுக்கு இந்த விவசாயிகள் சங்கம் பெரிய அளவில் வளரவில்லை என்றாலும் தேசமெங்கும் சுமார் பத்தாயிரம் கிராமங்களில் இந்த பாரதீய கிசான் சங்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

*

இதற்கெல்லாம் பிறகுதான் வி.எச்.பி. வருகிறது. வருடம் 1964. சிவசங்கர் ஆப்தே என்னும் மகாராஷ்டிர பிராமணர், ஆர்.எஸ்.எஸ்ஸின் நம்பிக்கைக்குரிய மூத்த பிரசாரக்கின் தலைமையில் மதப்பணிகளை கவனிப்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம்.

தனது முந்தைய எந்த கிளை அமைப்பிலும் ஆர்.எஸ்.எஸ். நேரடியாக ஹிந்து மதம், சடங்குகள், சம்பிரதாயங்கள், கடவுள் நம்பிக்கைகளைத் தூக்கிப் பிடித்து, அதற்காகப் பேசுவதற்கான சாத்தியங்களை வைத்திருக்கவில்லை. ஒரு வலதுசாரி தேசியவாத இயக்கத்தின் பல்வேறு அரசியல் மற்றும் சமூகச் செயல்பாடுகளைச் சுட்டிக்காட்டும்

https://telegram.me/aedahamlibrary

அமைப்புகளாகவே அவை உருப்பெற்றன.

ஆனால் வி.எச்.பி மிகத் தெளிவாக மத அமைப்பாக முன்னிறுத்தப்பட்டது. ஒரு தீவிரமான ஹிந்து மத இயக்கம். ஹிந்து மதத்தைத் தூக்கிப் பிடிப்பது மட்டுமல்ல. அதற்குச் சவால் விடும் வேறு எந்த மதத்துக்கும் எதிராக உடனுக்குடன் மல்லுக்கட்ட ஓர் அமைப்பு. தேசமெங்கும் உள்ள பல்வேறு சன்னியாசிகளை, மடங்களை, மத நிறுவனங்களை, ஆசிரமங்களை, கோயில்களை, வேத பாடசாலைகளை ஒரு நேர்க்கோட்டில் இணைக்கத்தக்க அமைப்பு. ராமனும் கிருஷ்ணனும் இந்த மண்ணின் மகத்தான இருபெரும் தெய்வங்கள் என்று சொல்லிக்கொண்டு, ராம ஜென்ம பூமியையும் கிருஷ்ண ஜென்ம பூமியையும் 'மீட்பதை'த் தனது செயல்திட்டங்களுள் தலையாய விஷயங்களாக பகிரங்கமாக அறிவித்துக்கொண்டு புறப்பட்ட அமைப்பு.

மேலே பார்த்த அமைப்புகள் தவிரவும் சங் பரிவாரில் இன்று இன்னும் ஏராளமான உறுப்பினர்கள் உண்டு. மீனவர் கூட்டுறவு சொசைட்டி, விவேகானந்தா மெடிக்கல் மிஷன், பாரதிய ஆசிரியர்கள் சங்கம்,பாரதிய விகாஸ் பரிஷத், தீன் தயாள் ஷோத் சன்ஸ்தான், ராஷ்டிர சேவிகா சமிதி, ஹிந்து ஸ்வயம் சேவக் சங் (வெளிநாட்டு ஹிந்துக்களுக்கானது), பாரத் - திபெத் மெய்த்ரி சங், சாகர் பாரதி, பாரதிய விசார கேந்திரா, தீன் தயாள் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் என்று சுமார் இருபதுக்கும் மேற்பட்ட அமைப்புகள், நிறுவனங்கள், இயக்கங்கள் சங் பரிவாரில் உறுப்பினர்களாக உள்ளன.

இவற்றுள் ஒரு சில அமைப்புகளைத் தவிர மற்ற எதுவும் நாடு முழுதும் அறிந்த அமைப்புகள் அல்ல. ஆர்.எஸ்.எஸ்ஸின் நோக்கமும் அதுவல்ல.

ஒவ்வொரு அமைப்பும் அதன் வகுக்கப்பட்ட நோக்கத்தில் தெளிவாக முன்னேறிக்கொண்டிருக்கிறதா? போதும்.

வட இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு உள்ள செல்வாக்கு, ஒப்பீட்டளவில் மிக அதிகம். ஒரு தேசம், ஒரே இனம், ஒரே மொழி என்கிற வலதுசாரி இலக்கணம் இந்தியச் சூழலுக்கு முற்றிலும் பொருந்தக்கூடியது அல்ல எனினும் வட இந்தியாவில் அது ஓரளவு சாத்தியமே என்பதை யாரும் எளிதில் புரிந்துகொள்ள முடியும். ஹிந்தி பேசக்கூடிய மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ்ஸால் சுலபமாக ஹிந்துக்கள் மத்தியில் ஊடுருவிவிட முடிந்தது. சமஸ்கிருத சுலோகங்களையும் வேதங்களின் முக்கியத்துவத்தையும் முன்வைத்து வகுப்பெடுக்க முடிந்தது.

https://telegram.me/aedahamlibrary

இது தென் மாநிலங்களிலும் வட கிழக்கு மாநிலங்களிலும் அத்தனை சுலப சாத்தியமில்லை. அதனால்தான் தன் அடையாளத்தைக் கூடியவரை மறைத்துக்கொண்டு செயல்பட விரும்பும் ஆர்.எஸ்.எஸ்ஸைப் பற்றிய சரியான விவரங்களை நம்மால் அதிகம் பெற முடிவதில்லை. அதன் விமரிசகர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் வந்து அடைவதுபோல, அவர்களின் செயல்பாடுகள் நெருங்கி வருவதில்லை.

இனி வரும் அத்தியாயங்களில் ஆர்.எஸ்.எஸ்ஸைப் புரிந்துகொள்ள மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்த அறிமுகம் இப்போது போதும்.

கட்டுமானத்திலிருந்து ஆரம்பிக்கலாம்.

https://telegram.me/aedahamlibrary

# 6. மேலிருந்து கீழ், இடமிருந்து வலம்

அறுபது ஆண்டுகளாக வோட்டுப் போடும் சௌகரியத்துடன் வாழ்ந்து பழகிவிட்டவர்கள் இந்தியர்கள். பிரச்னைகளுக்குக் குறைவில்லாத ஜனநாயகம். ஊழல்களுக்குப் பஞ்சமில்லாத ஜனநாயகம். சுரண்டல்களுக்குப் பஞ்சமில்லாத ஜனநாயகம். ஆனாலும் பொம்மலாட்டக்காரர் நாம்தான். நூலின் நுனி நம்மிடம்தான் இருக்கிறது. கோபம் மிகும்போது எந்த பொம்மையையும் தூக்கிக் கடாச நம்மால் முடியும். விருப்பமான பொம்மைக்கு வாய்ப்புக் கொடுக்க முடியும். தனியாவர்த்தனங்களும் கூட்டணிக் கல்யாணங்களும் இந்திய மக்களின் அடிமன விருப்பமேயன்றி வேறல்ல. நாம் விரும்புகிறோம். அவர்கள் நிகழ்த்திவைக்கிறார்கள்.

இந்த ஜனநாயக ஏற்பாடு ஊழல் மிகுந்த கட்சி மட்டங்களிலும் கடைப்பிட்டிக்கப்படுவதுதான் பாரதத்தின் பண்பாட்டுச் சிறப்பு என்று நாம் அறிந்துவந்திருக்கிறோம். நிரந்தரத் தலைவர்களாக அறியப்படுபவர்கள்கூட ஒரு சம்பிரதாயத்துக்காகவேனும் போதிய இடைவெளியில் கட்சித் தேர்தலை அறிவிக்கிறார்கள். துணிந்து யாரும் போட்டியிட வராத சூழல் இருந்தபோதிலும் சடங்குகளை நாம் கைவிடுவதில்லை. தேர்தல் அறிவிப்பு. வேட்புமனுத் தாக்கல். ஏகமன தேர்ந்தெடுப்பு. செய்தித்தாள் மோட்சம். தீர்ந்தது விஷயம்.

ஆர்.எஸ்.எஸ். அப்படியல்ல. ஆர்.எஸ்.எஸ்ஸைப் புரிந்துகொள்ள அதன் ஷாகாக்களை முதலில் புரிந்துகொள்ளவேண்டும் என்று இடதுசாரி விமரிசகர்கள் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறார்கள். அதன் சரித்திரம் முழுதும். ஆனால், அது அத்தனை சரியானதாகத் தோன்றவில்லை. ஆர்.எஸ்.எஸ்ஸைப் புரிந்துகொள்ள அதன் தலைமையை முதலில் புரிந்துகொண்டாக வேண்டும்.

கட்சிகள், தொண்டர்களால் வாழ்கிறது. ஆர்.எஸ்.எஸ். அதன் தலைமையால் வாழ்கிறது.

ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவரை சர்சங்கசாலக் (Sarsanghchalak) என்று அழைப்பார்கள். இது ஒரு சமஸ்கிருதப் பிரயோகம். தலைவர் என்றுதான் பொருள். ஆனால் குறிப்பிடும்போதெல்லாம் 'பரமபூஜனீய ஸ்ரீ' என்று

https://telegram.me/aedahamlibrary

தவறாமல் சொல்லுவார்கள். ‘பூஜ்ய’ என்பதைச் சில மகான்களின் பெயர்களுக்குமுன் குறிப்பிடுவது இந்திய மரபு. ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர் அவர்களுக்கு அந்த ரகம். அப்படித்தான் சொல்லவேண்டும். அதுதான் மரியாதை. அவர் தேச சேவைக்காகத் தன் சொந்த வாழ்க்கையை முழுதாக அர்ப்பணித்தவர். படித்தவர். சிந்தனையாளர். தவிரவும் களப்பணி ஆற்றுவதில் வல்லவர். சிந்தனையாளர்கள் பெரும்பாலும் களத்துக்கு வருவதில்லை. ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர் அப்படிப்பட்டவரில்லை. தலைவர் என்பவர் குரு. ரிஷி போன்றவர். இங்கே அவர் ராஜ ரிஷி.

ராஜ ரிஷியைத் தேர்தல் வைத்தா தேர்ந்தெடுக்க முடியும்?

ஒரு சர்சங்கசாலக், அவருக்கு  முந்தைய சர்சங்கசாலக்கினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். எனக்குப் பின் இவர் என்று அடையாளம் காட்டப்படுகிறார். சங்கராசாரியார் தனது வாரிசைத் தேர்ந்தெடுத்துப் பட்டம் கட்டுவது போல இது. அரசியல் கட்சித் தலைவர்கள் தம் வாரிசை அரசியலுக்கு அழைத்து வருவது போல அல்ல. ஆர்.எஸ்.எஸ்ஸில் குடும்ப அரசியலுக்கு இடமில்லை. ஏனென்றால் குடும்பம் என்பது இங்கே இயக்கம் மட்டுமே.

இவர் ஏன் தலைவராகவேண்டும் என்று யாரும் கேட்டுவிட முடியாது. இவருக்கு பதில் ஏன் அவர் கூடாது என்று கருத்துச் சொல்ல வழியில்லை. தலைமைப் பதவி என்பது தலைமைப் பதவியில் இருப்பவரால் மட்டுமே தீர்மானிக்கப்படுவது. அது கேள்விக்கு அப்பாற்பட்டது. தலைவர் சரியாகத்தான் தேர்ந்தெடுப்பார். அவரதுதேர்வு தவறிப்போக வாய்ப்பில்லை. ஏனென்றால் அவர் ஒரு தேசபக்தர். அவர் ஓர் அறிவுஜீவி. அவர் ஒரு ரிஷி.

டாக்டர் ஹெட்கேவார், தனக்கடுத்த சர்சங்கசாலக்காகத் தேர்ந்தெடுத்தவர், மாதவ சதாசிவ கோல்வால்கர். கோல்வால்கர், மதுகர் தத்தாத்ரேய தியோரஸ் என்ற பாலா சாஹேபைத் தேர்ந்தெடுத்தார். பாலா சாஹேப், ப்ரொபசர் ராஜேந்திர சிங்கை இனம் கண்டார். ராஜேந்திர சிங், குப்பஹள்ளி சீதாராமய்யா சுதர்சனைத் தலைவராக்கினார். சுதர்சன், மோகன் மதுகர் பாகவதை நியமித்தார்.

இடையில் ஒரு முறை - ஒரே ஒருமுறை ஓர் இடைக்காலத் தலைவர் சிறிது காலத்துக்கு இருந்திருக்கிறார். அது 1930-31ம் ஆண்டுக் காலக்கட்டம். டாக்டர் ஹெட்கேவார் சிறைக்குச் செல்லுமுன் தாற்காலிக ஏற்பாடாக டாக்டர் லக்ஷ்மண் பராஞ்ச்பே என்பவரை இயக்கத்தைப்

https://telegram.me/aedahamlibrary

‘பார்த்துக்கொள்ள’ச் சொல்லிவிட்டுப் போனார். திரும்பி வந்ததும் பராஞ்ச்பே விலகிக்கொண்டார். ஹெட்கேவார் பொறுப்புகளைத் திரும்ப ஏற்றார்.

அவ்வளவுதான். எண்பத்தி ஐந்தாண்டு சரித்திரம் கொண்ட ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு ஆறே தலைவர்கள். தன் சரித்திரத்தின் எந்தக் கட்டத்திலும் தலைமை குறித்த விமரிசனம் எதையும் சந்திக்காத ஒரே இயக்கம் இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ்தான் என்பதை கவனிக்கவேண்டும். சர்சங்கசாலக் என்பவர் தம் வாழ்நாள் முழுதும் தலைவராக இருப்பார். அல்லது ‘இனி முடியாது’ என்று உடல்நலம் சார்ந்த காரணங்கள் மேலோங்கும் காலம் வரை. போரடிக்கிறது என்று யாரும் சொல்லிவிட முடியாது.

கேள்விக்கு அப்பாற்பட்ட இடத்தில் தலைமைப் பதவியைக் கொண்டு வைத்ததன்மூலம் டாக்டர் ஹெட்கேவார் சில சௌகரியங்களைச் சாத்தியமாக்கிக்கொள்ள முடிந்தது. ஜனநாயகத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் விவாத, விமரிசன கேலிக்கூத்துகள் அறவே தவிர்க்கப்பட்டன. இவர் தலைவர். இது முடிவு. தீர்ந்தது விஷயம்.

ஆனால் 1949ம் ஆண்டு தடை விலக்குதல் பொருட்டு பிரதமர் நேரு விதித்த கெடுபிடிகளின் காரணத்தால், சில நிர்வாக அடுக்குமுறை ஏற்பாடுகளை ஆர்.எஸ்.எஸ். பின்பற்ற வேண்டியிருந்தது. நிர்ப்பந்தத்தால் உருவான ஏற்பாடுதான். வேறு வழியில்லை. இல்லாவிட்டால் கார்யகார் சமிதி என்ற அமைப்புக்கு இயக்கத்தில் இடமிருந்திருக்க வாய்ப்பே இல்லை. அதாவது, செயற்குழு.

எனவே ஒரு பொதுச்செயலாளர். சர்கார்யவாஹ் என்பார்கள். தினசரி நடவடிக்கைகளை அவரும் அந்தக் குழுவும் பார்த்துக்கொள்ளும். கணக்கு வழக்குகள், உறுப்பினர் பட்டியல், சேர்க்கை, விலக்க விவரங்கள், கூட்டங்கள், செயல்பாடுகளை ஒழுங்கு செய்வது இன்ன பிற.

ஆனால் சந்தேகமில்லை. முக்கிய முடிவுகளைத் தலைவர்தான் எடுப்பார். சட்டத்துக்குக் கட்டுப்படவேண்டும். எனவே எடுக்கும் முடிவுகளைச் செயற்குழு அறிவிக்கும். பொதுச்செயலாளர் பொதுவில் சொல்லுவார்.

எந்த ஓர் அமைப்பின் தலைவரைத் தேர்ந்தெடுக்கவும் தேர்தல் முறையைப் பின்பற்றுவது இந்திய வழக்கம். முன்பே பார்த்தோம். சட்டப்படி இயங்கும் அமைப்புகள் அனைத்துக்கும் இந்த இலக்கணம் பொது. ஆர்.எஸ்.எஸ். சட்டத்துக்கு உட்பட்டு இயங்கும்

https://telegram.me/aedahamlibrary

இயக்கமாகத்தான் அறியப்படுகிறது. ஆனாலும் தலைமைத் தேர்வு என்பது முந்தைய தலைவரின் தேர்வுதான்.

சிறு வித்தியாசம். அவர் தேர்ந்தெடுத்துவிடுவார். ஒரு வாக்குமூலம் மாதிரி எழுதியும் வைத்துவிடுவார். செயற்குழுவின் ஏகமனத் தேர்வாகப் பிறகு அது அறிவிக்கப்படும். எப்படியும் தலைவர் இறந்த பிறகுதான் இது நடக்குமென்பதால் அப்போது கேள்வியெழ வாய்ப்பில்லை.

*

ஆர்.எஸ்.எஸ்ஸின் அதிகாரப் படிக்கட்டில் அடுத்து வருவர் பிரசாரக்.

ஒரு பிரசாரக்கை அதிகாரி என்று சொல்லக்கூடாது. நியாயப்படி அது பிழையானது. அவர் உழைப்பாளி. நாம் கற்பனை செய்யக்கூடிய எல்லைகளையெல்லாம் உடைத்துக்கொண்டு விரிந்து பறக்கவல்லது அந்த உழைப்பு. ஹிந்து தேசியம் என்னும் ஆர். எஸ்.எஸ்ஸின் ஒற்றைப் பெருங்கனவைச் சுமந்துகொண்டு தேசமெங்கும் சென்று மக்களிடையே பரப்புகிற பெரும்பணி இவர்களுடையது. உண்மையில் மக்களுக்கும் ஷாகாக்களுக்கும் - ஷாகாக்களுக்கும் பிராந்தியத் தலைமையகத்துக்கும் - பிராந்தியத் தலைமையகத்துக்கும் மத்தியக் குழுவுக்கும் இடையே ஒரு பெரும் பாலமாகச் செயல்படுவது இவர்கள்தாம்.

ஆர்.எஸ்.எஸ்ஸில், பிரசாரக் என்னும் பொறுப்பில் இருப்பவர் ஒரு முழுநேர ஆர்.எஸ்.எஸ் சேவகர் என்று புரிந்துகொள்ளவேண்டும். ஷாகாக்களில் தயாராகிறவர்தான். ஷாகாவில் எத்தனையோ லட்சக்கணக்கானவர்கள்தான் தயாராகிறார்கள். ஆனால் எல்லோரும் பிரசாரக் ஆகிவிடுவதில்லை.

ஓர் உறுப்பினரின் அற்பணிப்புணர்வு, தேச பக்தி, தன்னலமற்ற உழைப்பு, படிப்பு, ஆர்வங்கள், அக்கறைகள், ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழி அறிவு ஆகியவற்றை வைத்து ஒரு பிரசாரக் தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் கண்டிப்பாக இளைஞராக இருப்பார். பெரும்பாலும் இருபத்தி ஐந்து வயதுக்குட்பட்டவராக. கண்டிப்பாக பிரம்மச்சாரியாக இருப்பார். குடும்பப் பொறுப்புகள் இல்லாதவராக. கண்டிப்பாகப் பயணங்களில் பெருவிருப்பம் கொண்டவராக இருப்பார். தேசத்தின் எந்த மூலைக்கும் எப்போது உத்தரவிட்டாலும் உடனே கிளம்பத் தயார் நிலையில் உள்ளவராக.

அவருக்குச் சம்பளம் கிடையாது. செய்வது தேசப்பணி. அதற்கென்ன

https://telegram.me/aedahamlibrary

சம்பளம்? உண்ணத் தேவையான உணவு கிடைக்கும். போட்டுக்கொள்ளவும் மாற்றிக்கொள்ளவும் உடுப்புகள் இருக்கும். போகவர ஆகும் செலவுகளை மட்டும் இயக்கம் ஏற்கும். சோப்பு சீப்பு எண்ணெய்க்குப் பிரச்னை இருக்காது. எங்கு போனாலும் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்திலேயே அவர் தங்க இடம் தரப்படும். மற்றபடி வேலை முக்கியம். சேவை முக்கியம்.

நான்கு முக்கியப் பணிகளை இந்தப் பிரசாரக்குகள் மேற்கொள்கிறார்கள். தேசமெங்கும் உள்ள ஆர்.எஸ்.எஸ் ஷாகாக்களின் செயல்பாடுகளை கவனிப்பது. எங்கும் தேக்கம் வராமல் அது சீராக இயங்க வழி செய்வது. புதிய ஷாகாக்களைத் திறக்க முயற்சி செய்வது. அதன்பொருட்டுப் பல்வேறு பிராந்தியங்களில் மக்களிடம் சென்று பேசி, ஆர்.எஸ்.எஸ்ஸின் செயல்பாடுகளை விளக்குவது, புரியவைப்பது.

ஒருவரியில் சொல்லுவதென்றால் ஆர்.எஸ்.எஸ் என்னும் இயக்கம் ஷாகாக்கள் மூலம் விரிவடைந்துகொண்டே செல்வதன் சூத்திரதாரிகளாகப் பணியாற்றுபவர்கள் பிரசாரக்குகள்.

இவர்கள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி. ஆர்.எஸ்.எஸ். தலைமை எங்கு பணியாற்ற அனுப்புகிறதோ அங்கு செல்லவேண்டும். எத்தனை புதிய கலாசார சூழலிலும் வெகு எளிதாகத் தங்களைப் பொருத்திக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கவேண்டும். கனிவான பேச்சு. அக்கறை மிக்க கவனிப்பு. புதியவர்களை எதிர்கொள்ள பிரசாரக்குகள் தயங்குவதே இல்லை. அவர்களுக்கு அதற்கான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. எப்படிப் பேசவேண்டும். என்ன பேசவேண்டும். எதிராளியின் மனத்தை ஊடுருவி, அவரது நிஜமான விருப்பம் என்னவென்று அறிவது எப்படி? சிறுவர்களை, இளைஞர்களைக் குறிவையுங்கள். பண்படுத்தச் சரியான இனம் அவர்கள்தாம். இந்திய உணர்வென்பதும் ஹிந்து உணர்வென்பதும் வேறு வேறல்ல என்று சொல்லுங்கள். தேசபக்தி முக்கியம். அதற்குப் பிறகுதான் மற்றவை என்று சொல்லுங்கள்.

1939ம் ஆண்டு, முதல் முதலில் தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ்ஸின் ஷாகாவை நிறுவுவதற்காக டாக்டர் ஹெட்கேவார், தாதாராவ் பரமார்த் என்னும் பிரசாரக்கைச் சென்னைக்கு அனுப்பினார். ராயப்பேட்டையில் லார்ட் கோவிந்ததாஸ் பங்களா என்னும் இடத்தில் நடைபெற்ற ஆரிய சமாஜக் கூட்டம் ஒன்றில் அவர் முதல் முறையாகப் பேசினார். சுருக்கமான, வெளிப்படையான பேச்சு. நான் வந்திருப்பது ஆர்.எஸ்.எஸ்ஸின் ஷாகாவைத் தமிழகத்தில் நிறுவுவதற்கு.

https://telegram.me/aedahamlibrary

விருப்பமிருப்பவர்கள் வரலாம். அவ்வளவுதான்.

ஒரு சிலர் முன்வந்தார்கள். ராயப்பேட்டையிலும் பட்டாளத்திலுமாக இரண்டு கிளைகள் தொடங்கப்பட்டன. இரு கிளைகளின் உறுப்பினர்களுக்கும் சேர்த்து வாரம் ஒருமுறை செண்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பின்னால் இருந்த மைதானத்தில் பயிற்சியளிக்க ஆரம்பித்தார்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் ஷாகாக்களில் கையில் ஒரு கழி ஏந்தி பரேடு நடத்தி, வீர விளையாட்டுகளை ஆரம்பிப்பது ஒரு மரபு. சென்னையில் முதல் முதலாக அப்படியொரு காட்சியைக் கண்ட போலீசார், தாதாராவ் பரமார்த்தைக் கைது செய்துவிட்டார்கள்.

பிறகு கோர்ட், வழக்கு என்று ஒருவாறு அந்த விவகாரம் முடிவுக்கு வந்தது ஒரு புறமிருக்க, அந்த வழக்கில் தாதாராவுக்காக வாதாட வந்த வி. ராஜகோபாலாச்சாரி என்ற வழக்கறிஞரே பின்னாளில் ஆர்.எஸ்.எஸ்ஸில் இணைந்து, தமிழகத்தின் முதல் பிராந்தியத் தலைவராகவு ம் ஆனார்.

தனக்காக வாதாட வந்த வழக்கறிஞரை இயக்கத்தின்பால் ஈர்த்தது பெரிய விஷயமல்ல. பட்டாளத்தில் தொடங்கிய ஷாகாவில் ஆயிரக்கணக்கான பி அண்ட் சி மில் ஊழியர்களைச் சேர்த்து அவர்களை ஆர்.எஸ்.எஸ்காரர்களாக்கியதுதான் தாதாராவ் பரமார்த் என்னும் பிரசாரக்கின் அசுர சாதனை.

மில் ஊழியர்களுக்குத் தமிழைத் தவிர வேறு மொழி தெரியாது. தாதாராவ் மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்தவர். அவருக்கு ஹிந்தியும் ஆங்கிலமும் தெரியும். அதனால் சென்னை பி அண்ட் சி மில் ஊழியர்களுக்கு எந்தப் பயனுமில்லை. இவர் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும்தான் பேசுவார். அவர்களுக்கு அது சர்வ நிச்சயமாகப் புரியாது. ஆனாலும் வந்தார்கள். விடாமல் வந்தார்கள்.

தாதாராவ் தமிழகத்தை விட்டுப் புறப்பட்டு அஸ்ஸாமுக்குப் பணியாற்றச் சென்றபோது ரயில் வே ஸ்டேஷனில் ஆயிரக்கணக்கான பி அண்ட் சி மில் ஊழியர்கள் கூடி நின்று கண் கலங்க வழியனுப்பிய காட்சியைப் புல்லரித்துப் பேசுவார்கள் தமிழக ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்.

எப்படிச் சாத்தியமானது?

தாதாராவ் ஒரு சமயம் சொன்னார்: ‘என் மொழி அவர்களுக்குப் புரியாவிட்டால் பிரச்னையில்லை. என் உணர்வுகள் அவர்கள்மீது

https://telegram.me/aedahamlibrary

தாக்கம் ஏற்படுத்தியே தீரும்'* (*வெற்றிப்பாதையில் தமிழக ஆர்.எஸ்.எஸ் - சிறு பிரசுரம்)

ஒரு பிரசாரக்கிடம் இந்தத் திறமை இருந்தாக வேண்டியது அவசியம்!

முதல் ஒரு வருடம் வரை இந்த முழுநேரப் பிரசாரக் பணியாற்ற வருகிறவர்களை 'விஸ்தாரக்' என்று அழைப்பார்கள். அந்தப் பயிற்சிக்காலம் முடிவடைந்து மேற்கொண்டு பணியைத் தொடர்ந்தால் அவர் முழுமையான பிரசாரக். விருப்பப்படும் காலம் வரை அவர் பணியில் தொடரலாம்.

இந்தியாவெங்கும் சுமார் மூவாயிரம் முதல் மூவாயிரத்தி ஐந்நூறு பிரசாரக்குகள் இன்று இயங்குவதாகத் தெரிகிறது.  இதன் சரியான எண்ணிக்கை விவரம் கிடைக்கவில்லை.

*

பிரசாரக்குகளுக்கு அடுத்த நிலையில் பிராந்தியக் கிளைத் தலைமை வருகிறது.

நான்கைந்து ஷாகாக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற கணக்கில் தேர்ந்தெடுக்கப்படுவது ஒரு மண்டலக் குழு. இதற்குமேல் மாவட்ட அளவில் பல்வேறு மண்டலக் குழுக்களின் கூட்டுக்குழு. அதன் தொகுப்பாக ஒரு மாநிலக் குழு. அதற்கு ஒரு தலைவர். சங்கசாலக் என்பார்கள்.

பெரிய அதிகாரங்கள் கிடையாது இவருக்கு. ஷாகாக்களை ஒருங்கிணைப்பதும் அன்றாட நிகழ்ச்சிகள் ஒழுங்காக நடைபெறுவதை உறுதி செய்வதுமாக இவரது அதிகார எல்லை வரம்புகளுக்குட்பட்டது. மாநிலத்துக்குள் என்ன முடிவு எடுக்கவேண்டுமானாலும், தலைமை அனுப்பியிருக்கும் பிரசாரக்குடன் கலந்து பேசியே இவர் எதையும் செய்ய முடியும்.

ஜனநாயக இந்தியாவில் கவர்னர்களுக்குப் பெரும்பாலும் அதிகாரம் இருப்பதில்லை. அவர் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடவேண்டியவர். ஆனால் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்குள், கவர்னர் மாதிரியான பொறுப்பில் மாநிலங்களுக்கு அனுப்பப்படும் பிரசாரக்குகள், மாநிலத் தலைவர்களைக் காட்டிலும் அதிகாரம் மிக்கவர்கள்.

https://telegram.me/aedahamlibrary

இது பற்றிய வருத்தமோ, கவலையோ, விமரிசனமோ பொதுவில் யாருக்கும் இருப்பதில்லை. பதவி, அதிகாரங்கள் குறித்து ஆர்.எஸ்.எஸ்ஸில் யாரும் கவலைப்படுவதாகத் தெரிவதில்லை. அவரவர் பொறுப்பு அவரவருக்கு என்று மிகத் தெளிவாகச் சொல்லித்தரப்பட்டுவிடுகிறது. அத்தனை பேரின் கவனமும் குவிகிற இடம் ஷாகாக்கள்தாம். ஒரு ஆர்.எஸ்.எஸ். தொண்டர் உருவாகிற இடம். அல்லது தனக்கான தொண்டர்களை ஆர்.எஸ்.எஸ். உருவாக்குகிற இடம்.

ஒரு பொதுவெளி. நிச்சயமாக அது ஒரு மைதானம்தான். அங்குதான் ஷாகாக்கள் நடத்தப்படுகின்றன. மக்கள் பார்வையில் படவேண்டும் என்பது அடிப்படை நோக்கம். எனவே மூடிய கதவுக்குள் பயிற்சிகள் கிடையாது. இருக்கும். ஆனால் அதெல்லாம் அப்புறம். உறுப்பினரான பிறகு. தொடக்கத்தில் திறந்தவெளி. திறந்த மனம். திறந்த செயல்பாடு.

ஒவ்வொரு ஷாகாவிலும் உறுப்பினர்களை நான்கு குழுக்களாக முதலில் பிரிக்கிறார்கள். பத்து வயதுக்குட்பட்டவர்கள் தனிப்பிரிவு. அவர்கள் சிசு ஸ்வயம்சேவகர்கள். பத்து முதல் பதினான்கு, பதினைந்து வயதுக்குட்பட்டவர்களின் பிரிவு பால ஸ்வயம்சேவக் பிரிவு என்று அழைக்கப்படுகிறது. அடுத்தப் பிரிவில் இருபத்தி ஏழு, இருபத்தியெட்டு வயதுக்காரர்கள் வரை இருப்பார்கள். அது தருணா ஸ்வயம்சேவகர்கள் பிரிவு. இருபத்தியெட்டுக்கு மேற்பட்ட வயதினர்க்குத் தனிப்பிரிவு. ப்ரவுத் என்பார்கள்.

ஒரு ஷாகா தொடங்கப்படும்போது முதலில் வாரம் ஒருமுறை கூடுவது பெரும்பாலும் வழக்கம். பிறகு மெல்ல மெல்ல ஷாகாவின் செயல்பாடு, தினசரிச் செயல்பாடாக மாற்றப்பட்டுவிடும். சரியாக ஒரு மணிநேரம்தான் அந்தச் சந்திப்பு.

உடற்பயிற்சிகள். பாரம்பரிய விளையாட்டுகள். குஸ்தி போன்ற சில வீர விளையாட்டுகள். அப்புறம் சிறு சித்தாந்த வகுப்பு. தேச பக்திச் சொற்பொழிவு. கலந்துரையாடல். தேசபக்திப் பாடல்கள். முடிந்தது.

ஷாகாக்களுக்கு வருபவர்கள், பிராந்திய ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்துக்கு எப்போதும் வரலாம். அங்கிருக்கும் மூத்தவர்களுடன் பேசலாம். கலந்து பழகலாம். இயக்கம் அதை ஊக்குவிக்கிறது. அவசியம் என்று கருதுகிறது. ‘ஷாகாவுக்கு வருகிறவர்கள், உடற்பயிற்சியுடன் திரும்பிப் போவது பெரும்பாலும் நடப்பதில்லை. வெகு நிச்சயமாக அவர்களில் பெரும்பாலானோர் ஆர்.எஸ்.எஸ்ஸின் உறுப்பினர்களாகிவிடுவார்கள்.

https://telegram.me/aedahamlibrary

தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ்ஸின் செயல்பாடுகளில் பங்கு பெறுவார்கள். அபூர்வமாக, குடும்பச் சூழல் காரணமாக ஒரு சிலர் ஷாகாக்களில் மட்டும் பங்குபெற்று, உறுப்பினராகாமல் போவதுண்டு. ஆனால் ஒன்று நிச்சயம். இங்கு வருபவர்களில், ஆர்.எஸ்.எஸ்ஸின் செயல்பாடு பிடிக்கவில்லை; இந்த இயக்கம் சரியான பாதையில் போகவில்லை என்று குற்றம் சாட்டிவிட்டுப் போகிறவர்கள் யாரும் கிடையாது' என்றார்கள், இந்த நூலுக்காகச் சந்தித்த சில ஆர்.எஸ்.எஸ்காரர்கள்.

மேலோட்டமான பார்வையில் ஷாகாக்களின் செயல்பாடு மிகச் சாதாரணமாகத் தோன்றலாம். ஒரு மணி நேரத்துக்குமேல் அவர்கள் நிச்சயம் கூடுவதில்லை. ஆனால் 'ஹிந்து தர்மம்', 'ஹிந்து கலாசாரம்', 'ஹிந்து சமூகம்', 'ஹிந்து தேசியம்' என்னும் பதங்கள் மிகச் சரியான விகிதத்தில் கலந்து அளிக்கப்படுகிற சிறு சொற்பொழிவுகளில், கிறிஸ்தவ மத மாற்ற முயற்சிகள், தீவிரவாத முஸ்லிம்களின் நாசகாரச் செயல்கள் குறித்த விவரிப்பில், தனி மனித ஒழுக்கத்தை, தியாகத்தை முன்னிறுத்திச் சொல்லப்படும் புராண, இதிகாசக் கதைகளில், ஷாகாக்களில் சாதிபேதமற்ற சமத்துவம் பேணப்படுகிற விதத்தில் ஆர்.எஸ்.எஸ்ஸின் செயல்வீரர்கள், ஹிந்து சிறுவர்கள்-இளைஞர்களை வெகு எளிதாக ஊடுருவிவிடுகிறார்கள். மதத்தை முன்வைத்த ஒரு மாபெரும் அரசியல் செயல்திட்டம், நேரடித் தேர்தல் அரசியலுக்குச் சம்பந்தமில்லாத இந்த இயக்கத்தினால் இதன்மூலம் வடிவமைக்கப்பட்டுவிடுகிறது.

பி.ஆர். தீரஜ் என்ற ஒரு ஆர்.எஸ்.எஸ். பிரசாரக், தமது இயக்கத்தைப் பற்றி ஒரே வரியில் எழுதியிருப்பதை இந்த இடத்தில் சொல்லி, முடிக்கலாம்.

"The RSS begins with the shakha, and ends with the shakha. Other than the shakha, there is nothing more to the RSS.'

தீரஜ், சோற்றுக்கு வழியற்று ஆர்.எஸ்.எஸ்ஸில் சேர்ந்தவரல்லர். இயந்திரவியல் பொறியாளர் பட்டம் பெற்று, டெல்லி ஐ.ஐ.டியில் எம் டெக் முடித்து, புனாவில் இன்ஃபோசிஸ் நிறுவனத்தில் பணியாற்றியவர். பெங்களூர்க்காரரான தீரஜ், ஷாகாவுக்குப் போகத் தொடங்கி மெல்ல மெல்ல ஆர்.எஸ்.எஸ்ஸால் ஈர்க்கப்பட்டு 2007ல் அதில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டவர். வட கர்நாடகத்தில் பிரசாரக்காகப் பணியாற்றுவதற்காகத் தன் வேலையை விட்டுவிட்டு முழு நேர ஆர்.எஸ்.எஸ். ஊழியராக மாறியவர்.

https://telegram.me/aedahamlibrary

எனவே அவர் எழுதியது சரியே என்றாகிவிடுகிறதல்லவா?
[ஆர்.எஸ்.எஸ். என்பது ஷாகாவில் ஆரம்பித்து ஷாகாவில் நிறைகிறது.]

https://telegram.me/aedahamlibrary

# 7. தேசம் எங்கள் உயிர்மூச்சு

டிசம்பர் 4, 1970 தேதியிட்ட எகனாமிஸ்ட் இதழ், சங் பரிவார் குறித்து எழுதும்போது, ‘இடதுசாரி அல்லாத, உலகின் ஒரே புரட்சிகர இயக்கம்’ என்று குறிப்பிட்டது. எந்தக் குறிக்கோளுடன் மகாத்மா காந்தி படுகொலைச் சம்பவத்துக்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ். தனது கிளைகளை அகல விரிக்கத் தொடங்கியதோ, அந்தக் குறிக்கோளில் சற்றும் தொய்வில்லாமல் முன்னேறத் தொடங்கியிருந்தது. வலுவான அரசியல் இயக்கம். வளமான தொண்டர் படை. மூலைக்கொன்று, பிரச்னைக்கொன்றாகத் துணை இயக்கங்கள். அனைத்துக்கும் மேலாக அவர்களை மக்களிடையே கொண்டு சேர்க்க வாகாக அமைந்த சில அருமையான சந்தர்ப்பங்கள். அது மிக முக்கியமானது.

போர்த்துகீசியர் பிடியிலிருந்து கோவாவின் பகுதிகளை விடுவிப்பதில் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் ஆற்றிய பங்கை முதலில் குறிப்பிடவேண்டும். ஒரு தேசிய இயக்கமாகத் தன்னைத் தொடர்ந்து முன்னிறுத்தி வந்த ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு, இந்தச் சம்பவத்துக்குப் பிறகு வட இந்தியாவில் குறிப்பிடத்தகுந்த அளவு செல்வாக்கு சட்டென்று உயர்ந்தது முக்கியமானது.

இன்று இந்தியாவின் யூனியன் பிரதேசங்களாக அறியப்படும் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, ஒரு காலத்தில் (என்றால் 1783) போர்த்துகீசியருக்குச் சொந்தமான பகுதிகள் என்று அக்காலத்து மராட்டிய மன்னர் ஒருவரால் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தது. ஒரு போர்த்துகீசியக் கப்பலை மராத்தியக் கடற்படை மூழ்கடித்துவிட்டது. விஷயம் பெரிதாகாமல் இருக்கவேண்டும். என்ன செய்யலாம்? சரி, இந்தப் பிரதேசங்களை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். பகை வேண்டாம். சமாதானமாகப் போய்விடுவோம் என்று பேசிக்கொண்டார்கள். தாத்ராவும் நாகர் ஹவேலியும் அப்படித்தான் போர்த்துகீசியக் காலனிகளாக ஆயின. கோவாவின் மற்ற பகுதிகளை அவர்களே வாங்கியும் வளைத்தும் தம் வசப்படுத்திக்கொண்டார்கள்.

இந்தியா சுதந்தரமடைந்து, சமஸ்தானங்கள் இணைக்கப்பட்டு, காஷ்மீரும் ஒரு வழியாக இந்தியாவுடன் இணைந்து, அதன்பொருட்டு

https://telegram.me/aedahamlibrary

பாகிஸ்தானுடன் ஒரு சண்டை போட்டு ஓய்ந்த பிற்பாடும் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி உள்ளிட்ட கோவாவின் பகுதிகள் போர்த்துகீசிய காலனிகளாகவே இருந்தது, அநேகமாக இந்தியாவில் இருந்த அனைத்து அரசியல் கட்சிகள், இயக்கங்களுக்குமே நெருடும் விஷயமாக இருந்தது.

என்னவாவது செய்து இதை மீட்கவேண்டும். ஆனால் என்ன செய்வது? அரசு உள்பட அத்தனை தரப்பும் அதைத்தான் யோசித்துக்கொண்டிருந்தன. ஆனால் செயல் என்று முதலடி எடுத்து வைத்தது ஆர்.எஸ்.எஸ்.தான்.

1954ம் ஆண்டு, நானா கஜ்ரேகர் - ராஜா வகாங்கர் என்னும் இரு ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள் இது விஷயமாக அதிகபட்ச சாத்தியங்கள் என்னென்ன என்று அறிந்து வருவதற்காக தாத்ரா-நாகர் ஹவேலிக்குச் சென்றார்கள்.

பிப்ரவரி தொடக்கத்தில் தாத்ராவுக்குச் சென்ற இந்த இரண்டு ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களும் அந்தப் பகுதியில் வசித்து வந்த ஹிந்துக்களுடன் ரகசியமாகத் தொடர்ந்து பேசினார்கள். அங்குள்ள அமைப்புகள், விடுதலை விருப்பம் கொண்ட இயக்கங்களை அணுகி ஆதரவு கேட்டார்கள். இந்திய மண்ணில் போர்த்துகீசிய காலனி ஒன்று இனியும் இருப்பதில் அர்த்தமில்லை. தவிரவும் அதை வைத்துக்கொண்டிருப்பது ஒரு தேசிய அவமானம். போர்த்துகீசியர்களை விரட்டிவிட்டுத்தான் மறு காரியம்.

ஆசாத் கொமாந்தக் தல் மற்றும் நேஷனல் மூவ்மெண்ட் லிபரேஷன் ஆர்கனைசேஷன் என்னும் இரு புரட்சிகரக் குழுக்கள் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு உதவ முன்வந்தன.

ஒரு திடீர்த் தாக்குதல் நிகழ்த்தி, போர்த்துகீசியக் காவல் நிலையத்தை அழித்து, காவலர்களைச் சிறைப்பிடித்துவிடுவதன்மூலம் பகுதியை விடுதலை செய்துவிட்டதாக அறிவிப்பது அவர்களுடைய நோக்கம். மகாராஷ்டிரம் மற்றும் குஜராத்தின் எல்லையில் ஒரு பொட்டு வைத்த மாதிரி இருக்கும் மிகச் சிறிய நிலப்பரப்புதான். போர்த்துகீசியக் காலனி என்று சொல்லப்பட்டாலும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் பாதுகாப்போடு சரி. ஓரிரவு போதும். வீழ்த்திவிடலாம் என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

அடிப்படையில் அந்தப் பகுதியில் வசித்து வந்த மக்கள் போர்த்துகீசியர் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடுவதை மனமார விரும்பியதுதான்

https://telegram.me/aedahamlibrary

அனைத்துக்கும் ஆதாரப்புள்ளி. ஆனால் யாராவது முயற்சி எடுக்கவேண்டும். ஏதாவது செய்யவேண்டும். யார் செய்வார்கள்? எப்படிச் செய்வார்கள்?

அந்தக் கேள்விக்கு விடை சொல்லும் முகமாகத்தான் ஆர்.எஸ்.எஸ். களமிறங்கியிருந்தது.

ஜூலை 21ம் தேதி இரவைத் தாக்குதலின் முதல் கட்டத்துக்கு அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். முன்னதாக, செய்தி வெளியே பரவாதிருக்கும்பொருட்டு மிகுந்த ரகசியம் காக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்குள்ளேயே, நேரடிப் பணியில் ஈடுபடுவோர் தவிர வேறு யாருக்கும் தகவல் தெரிவிக்கப்படவில்லை. பயிற்சி பெற்ற ஆர்.எஸ்.எஸ். இளைஞர்களைக் கொண்ட ஒரு படை இதற்காக உருவாக்கப்பட்டது. அவர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் ரகசியமாகத் தருவிக்கப்பட்டன.

திட்டமிட்டிருந்தபடி நள்ளிரவுக்குப் பிறகு அவர்கள் தாத்ரா காவல் நிலையத்தின்மீது பாய்ந்து தாக்கத் தொடங்கினார்கள். அதிக சமயம் எடுக்கவில்லை. இம்மாதிரியான ஒரு தாக்குதலைச் சற்றும் எதிர்பாராத அங்கிருந்த போர்த்துகீசியக் காவலர்கள், சுதாரிக்கும் முன்னர் முற்றிலுமாக வீழ்த்தப்பட்டுவிட்டார்கள்.

காவல் நிலையத்தைக் கைப்பற்றிய புரட்சியாளர்கள், அந்தக் கணமே தாத்ரா விடுவிக்கப்பட்டுவிட்டதாக அறிவித்தார்கள்.

சரியாக ஒரு வாரம். 28ம் தேதி இதே போன்றதொரு அதிரடித் தாக்குதலைத் தலைநகர் சில்வாஸா மற்றும் நரோலி, பிபாரியா நகரங்களில் உள்ள காவல் நிலையங்களின்மீதும் நிகழ்த்தினார்கள். தாக்குப் பிடிக்க முடியாமல் தப்பி ஓடிய போர்த்துகீசியக் காவலர்களை விரட்டிச் சென்று வளைத்துப் பிடித்து, இந்திய எல்லையில் உள்ள காவல் நிலையத்தில் சரணடைய வைத்தார்கள்.

இந்த அதிரடிச் சம்பவங்களும், இதன் பின்னணியில் உள்ள தேசிய உணர்வும் தேசமெங்கும் உள்ள ஹிந்துக்கள் மத்தியில் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு மிகுந்த மதிப்பை உருவாக்கியது. தாத்ரா - நாகர் ஹவேலிச் சம்பவம்தான் உண்மையில் கோவா விடுதலை முயற்சிகளுக்கான சரியான தொடக்கமாக அமைந்தது. கோவாவில் வசித்துவந்த மக்களிடையே இது பெரும் மனவெழுச்சியை உண்டாக்கி, தங்கள் சுதந்தரத்துக்குத் தீவிரமாக உழைக்கும் உத்வேகத்தை அளித்தது.

https://telegram.me/aedahamlibrary

1955ம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். இந்திய அரசிடம் மிகத் தீவிரமாக கோவா பிரச்னைக்கு முக்கியத்துவம் தந்து ஒரு தீர்வு காண வற்புறுத்த ஆரம்பித்தது. ஒரு சிறு ராணுவ நடவடிக்கை போதும். எளிதில் விழுந்துவிடும். இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கும் கோவாவில் அர்த்தமற்ற அன்னிய ஆட்சியை அகற்றுவது ஒரு தேசியக் கடமை. அதை உடனே செய்துமுடிக்க நேரு ஏன் தயங்குகிறார்?

இல்லை. ராணுவ நடவடிக்கை வேண்டாம், அது கூடாது என்று நேரு சொன்னார். ஏற்க மறுத்து, ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர்களுள் ஒருவரான ஜகன்னாத் ராவ் ஜோஷி நேரே கோவாவுக்குச் சென்று சத்தியாகிரகம் ஆரம்பித்தார்.

அவரைப் போர்த்துகீசிய போலீஸ் கைது செய்தது. அதை எதிர்த்து ஏராளமான ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் தொடர்ந்து சத்தியாகிரகத்தில் இறங்க, 1955 இந்திய சுதந்தர தினத்தன்று போர்த்துகீசிய போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறங்கியது. முப்பது பேர் உயிரிழக்க, விஷயம் இன்னும் பெரிதானது.

மறுநாள் நாடாளுமன்றத்தில் ஜவாஹர்லால் நேரு கோவாவின் போர்த்துகீசிய ஆட்சியாளர்களைக் கடுமையாகக் கண்டித்துப் பேசினார். இதென்ன காட்டுமிராண்டித்தனம்? அமைதியாக சத்தியாகிரகம் இருந்தவர்கள் மீது இப்படியொரு தாக்குதலா? கொடூரமான, மனிதத் தன்மையற்ற செயல்.

ஆனால் தொடரத்தான் செய்தது. 1961 வரை போர்த்துகீசிய காலனிப் பகுதிகளின்மீது ராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ்ஸின் கோரிக்கையை நேரு ஏற்கவில்லை. அமைதி வழியில் முயற்சி செய்யவே அவர் விரும்பினார்.

ஆனால் இறுதியில் ராணுவ நடவடிக்கைதான் சரி என்ற முடிவுக்கே அவரும் வரவேண்டியிருந்தது. அது நடந்தது டிசம்பர் 18, 1961. கோவா அதற்கு மறுநாள் இந்தியாவுடன் இணைந்தது.

*

இந்த வருடங்கள், மிக நிச்சயமாக ஆர்.எஸ்.எஸ்ஸுக்குச் சாதகமானவை. வெறுமனே அப்படிச் சொல்வது போதாது. ஒரு வகையில் ஆர்.எஸ்.எஸ். தனது நீண்டநாள் விருப்பமான, ‘இடதுசாரிகளின் புகழைக் குறைப்பது, வீச்சைக் கட்டுப்படுத்துவது’

https://telegram.me/aedahamlibrary

என்னும் அடங்காப் பேரவாவைத் தீர்த்துக்கொள்ளவும் ஒரு சந்தர்ப்பம் அதற்குக் கிடைத்தது.

அது 1962ம் வருடம். அருணாசல பிரதேசம் மற்றும் காஷ்மீரின் சில பகுதிகளைத் தன்னுடையதாக அறிவித்துக்கொண்டதன் தொடர்ச்சியாகச் சீனா, இந்தியாவின்மீது படையெடுத்தது.

இந்திய-சீன யுத்தம், இந்தியாவிலுள்ள இடதுசாரிகளில் ஒரு பகுதியினரின் அருவருப்பூட்டக்கூடிய கோரமுகத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தியது. ஒரு தேசிய அபாயம் வந்தபோதும்கூடச் சீனாவை ஆதரிக்கக்கூடியவர்களாக அவர்கள் இருந்தார்கள். ‘இந்தியாவை விடுவிப்பதற்காகச் சீனப்படைகள் வந்திருக்கின்றன’ என்று பேசினார்கள். அதன் சில தலைவர்கள், ‘இதை இந்தியா-சீனா என்ற இரு தேசங்களின் யுத்தமாகப் பார்ப்பதைவிட, கம்யூனிசம்-கேபிடலிசம் என்னுமிரு சித்தாந்தங்களின் மோதலாகப் பார்க்கவேண்டும்’ என்று அபத்தமாக உளறிக்கொட்டிக்கொண்டிருந்தார்கள்.

தேசமே கம்யூனிஸ்டுகளை வெறுத்த சந்தர்ப்பம் அது. இதன் தொடர்ச்சியாக அந்த இயக்கம் பிளந்தது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உருவானது எல்லாம் ஒரு புறமிருக்க, இந்திய-சீன யுத்த சமயத்தில் ஆர்.எஸ்.எஸ் நடந்துகொண்ட விதம் சந்தேகத்துக்கு இடமின்றி பாராட்டத்தக்கதாக அமைந்தது.

அவர்களுக்குக் காங்கிரஸைப் பிடிக்காது. நேருவைச் சுத்தமாகப் பிடிக்காது. தொடக்கம் முதலே ஆர்.எஸ்.எஸ். மீது சந்தேகப்பார்வை பார்த்து வந்தவர் அவர். காந்தி படுகொலைச் சம்பவத்துக்கு முன் அவருக்கு ஆர்.எஸ்.எஸ். மீது அபிப்பிராயம் ஏதும் இருந்ததில்லை. அந்தச் சம்பவத்துக்குப் பின் நல்ல அபிப்பிராயம் ஏதும் இருந்ததில்லை. கூடுமானவரை அவர்களது செயல்பாடுகளுக்கு அவர் தடை சொல்லக்கூடியவராகவே இருந்தார்.

ஆயினும் சீனா படையெடுத்தபோது ஆர்.எஸ்.எஸ். சற்றும் தாமதிக்காமல் அரசுக்குத் தன் முழு ஆதரவைத் தெரிவித்தது. ஆதரவு என்பது அறிக்கையளவில் அல்ல. ஒரு காரியம் செய்தார்கள். ஆர்.எஸ்.எஸ்ஸின் தொழிற்சங்க அமைப்பான பாரதீய மஸ்தூர் சங்கம், அந்தக் கணம் வரை தான் போராடி வந்த அனைத்து விஷயங்கள் குறித்தான கோரிக்கைகளையும் அப்படியே தள்ளிப்போடுவதாக அறிவித்தது. நெருக்கடியான காலக்கட்டம். அரசுக்கு எதிரான எந்தப் போராட்டத்தையும் பி.எம்.எஸ். இப்போது நடத்தாது. தவிரவும்

https://telegram.me/aedahamlibrary

உற்பத்திப் பணிப்பிரிவில் பணியாற்றும் அவர்களுடைய அனைத்து ஊழியர்களும் தற்செயல் விடுப்புக் கூட எடுக்க மாட்டார்கள். வாகனங்கள், ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் பணிபுரியும் மஸ்தூர் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள், இருபத்தி நான்கு மணிநேரமும் பணிபுரியத் தயாராக இருப்பார்கள். நிர்வாகத்தின் கட்டளை எதுவாக இருந்தாலும் பதில் பேசாமல் செய்து முடிப்பார்கள்.

இது சாதாரணமான விஷயமல்ல. இடதுசாரித் தொழிற்சங்கப் பணியாளர்கள் என்ன நிலைபாடு எடுப்பது, யாரை ஆதரிப்பது என்று தம் தலைவர்களைப் போலவே அலைபாய்ந்துகொண்டிருந்த சமயம், தேசத்தில் உற்பத்தித் துறை சார்ந்து எந்தப் பெரும் சிக்கலும் எழாதிருக்க மஸ்தூர் யூனியன் மேற்கொண்ட கவனமும் முயற்சிகளும் மிக மிக முக்கியமானவை என்று இந்திய அரசே பாராட்டியது.

தவிரவும் ஆர்.எஸ்.எஸ். தனது பிரசாரக்குகள், இதர தன்னார்வலர்களைத் தூண்டிவிட்டு தேசமெங்கும் மூலைமுடுக்குகளில் எல்லாம் யுத்தத்தின் பின்னணியை மக்களிடம் விளக்கும் பணியையும் மேற்கொண்டது. தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் சொற்பொழிவுகள், யுத்த காலத்தில் அரசுக்கு எந்தெந்த வகையிலெல்லாம் ஆதரவளிக்கலாம் என்ற விளக்கங்கள் - நிறையவே செய்தார்கள்.

நேரு எதிர்பார்க்கவில்லை. உண்மையில் அவர் நெகிழ்ந்துபோயிருந்தார். அல்லாத பட்சத்தில் எப்போதும் சந்தேகப்பார்வையுடனேயே கவனித்துக்கொண்டிருந்த ஆர்.எஸ்.எஸ்ஸை அவர் அடுத்த வருடக் குடியரசு தின அணிவகுப்பில் பங்குபெற அழைத்திருக்க முடியாது.

1963 ஜனவரி 26ம் தேதி அணிவகுப்புக்கு ஆர்.எஸ்.எஸ். வரலாம். தகவல் சரியாக இரண்டு நாள் முன்னதாகத்தான் ஆர்.எஸ்.எஸ். தலைமைக்கு அனுப்பப்பட்டது. கூட்டம் கூடிப் பேசவோ, ஆள்களைத் தேர்ந்தெடுக்கவோ வெகு நிச்சயமாக நாற்பத்தி எட்டு மணிநேர அவகாசம் போதாது. ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு என்றில்லை. எந்த ஓர் அமைப்புக்குமே.

ஆனால் அன்று பொழுது விடிந்தபோது டெல்லியில் மூவாயிரம் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் காக்கி உடையில் அணிவகுத்துவிட்டார்கள். தேசம் முழுதுமிருந்து திரண்டிருந்த உறுப்பினர்கள். எப்படித் தகவல் சொன்னார்கள், எப்படி வந்து

https://telegram.me/aedahamlibrary

சேர்ந்தார்கள், யாருக்கும் தெரியாது. ஆனால் வந்துவிட்டார்கள். காலி மைதானங்களில் பத்து இருபது பேராக, ஐம்பது நூறு பேராக அதுநாள் வரை ஷாகாக்களில் மட்டும் பரேடு நடத்திக்கொண்டிருந்தவர்கள். முதல் முதலாக ஒரு பெரும் எண்ணிக்கையில் தேசமே பார்க்க டெல்லி வீதிகளில் பேண்ட் வாத்தியச் சத்தம் முழங்க நடந்து சென்றபோது, காங்கிரஸ்காரர்களில் சிலரே முகம் சுளித்தார்கள்.

நேரு சொன்னார். தேசபக்தி மிக்க அத்தனை பேருக்குமான அழைப்பு இது. தேசபக்தர்கள்தான் கலந்துகொண்டிருக்கிறார்கள். யாரும் முணுமுணுக்க வேண்டாம்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் சரித்திரத்தில் அது ஒரு மைல்கல் சம்பவம்.

*

ஒரு தேசிய இயக்கமாக மக்கள் மத்தியில் ஆர்.எஸ்.எஸ். தன்னை நல்லவிதமாகக் காட்டிக்கொள்ளக் கிடைத்த இன்னொரு சந்தர்ப்பத்தையும் குறிப்பிடலாம். 1965ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது இந்திய-பாகிஸ்தான் யுத்தம்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர் கோல்வால்கர் அப்போது மகாராஷ்டிர மாநிலம் முழுதும் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தார். சட்டென்று யுத்தம் வெடித்த சூழ்நிலையில், அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. எதிர்முனையில் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி.

மிகவும் அவசரம். உடனே டெல்லி வரவேண்டும். அனைத்துக் கட்சி, இயக்கங்களின் தலைவர்களின் அவசரக் கூட்டம்.

சுற்றுப்பயணத்தை அப்படியே நிறுத்திவிட்டு டெல்லிக்குப் பறந்தார் கோல்வால்கர். யுத்தம் வந்திருக்கிற சூழ்நிலையை சாஸ்திரி விளக்கினார். வேண்டியது ஒத்துழைப்பு. தேசமெங்கும் மக்கள் ஆதரவு. இயக்கங்களின் ஆதரவு.

‘நிச்சயமாக. ஆனால் ஒரு வேண்டுகோள். நமது ராணுவத்தின் கைகளைக் கட்டாதீர்கள். தற்காப்புத் தாக்குதல் மட்டும் போதுமென்று சொல்லவே சொல்லாதீர்கள். அவர்களைச் சுதந்தரமாகப் போரிட அனுமதியுங்கள். அது போதும்’ என்றார் கோல்வால்கர்.

யுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்ததோடு அவர் நிற்கவில்லை. விறுவிறுவென்று வேறு என்னென்ன விதங்களில் எல்லாம்

https://telegram.me/aedahamlibrary

ஆர்.எஸ்.எஸ். அரசுக்கு உதவ முடியும் என்று பட்டியலிட்டார். டெல்லி போலீசுக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும். அவர்கள் போக்குவரத்தைச் சீர் செய்வது போன்ற சாதாரண வேலைகளை ஸ்வயம்சேவகர்களிடம் விட்டுவிடட்டும். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். ரத்ததான முகாம்கள் நடத்தலாம். ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் அத்தனை பேரும் ரத்தமளிப்பார்கள். போர் நடைபெறும் எல்லைப் பகுதியில் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்கள் உதவி முகாம்கள் அமைப்பார்கள். ராணுவத்தினரின் உடனடித் தேவைகள், அவசர உதவிகள் அங்கே தீர்க்கப்படும். மற்றபடி தேசமெங்கும் மக்களிடையே யுத்த நிலவரத்தை எடுத்துச் சொல்லி, தேசபக்தியை ஊட்டி வளர்ப்பது, அரசுக்கு விரோதமான செயல்களில் ஈடுபடாதிருக்கச் செய்வது போன்றவற்றை நீங்கள் சொல்லவே வேண்டாம். இன்னும் ஒரு மணி நேரத்தில் ஸ்வயம்சேவகர்கள் அந்தப் பணியில் இறங்கிவிடுவார்கள்.

சாஸ்திரி புன்னகை செய்தார். இருபத்திரண்டு நாள்கள் நடைபெற்றது யுத்தம். அந்த இருபத்தி இரண்டு நாள்களிலும் டெல்லியில் போக்குவரத்துக் காவலர்களை வேறு பணிகளுக்கு அனுப்பிவிட்டு ஸ்வயம்சேவகர்கள் அந்த வேலையை ஏற்றுக்கொண்டார்கள். ஆயிரக்கணக்கான ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள், காயமடைந்த ராணுவ வீரர்களுக்கு எந்நேரமும் ரத்தம் தேவைப்படலாம் என்று இரவு பகலாகக் கண்விழித்துக் காத்திருந்தார்கள். ரத்ததானம் செய்வோருக்குப் பொதுவாக அப்போது அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்பட்டுக்கொண்டிருந்த பத்து ரூபாய் சன்மானத்தை அவர்கள் முற்றிலும் மறுத்துவிட்டார்கள். ஜவான்களுக்கு வேண்டியதை வாங்கித் தர அந்தப் பணத்தைச் செலவழியுங்கள். அதுதான் இப்போது முக்கியம்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் தேசபக்தி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது. பிரச்னை, அந்த தேசபக்தியின்மீது அவர்கள் பூசும் மதச்சாயத்தில்தான்.

https://telegram.me/aedahamlibrary

# 8. இரண்டாவது தடை

இந்தியாவில் உள்ள பெரும்பாலான கட்சிகள், இயக்கங்களின் சரித்திரத்தில் நெருக்கடி நிலைக் காலக்கட்டம் ஒரு முக்கியப் பங்கு வகித்திருப்பதைப் பார்க்கலாம். பழம்பெரும் இயக்கங்களின் பட்டியலில் அநேகமாக இந்த அடக்குமுறையில் இருந்து தப்பித்த ஒரே இயக்கம் காங்கிரஸ்தான் என்று சொல்லவேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். மீதான அடுத்தத் தடை விதிக்கப்பட்ட சமயம் அது. ஜூன் 25, 1975 எமர்ஜென்சி. ஜூலை 4ம் தேதி ஆர்.எஸ்.எஸ்ஸுக்குத் தடை.

நான்கு யுத்த காலங்களிலும் ஆர்.எஸ்.எஸ். தன்னால் முடிந்த அனைத்துத் தன்னார்வப் பணிகளிலும் ஈடுபட்டு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கிய இயக்கம். பங்களாதேஷ் விடுதலைப் போராட்ட சமயத்தில் வட கிழக்கு மாநிலங்களில் வந்து குவிந்த அகதிகளுக்கான முகாம்களில் ஆர்.எஸ்.எஸ். ஸ்வயம்சேவக்குகள் செய்த பணிகள் குறிப்பிடத்தக்க அளவு அந்த இயக்கத்துக்கு அப்பகுதிகளில் நல்ல பெயரையும் செல்வாக்கையும் பெற்றுத்தந்திருந்தது.

சொரூபம் வெளிப்படாமல் இல்லை. பங்களாதேஷிலிருந்து அணி அணியாக வந்த மக்களில் ஹிந்துக்களை ‘அகதிகள்’ என்றும் முஸ்லிம்களை ‘ஊடுருவல்காரர்கள்’ என்றும் கோல்வால்கர் குறிப்பிட்டார். அஸ்ஸாமை ஒரு முஸ்லிம் மாநிலமாக்கும் ‘செயல்திட்டத்துடன்’ திட்டமிட்டு அவர்கள் அங்கே வந்து குவிந்துகொண்டிருப்பதாக ஆர்.எஸ்.எஸ். குற்றம் சாட்டியதை மறுக்க முடியாது. ஆனால், அதே சமயம் தனது எந்தத் தன்னார்வலர் பணியையும் அவர்கள் எதன்பொருட்டும் நிறுத்தியதில்லை. விமரிசனங்களும் கண்டனங்களும் ஒரு புறம். செயல் ஒரு தனிப்புறம்.

ஒரு தேசியக் கட்சியாக பாரதீய ஜன சங்கம் பரவலான கவனத்தையும் ஓரளவு அங்கீகாரத்தையும் பெற்றிருந்த நேரம் அது. மாபெரும் வெற்றி என்றில்லாதபோதும் வட மாநிலங்களில் தேர்தலுக்குத் தேர்தல் அதன் வெற்றி சதவீதம் உயர்ந்துகொண்டேதான் வந்தது. அவர்கள் ஜெயப்பிரகாஷ் நாராயணுடன் கூட்டு வைத்திருந்தார்கள். அரசியலில் பொது எதிரி இந்திரா காந்தி. தவிரவும் அவரது ஆட்சியில் மிதமிஞ்சிப்

https://telegram.me/aedahamlibrary

போன ஊழல்கள். அதிகார துஷ்பிரயோகங்கள்.

பிகாரிலும் குஜராத்திலும் ஏராளமான பொதுக்கூட்டங்கள் நடத்திக்கொண்டிருந்தார்கள். ஊர்வலங்கள். அடையாள உண்ணாவிரதங்கள். ஜன சங்கத்தின் உறுப்பினர்கள், ஊழியர்கள், தொண்டர்கள் அனைவரும் ஆர்.எஸ்.எஸ். தயாரிப்புகள் என்பதால் களப்பணியில் அவர்களுக்குப் பிரச்னையே இல்லை. வாஜ்பாய், அத்வானி போன்றவர்களெல்லாம் வீதிவீதியாகச் சென்று இந்திராவுக்கு எதிரான பிரசாரங்களில் தீவிரம் செலுத்திக்கொண்டிருந்த சமயம்.

ஜன சங்கம், சரி ஒழியட்டும். ஜெயப்பிரகாஷ் நாராயண் எப்படி அவர்களுடன் கூட்டு சேர்ந்தார்? அவர் பெரிய சோஷலிச வாதியல்லவா? அவர் கட்டிக்காத்த கொள்கைகளுக்கும் இந்தக் கூட்டுக்கும் சற்றும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லையே.

பல தரப்பிலிருந்து வியப்பும் விமரிசனங்களும் வந்தன. ஜேபி அமைதியாகச் சொன்னார். ஜன சங்கத்தை மதவாத இயக்கம் என்பீர்களானால், நானும் மதவாதியே. செய்கிற வேலைகளை மட்டும் பாருங்கள். எதற்கு, யாருக்கு எதிராகப் போராடுகிறோம் என்று பாருங்கள். என்ன விளைவு வரப்போகிறது என்று பாருங்கள்.

1967 பொதுத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியமைத்தாலும் பல வட மாநிலங்களில் கணிசமாக அதன் செல்வாக்கு குறைந்திருந்தது. ‘நீங்கள் அம்ருத்சரிலிருந்து கல்கத்தாவரை பயணம் மேற்கொண்டால், காங்கிரஸ் ஆட்சியில்லாத ஒரு நீண்ட நிலப்பரப்பைக் கடந்து மகிழலாம்’ என்று ஜன சங்கத்தின் தலைவர்கள் மேடையில் பேசினார்கள்.

அத்தனை இடங்களிலும் ஜன சங்கம் இருந்ததா என்பதல்ல. அத்தனை இடங்களிலும் காங்கிரசுக்கு எதிரான கூட்டணிகள் வென்றிருந்தன.

71 தேர்தல்களிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஏழைமை ஒழிப்பு என்பது அதன் கோஷம். ‘இந்தக் கோஷத்தையே ஜன சங்கத்திடமிருந்துதான் காங்கிரஸ் திருடிக்கொண்டது’ என்று ஆர்.எஸ்.எஸ். சொன்னது. எப்படியானாலும் காங்கிரஸ் வெற்றி. மிகப்பெரிய வெற்றி.

ஆனால் அந்த வெற்றிக்குத்தான் பிரச்னை வந்தது. ரே பரேலி விவகாரம். தேர்தல் தகிடுதத்தங்கள். ராஜ் நாராயண் தொடுத்த வழக்கு. அலஹாபாத் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு. இந்திரா காந்தியின் வெற்றியை ரத்து செய்த அறிவிப்பு. அடுத்த ஆறு தேர்தல்களில் அவர் போட்டியிட

https://telegram.me/aedahamlibrary

விதிக்கப்பட்ட தடை. விளைவு, எமர்ஜென்சி.

மிசாவில் கைதாகி சிறை சென்றவர்களுள், முழு எமர்ஜென்சி காலமும் சிறைப்பட்டிருந்தவர்கள் அநேகமாக ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்தாம். ஆர்.எஸ்.எஸ் மீதான இந்திரா காந்தியின் அச்சமும் அருவருப்புணர்வும் சரித்திரப் பிரசித்தி பெற்றவை. 1975ம் ஆண்டு சண்டிகரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், ‘அதெப்படி ஆர்.எஸ்.எஸ். பெயரே கேள்விப்பட்டிராத மக்கள் நிறைந்த மாநிலங்களில்கூட அவர்களுக்கு ஒரு தளமாவது நிச்சயமாக இருக்கிறது?’ என்று வெளிப்படையாகக் கேட்டார். ஒரு சில வடமாநிலங்களில் காங்கிரஸ் ஊழியர்களுக்கு ஒரு வாய்மொழி உத்தரவு இடப்பட்டிருந்தது. ஆர்.எஸ்.எஸ்ஸைச் செயல்பட விடவேண்டாம். அவர்களுடைய களப்பணிகளுக்குக் கூடியவரை முட்டுக்கட்டை போடுங்கள்.

அடுத்த சில மாதங்களுக்குள்ளாகவே அவசர நிலைப் பிரகடனம் செய்யவேண்டிவரும் என்று இந்திராவே எதிர்பார்த்திருக்கமாட்டார். அந்தத் தினம் வந்ததும் தேசமெங்கும் ஆர்.எஸ்.எஸ் தலைவர்களையும் முழுநேர உறுப்பினர்களையும் ஊழியர்களையும் ஆதரவாளர்களையும் தேடித்தேடிக் கைது செய்ய ஆரம்பித்தது போலீஸ்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் பல முக்கியத் தலைவர்கள் அவசர அவசரமாகத் தலைமறைவானார்கள். எப்போது யார் கைதாவார்கள் என்று தெரியாத சூழலில் தேசம் முழுதுமுள்ள உறுப்பினர்களுக்கு அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை விளக்குவதற்கும் பதற்றம் தணிப்பதற்கும் ஒரு சிலராவது வெளியே இருந்தாகவேண்டியது கட்டாயம். ஆனால் அது அத்தனை சுலபமாக இல்லை. சீருடை அணியாத காவலர்கள், இருபத்தி நான்கு மணிநேரமும் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் போய்வரக்கூடிய இடங்களில் சுற்றிக்கொண்டே இருந்தார்கள். இயக்கத்தின் அத்தனை அலுவலகங்களும் சுற்றிவளைக்கப்பட்டிருந்தன. யாரும் வெளியே தலைகாட்ட முடியாத நிலை. ஒரு கணம் வெளியே வந்தாலும் உடனடியாக உள்ளே போய்விடக்கூடிய அபாயம்.

இந்திராகாந்திக்கு எதிராக நாடு முழுதும் ஊழியர்கள் திரண்டு சத்தியாகிரகத்தில் இறங்கவேண்டும் என்ற கட்டளை சிறையிலிருந்த ஆர்.எஸ்.எஸ்ஸின் அப்போதைய தலைவர் பாலா சாஹேப் தியோரஸிடமிருந்து வந்தது. பதற்றமும் கலவரமும் சூழ்ந்த அந்த தினங்களைப் பற்றி ரமேஷ் பதங்கே என்னும் ஆர்.எஸ்.எஸ். ஊழியர் தமது ‘மை மனு சங்கம்’ என்னும் நூலில் விவரித்திருப்பதிலிருந்து ஒரு பகுதியைப் பாருங்கள். (மராத்திய மொழியில் எழுதப்பட்ட இந்நூல்

https://telegram.me/aedahamlibrary

பிறகு ஹிந்தி வழியே தமிழாக்கம் செய்யப்பட்டது. ‘மனு வாதமும் ஆர்.எஸ்.எஸ்ஸும்’)

‘நெருக்கடி நிலைக்கு எதிராகக் கடுமையாகப் போராடுவது என்று சங்கம் உறுதி செய்துகொண்டது. அதற்காக எதிர்ப்பணி திரட்டி நாடு முழுதும் சத்தியாகிரகம் நடைபெற்றது. எல்லோரும் பயந்திருந்தார்கள். இந்திரா காந்தியை எதிர்க்க யாருமற்ற நிலை. தலைமறைவாகியிருந்த நான், சத்தியாகிரகிகளைத் திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்தேன். அவர்களை அணி திரட்டி சத்தியாகிரகத்துக்கு அனுப்புவது, போராட்டத்துக்கு நிதி திரட்டுவது, ஸ்வயம்சேவகர்களின் மன உறுதி குலையாமல் கட்டிக்காப்பது போன்ற வேலைகள் தலைமறைவாகியிருந்தவர்களுக்கு இருந்தன. தலைமறைவாகியிருந்த சங்கத்தின் முக்கிய அதிகாரிகளை பத்திரமாகத் தங்கவைக்க நான் இருந்த பகுதியில் இடங்களை ஏற்பாடு செய்திருந்தேன்.

போலீஸைக் கண்டாலே அஞ்சுவோம். பிடிபட்டுவிட்டால் அவர்கள் அடி அடியென்று அடிப்பார்கள். தலைமறைவாகியிருக்கும் தலைவர்களைக் காட்டிக்கொடுக்கச் சொல்லி சித்திரவதை செய்வார்கள். மாதவராவ் மூளே எங்கே இருக்கிறார்? (ஆர்.எஸ்.எஸ்ஸின் அன்றைய அகில இந்தியப் பொதுச்செயலாளர்) மோரோபந்த் பிங்கலே எங்கு ஒளிந்திருக்கிறார்? தந்தோபந்த் டெங்கடி எங்கே? சங்கத்தின் மையக்குழுக் கூட்டம் எங்கே நடக்கவிருக்கிறது? இந்த விஷயங்களெல்லாம் எனக்குத் தெரியும். போலீஸ் ஒருவேளை என்னைப் பிடித்துவிட்டால், அவர்கள் செய்யும் கொடுமைகளைச் சகித்துக்கொள்ளும் மன உறுதியை இறைவன் எனக்கு அளிக்கவேண்டும்...’

இது ஒரு ஸ்வயம்சேவகருக்கு ஏற்பட்ட நிலையல்ல. கிட்டத்தட்ட அன்று வெளியில் இருந்த அத்தனை ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்களுமே இப்படிப்பட்ட எண்ண ஓட்டங்களுடன் தான் இருந்திருக்கிறார்கள். கூடுமானவரை போலீஸின் கண்ணில் படாதிருப்பது. பகல் முழுதும் அவர்கள் வெளியே வரவே மாட்டார்கள். இரவுப் பொழுதுகளில்தான் இடப்பெயர்ச்சி இருக்கும். ஒளிந்திருக்கும் முக்கியத் தலைவர்களுக்குத் தேவையான உணவு, மருந்துகளை எடுத்துச் செல்வது, கடிதங்கள் கொண்டு சேர்ப்பது, ரகசியச் செய்திகளைப் பரிமாறுவது போன்ற காரியங்கள் அவர்களுக்கு முக்கியப் பணிகளாக இருந்தன.

பிராந்தியவாரியாக சத்தியாகிரகப் போராட்டங்களை ஒருங்கிணைத்துக்கொண்டிருந்ததும் அவர்கள்தாம். துண்டுப் பிரசுரங்கள்

https://telegram.me/aedahamlibrary

அச்சிட்டு மக்களிடையே கொண்டு சேர்ப்பது, மாறுவேடங்களில் வீடுவீடாகச் சென்று இந்திரா அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளை எடுத்துச் சொல்வது, பத்திரிகையாளர்களை ரகசியமாகச் சந்தித்து, சிறையில் இருக்கும் இயக்கத்தின் உறுப்பினர்கள் அனுபவிக்கும் கொடுமைகளை விவரிப்பது போன்றவை உப பணிகள்.

மனம் தளர்ந்த ஊழியர்களுக்கு, மறைவிடத்திலிருந்து ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர்களுள் ஒருவரான தந்தோபந்த் டெங்கடி ஒரு தகவல் அனுப்பினார்.

நெருக்கடி நிலை நீண்ட காலம் தொடராது. இந்தப் போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். கண்டிப்பாக வெற்றி பெறும். ஒருவேளை இந்நிலை நீடித்தால் சங்கம் என்னாகும் என்று நீங்கள் கவலைப்படாதீர்கள். ஊழியர்கள் தமது சொந்தக் கஷ்டத்தை, சங்கத்தின் கஷ்டமாக நினைப்பது கூடாது. நமது பணி, இறைவனின் பணி. இதன் வெற்றி குறித்து நாம் கவலைகொள்ளத் தேவையே இல்லை. நம் கவலையெல்லாம் நம் தோள்களின்மீது சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்புகளைப் பற்றியதாக மட்டுமே இருக்கவேண்டும். அதுதான் பயன் தரக்கூடியது.

தடையை நீக்குவதற்கு மறுபுறம் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அரசியலில் எதிரணிக்காரர்தான். கொள்கையளவில் ஒத்துப்போக முடியாதவர்தான். தொடக்கம் முதலே ஆர்.எஸ்.எஸ்ஸைக் கண்டால் சற்றும் பிடிக்காதவரும்கூட. ஆனாலுமென்ன? இந்திராதான் பிரதமர். இந்த நெருக்கடி நிலை அவரால் வந்தது. இதன் கோரப்பிடியிலிருந்து ஆர்.எஸ்.எஸ். தப்பிக்க வேண்டுமென்றால், அது அவர் நினைத்தால் மட்டுமே முடியும்.

ஒரு சமூக இயக்கமாக ஆர்.எஸ்.எஸ். சமரசங்களை விரும்பாதிருக்கலாம். அரசியலில் அது சாத்தியமில்லை. சிறைப்பட்டிருந்த ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர் தேவரஸ், இந்திரா காந்திக்குச் சில கடிதங்கள் எழுதினார். 1948 தடையின்போது எப்படி கோல்வால்கர் ஜவாஹர்லால் நேருவுக்கு சிறைக் கடிதங்கள் எழுதினாரோ அப்படி.

ஆர்.எஸ்.எஸ்ஸைப் புரிந்துகொள்ளுங்கள். இது ஒரு சமூக இயக்கம். இதன் தோழமை இயக்கங்களின் அரசியல் நிலைபாட்டை இதன் நிலைபாடாகக் கருதவேண்டியதில்லை. தனது சரித்திரம் முழுதும் இந்த இயக்கம் ஆற்றியிருக்கும் பணிகளை எண்ணிப் பார்க்கலாம். போர்க்காலப் பணிகள். அமைதிப் பணிகள். தவிரவும் இது இந்திய

https://telegram.me/aedahamlibrary

அரசின் சட்டத்துக்கு உட்பட்ட வகையில் செயல்படும் ஓர் இயக்கம்.

பூமிதான இயக்கத்தின் தலைவர் வினோபா பாவே இம்முறை ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு உதவி செய்ய முன்வந்தார். தடை நீக்கத்துக்கு அவராலான முயற்சிகள். அவர் சஞ்சய் காந்தியைத் தொடர்புகொண்டு இது குறித்துப் பேசியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் என்ன பதில் கிடைத்தது, விஷயம் இந்திரா வரை சென்றதா என்பது தெரியவில்லை.

எமர்ஜென்சி விலக்கிக்கொள்ளப்பட்ட 1977ம் ஆண்டு பிற கட்சிகள், இயக்கங்களுக்கான தடை விலக்கப்பட்டபோதுதான் ஆர்.எஸ்.எஸ்ஸும் வெளியே வர முடிந்தது.

*

தனது சரித்திரத்தில் காங்கிரஸ் சம்பாதித்த பல்வேறு கெட்ட பெயர்களுள் தலையாயது, இந்திரா காந்தியின் காலத்தில் திணிக்கப்பட்ட அவசர நிலைப் பிரகடனம். இந்திய அரசியல் சூழலை வெகுவாக மாற்றுவதற்கான அடிப்படைக் காரணியாக அது அமைந்தது.

எமர்ஜென்சிக்குப் பிறகு இந்திராவை ஒழித்துக்கட்டுவதற்காக உருவாக்கப்பட்ட பல கட்சிக் கூட்டான ஜனதாவுக்குப் பிள்ளையார் சுழி போட்டவர், காந்தியவாதியும் காங்கிரஸ்காரரும் இந்திராவின் ஜென்ம எதிரியுமான ஜெயப்பிரகாஷ் நாராயண்.

எதிர்க்கட்சிகளுக்கு அவருடைய ஆதரவு இருந்தது. அவருக்கு மக்களிடம் செல்வாக்கு இருந்தது. துண்டுத் துண்டாக, வோட்டுகளைப் பிரித்து நாசம் செய்யாமல், ஒரு குறிக்கோளுடன் காங்கிரஸை எதிர்த்துத் தேர்தலில் நிற்கலாம். அத்தனை எதிர்க்கட்சிகளும் ஒன்று சேரவேண்டும். ஒரே அணி. ஒரே பெயர். ஜனதா. என்றால் மக்கள் கட்சி.

அவர்தான் ஆலோசனை கொடுத்தது. ஜனவரி 23, 1977 அன்று ஜனதா கட்சி பிறந்தது. சரண் சிங்கின் லோக் தள், ராஜ் நாராயணின் சோஷலிஸ்ட் கட்சி, ஸ்வதந்த்ரா கட்சி, ஜனதா மோர்ச்சா மற்றும் பாரதிய ஜன சங்.

இனி எங்கள் கட்சிகளின் தனிப் பெயர், தனி அடையாளங்களுக்கு இடமில்லை. ஒரே பெயர். ஜனதா. ஒரே குறிக்கோள், இந்திராவை ஒழிப்பது.

கொஞ்சம் நுணுக்கமாக யோசித்தால் சிரிப்பு வரக்கூடிய கூட்டணிதான்.

https://telegram.me/aedahamlibrary

சோஷலிஸ்டுகளுக்குத் தொடக்கம் முதலே ஹிந்துத்துவவாதிகளைப் பிடிக்காது. எமர்ஜென்சி காலத்தில் மிசாவில் கைது செய்த ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களுக்கு இந்திரா அரசு அளித்த அதிகபட்ச தண்டனை, அவர்களை சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இருந்த வார்டிலேயே அடைக்கச் சொன்னதுதான். சிறைக்குள் இரு தரப்பினரும் அடிக்கடி மோதிக்கொள்வார்கள். அடித்துக்கொல்வார்கள். சண்டை வரும். ரகளையாகும். தகராறு முற்றும். அப்புறம் ஓம் சாந்தி.

ரமேஷ் பதங்கே தனது நூலில் இந்தக் காட்சிகளைத் தத்ரூபமாக விவரித்திருக்கிறார்.

'...சோஷலிஸ்டுகள் பலரும் உள்ளே எங்களுடன் இருந்தார்கள். அவர்களது உண்மையான சொரூபத்தை மிக நெருக்கத்தில் கண்டுகொள்ள எனக்கு சிறைச்சாலையில் வாய்ப்புக் கிடைத்தது. சங்க எதிர்ப்பு, சோஷலிஸ்டுகளின் முக்கியப் பணியாக இருந்தது. இதை நீக்கிவிட்டால் அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரமே கிடையாது. சிறையில் சிறு சிறு விஷயங்களில்கூட அவர்களது வெறுப்புணர்வு பொங்கி வழிந்தது.

நாங்களும் சோஷலிஸ்டுகளும் மக்கள் போராட்டக்குழுவின் ஊழியர்கள் என்பதால் சிறையில் தள்ளப்பட்டிருந்தோம். நெருக்கடி நிலையை எதிர்த்து நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டுப் போராடவேண்டியிருந்தது. இதனால் சிறையில் சில நிகழ்ச்சிகளைக் கூட்டாக நடத்த முயன்றோம். அங்கு சங்க ஸ்வயம்சேவகர்களின் எண்ணிக்கை பெரும்பான்மையாக இருந்ததால், நிகழ்ச்சிகளில் எங்கள் தாக்கம் இருந்தது. சங்க செயல்முறைப்படி தொடக்கத்தில் ஒரு தேசபக்திப் பாடல் இருக்கும். நாந்தான் பாடவேண்டி இருந்தது. நான் பாட எழுந்தவுடனேயே நான்கு சோஷலிஸ்ட் தோழர்கள் அவர்கள் திட்டப்படி எழுந்து நின்றனர். பாடல் பாடுவதை எதிர்த்தார்கள்...

நாங்கள் அனைவரும் ஒன்றாகத்தான் உணவு அருந்துவோம். உண்ணத் தொடங்கும்போது நாங்கள் 'ஸஹனா வவது' என்ற உபநிடத மந்திரம் கூறுவோம். ஆனால் எல்லா வரிசையிலும் அமர்ந்துள்ள சோஷலிஸ்ட் தோழர்கள் உப்பு வைத்ததுமே உண்ண ஆரம்பித்துவிடுவார்கள். ஸஹனா வவது மந்திரத்தால் அவர்களுக்குத் தீட்டு வந்துவிடுமாம்...'

எளிய விஷயங்கள். புன்னகை வரவழைக்கக்கூடிய விஷயங்கள். ஆனால் அடிப்படைக் கருத்தில், கொள்கையளவில், நம்பிக்கையளவில் கடலளவு வித்தியாசங்கள் உள்ள இயக்கங்கள்.

https://telegram.me/aedahamlibrary

ஆயினும் வேறு வழியில்லை. அரசியலில் ஹிந்துத்துவ சக்திகள் எழவேண்டுமானால் முதலில் காங்கிரஸை வீழ்த்தவேண்டும். ஒப்பீட்டளவில் சோஷலிஸ்ட் தோழர்களெல்லாம் பூனைக்குட்டிகள்.

1977ம் வருடப் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் தோற்றதற்கு ஜனதா காரணமல்ல. இந்திரா காந்தியின் தன்வினை. அதன் பலன் ஜனதாவுக்குக் கிடைத்தது.

ஜனதாவில் அங்கமாக இருந்த பாரதிய ஜன சங்கத்துக்கு அந்தத் தேர்தலில் 93 இடங்கள் கிடைத்தது, ஒரு மிக முக்கியமான திருப்புமுனை. உண்மையில் ஆர்.எஸ்.எஸ். அதுநாள் வரை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ‘அரசியல் சாதகம்’ அந்தத் தேர்தலில் அதற்குச் சாத்தியமானது. ஆர்.எஸ்.எஸ்ஸின் ஏராளமான உறுப்பினர்கள் ஜன சங்கத்தின் சார்பில் தேர்தலில் நின்று நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தார்கள். வாஜ்பாய் வெளியுறவுத் துறை அமைச்சராகவும் லால் கிஷன் அத்வானி தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சராகவும் பதவி அமர்ந்தார்கள்.

இதுதான். இவ்வளவுதான். இதற்குமேல் பிரச்னையிருக்காது. இனி மேலும் மேலும் வளர்வது ஒன்றுதான் பணி. தடைகள் இராது. தவிப்புகளுக்கு வாய்ப்பில்லை. அதிகாரபூர்வமாகச் செய்ய நினைப்பதைச் செய்யலாம். அஞ்சி நடுங்க அவசியமில்லை. ஒரு நல்ல தொடக்கமாக இதைக் கொள்ளலாம். முந்தைய தேர்தல்களிலும் பாரதிய ஜனசங்கம் வெற்றிகள் பெற்றிருந்தாலும், இந்தளவு அல்ல. இத்தனை பெரிதாக நிச்சயமாக அல்ல.

வாய்ப்பளித்ததற்கு யாருக்கு நன்றி சொல்வது? இறைவனுக்கா, இந்திரா காந்திக்கா?

ஆர்.எஸ்.எஸ். சிலிர்த்துக்கொண்டு எழுந்த தருணம் அது.

*

ஆனால் ஜன சங்கத்தால் ஜனதாவில் நீடித்திருக்க முடியவில்லை. புதிய பிரச்னைகள் ஏதும் அவர்களுக்குத் தேவையே இல்லை. பழைய பிரச்னை ஒன்றே போதும்.

ஆர்.எஸ்.எஸ்ஸிலும் உறுப்பினர்களாக இருப்பவர்கள் ஜனதாவிலும் எப்படி உறுப்பினர்களாக இருக்கலாம்? தோழமை மிகுந்த சோஷலிஸ்டுகள் தொடக்கம் முதலே கேட்டுக்கொண்டிருந்த கேள்வி.

https://telegram.me/aedahamlibrary

என்றால், தமது சொந்தக் கட்சி அடையாளங்களை அழித்துவிட்டு ஜனதாவை உருவாக்கப் பாடுபட்ட மற்றவர்கள் எல்லோரும் மாங்காய்களா? வகுப்புவாத அடையாளத்தை விட மறுப்பவர்கள் ஜனதாவில் இருக்கக்கூடாது. ஜனதாவில் இருப்பவர்களுக்கு மதவாத அடையாளம் உதவாது.

இது ஒரு பிரச்னை. பெரிய பிரச்னை. உண்மையில் இதைவிடப் பெரிய பிரச்னைகளை அப்போது ஜனதா அரசு சமாளித்துக்கொண்டிருந்தது. தலைவர்களின் பதவி ஆசைகள். கிடைத்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக்கொள்வதில் எழுந்த போட்டாபோட்டிகள். ஜனதாவே இரண்டாகி, மதச்சார்பற்ற ஜனதா கட்சி என்ற ஒன்று உதித்தது. ராஜ் நாராயண் அதன் தலைவராக இருந்தார். அவர் பிரதமராவதற்கு காங்கிரஸ் உதவும் என்று சொல்லப்பட்டது. ஆனால் ராஜ் நாராயண், சரண் சிங்கைப் பிரதமராக்கி அழகுபார்க்க விரும்பினார். மொரார்ஜி தேசாயை அநியாயத்துக்குப் பதவி இறக்கினார்கள்.

மதச்சார்பற்ற ஜனதாக்கட்சியினரின் இடைவிடாத தாக்குதலுக்கு ஜன சங்கம் இலக்காகிக்கொண்டிருந்தது. இது சரிப்படாது என்று ஆர்.எஸ்.எஸ். நினைத்தது. சரண் சிங் பதவிக்கு வந்ததுமே, ஜனதாவில் உறுப்பினராக இருந்த பாரதிய ஜனசங்கம் வெளியேற முடிவு செய்துவிட்டது.

டிசம்பர் 1980ல் பம்பாயில் வைத்து பாரதிய ஜனதா கட்சியை அறிமுகம் செய்தார்கள். புதிய கட்சி. பழைய ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்தான். அடல் பிஹாரி வாஜ்பாய், லால் கிஷன் அத்வானி. மற்றும் பலர்.

https://telegram.me/aedahamlibrary

# 9. மத மாற்றம், மதக்கலவரங்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ்

சட்டப்படி தவறு.

மத்திய பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, ஒரிஸ்ஸா, அருணாசலபிரதேசம் போன்ற பல மாநிலங்களில் மத மாற்றங்களுக்கு எதிரான தனித்தனிச் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

ஆனால் சட்டம் என்ன செய்யும்? இஸ்லாமியப் படையெடுப்பாளர்கள் இந்தியாவுக்கு வரத் தொடங்கிய நாளாகத் தொடரும் நடைமுறை. பிறகு காலனி ஆதிக்கக் காலம். ஐரோப்பியக் கண்டம் முழுவதிலுமிருந்து கப்பலேறி வந்த கிறிஸ்தவ மிஷனரிகள், இஸ்லாமியப் படையெடுப்பாளர்கள் தொடங்கிவைத்த காரியத்தைத் தம் வழியில் தொடர ஆரம்பித்தார்கள்.

இந்தியாவில் அவர்களுக்கு அது ஒரு சிரமமான பணியாக இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அதுதான் அடிப்படை. ஹிந்து மதத்தில் இருக்கும் எண்ணற்ற சாதிகளும் அவற்றின் ஏற்றத்தாழ்வுப் பிரிவினைகளும். நான் பெரியவன். நீ சின்னவன். நான் ஆள்பவன். நீ அடிபணிய வேண்டியவன். இவன் பிராமணன். அவன் சத்ரியன். நீ வைசியன். அவன் சூத்திரன். ஆ, அவன் கிட்டே போகாதே, அவன் தீண்டத்தகாதவன்.

இந்த அவல நிலை அவர்களுக்குச் சாதகமாக இருந்தது. கிறிஸ்தவத்தில் பிரிவினைகள் இல்லாமல் இல்லை. இஸ்லாத்தில் வேறுபாடுகள் இல்லாமல் இல்லை. ஒரு ஷியா முஸ்லிமை சுன்னி முஸ்லிம் ஒப்புக்கொள்ள மாட்டார். ஒரு சுன்னி முஸ்லிமை ஷியா முஸ்லிம் ஏற்கமாட்டார். ஒரு அஹமதியா முஸ்லிமை, முஸ்லிமாகவே கருதமாட்டாதவர்கள் மேற்சொன்ன இரு பிரிவிலும் உண்டு. சூஃபிக்கள் இந்த மூன்று வரையறைகளுக்குள்ளும் அடங்காத இன்னொரு தனியினம்.

கிறிஸ்தவத்திலும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள், பிராட்டஸ்டண்ட்

https://telegram.me/aedahamlibrary

கிறிஸ்தவர்கள். இதிலும் ஊருக்கொரு பிரிவு. பேருக்கொரு பீடம்.

ஆனாலும் இதெல்லாம் ஹிந்து மதத்துக்குள் இருக்கும் சாதிகள் அளவுக்கு அதிகமானவை இல்லை. ஒப்பிடவே காணாது. அதுதான் வசதி. அதுதான் சௌகரியம். அதனால்தான் மத மாற்ற முயற்சிகளுக்கு இந்தியா எளிய இலக்காகிறது.

1980ம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். தனக்கான பிரத்தியேக அரசியல் இயக்கமாக பாரதிய  ஜனதா கட்சியை அடையாளம் காட்டிய கையோடுஒரு மத மாற்றப் பிரச்னையில்தான் உடனடியாக ஈடுபடவேண்டி வந்தது. அதுநாள் வரை சேர்த்துவைத்த அத்தனை சக்தியையும் செலவிடக்  கூப்பிட்ட  தருணம். தனது மதம் சார்ந்த நடவடிக்கைகளுக்காகவே உருவாக்கி வளர்த்து வைத்திருக்கும் ‘செல்லக்குழந்தை’ விஸ்வ ஹிந்து பரிஷத்தின் திறமையை நேருக்கு நேர் காணக்கூடிய சந்தர்ப்பம். புதிய ஹிந்துத்துவ அரசியல் இயக்கமாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் பாரதிய ஜனதா கட்சி இந்த விஷயத்தில் என்ன செய்யப்போகிறது? அதனால் அதிகபட்சம் என்ன சாதிக்க இயலும்?

பார்த்துவிடலாம். இது ஒரு பரீட்சை. மிகப்பெரிய அக்கினிப் பரீட்சை.

பிப்ரவரி 19, 1981ல் அது நடந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மிகச் சிறிய கிராமம். மீனாட்சிபுரம் என்று பெயர். முன்னூறு தலித் குடும்பங்கள் வசித்துவந்த கிராமம். அந்த முன்னூறு குடும்பங்களில் இருநூற்றுப் பத்து குடும்பங்கள் சட்டென்று ஒரே சமயத்தில் இஸ்லாத்துக்கு மாறினார்கள்.

இனி நாங்கள் ஹிந்துக்களில்லை. எனவே தலித்துமில்லை. முஸ்லிம்கள்.

அறிவித்துவிட்டார்கள். திருநெல்வேலி-தமிழகம் மட்டுமல்ல. கிட்டத்தட்ட இந்தியா முழுவதையும் அதிர்ச்சியடைய வைத்த சம்பவம் அது. இருநூற்றுப் பத்து குடும்பங்கள் என்றால் சுமார் ஆயிரம் பேருக்கு மேல் என்று அர்த்தம். திருநெல்வேலி-கன்யாகுமரி பகுதிகளில் மிஷினரிகளின் மதமாற்ற முயற்சிகளைத் தடுப்பதற்காகத்தான் ஆர்.எஸ்.எஸ். தனது தோழமை அமைப்புகளுடன் வேலை பார்த்துக்கொண்டிருந்தது. யாரும் எதிர்பாராமல் திடீரென்று இஸ்லாத்துக்கு ஆயிரம் பேர் மாறுவதென்பது வெகு நிச்சயமாக அவர்களுக்கு அதிர்ச்சியளித்தது. வரிந்துகட்டிக்கொண்டு களத்தில் குதித்தார்கள்.

https://telegram.me/aedahamlibrary

இந்த மதமாற்றம் சம்பவத்தில் கணிசமான அளவில் வளைகுடா பணம் விளையாடியிருக்கிறது என்று குற்றம் சாட்டியது வி.எச்.பி. மிகச் சரியாக இதே நேரம் உருவாகியிருந்த சங் பரிவாரின் தமிழகக் குழந்தையான ராம கோபாலனின் ‘இந்து முன்னணியும்’ இதே கருத்தை முன்வைத்து, ‘மீனாட்சிபுரத்தில் மதம் மாற்றப்பட்டவர்களைத் திரும்பவும் ஹிந்து மதத்துக்கு மீட்போம்’ என்ற சபதத்துடன் திருநெல்வேலிக்குப் பாய்ந்தது.

ஒரு புறம் மதம் மாறிய தலித்துகள். மறுபுறம் மீட்கப் புறப்பட்ட ஆர்.எஸ்.எஸ்காரர்கள். இன்னொரு பக்கம், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணியும் மீனாட்சிபுரத்துக்குப் புறப்பட்டார். இருநூற்றுப் பத்துக் குடும்பங்கள். அவர்கள் ஏன் இஸ்லாத்துக்கு மாறவேண்டும்? என்ன நிர்ப்பந்தம்? அல்லது அந்த விருப்பம் ஏன் அவர்களுக்கு வந்தது? மதம் மாறியவர்களை நேரில் சந்தித்து விளக்கம் கேட்பது அவர் நோக்கம். (பிறகு அதை ஒரு சிறு நூலாகவும் திராவிடர் கழகம் வெளியிட்டது.)

மீனாட்சிபுரத்து தலித்துகளுக்கு அங்கு அவர்களை அடக்கி ஆண்டுகொண்டிருந்த சாதி ஹிந்துக்கள் பிரச்னை. பல்லாண்டு காலமாக. மதம் மாறியவர்களுள் ஒருவரான உமர் ஷெரீஃப், கி. வீரமணியிடம் பேசும்போது, இருபது ஆண்டுகளுக்கு முன்பே தனது தந்தை மதம் மாறிவிட வேண்டுமென்று சொன்னதாகவும், ஆனால் சில பெரியவர்கள் அதை அப்போது தடுத்துவிட்டதாகவும் கூறியிருக்கிறார்.

ஆனால், சாதிய அடக்குமுறைக் காரணங்களைப் பற்றி ஆர்.எஸ்.எஸ்ஸோ அதன் தோழமை இயக்கங்களோ கருத்துக் கூறவில்லை. மாறாக, ‘அதிகமான மக்களை இஸ்லாத்துக்கு மாற்றுவதன்மூலம் ஹிந்து சமுதாயத்துக்குள் பிளவு ஏற்படுத்தும் திட்டம்’ என்று இதனை ஆர்.எஸ்.எஸ். வருணித்தது. ('வெற்றிப்பாதையில் தமிழக ஆர்.எஸ்.எஸ்.’) இதன் தொடர்ச்சியான நடவடிக்கையாக தேசமெங்கும் ஹிந்து ஒற்றுமை மாநாடுகள் ஆர்.எஸ்.எஸ்ஸால் ஒழுங்கு செய்யப்பட்டன. மீனாட்சி புரத்திலும் ராமநாதபுரத்திலும் (முதுகுளத்தூரில் இதே போன்ற ஒரு பெரிய அளவிலான மதமாற்றச் சம்பவம் திட்டமிடப்பட்டிருந்தது ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.) அத்தகைய மாநாடுகள் நடத்தப்பட்டன.

வெறும் மாநாடுகள் போதாது. அதுவும் ஆர்.எஸ்.எஸ் மட்டும் தனித்து நடத்தும் மாநாடுகள். மக்களின் நம்பிக்கைக்குரிய மதகுருமார்களின் ஆதரவு இதற்கு வேண்டும் என்று நினைத்தார்கள். மதுரை ஆதீனம், உடுப்பி பெஜாவர் மடத்தின் பீடாதிபதி, ராமகிருஷ்ண தபோவனத்தினர் என்று பல தரப்பினரைத் தொடர்புகொண்டு ஆதரவு திரட்டுவதில்

https://telegram.me/aedahamlibrary

வி.எச்.பி. வரிந்துகட்டிக்கொண்டு வேலை பார்த்தது. கடல் கடந்த தேசங்களில் வசிக்கும் ஹிந்து சன்னியாசிகள் சிலரையும் ஆதரவு கேட்டு அணுகியது வி.எச்.பி.

‘ஹிந்து ஒற்றுமை மாநாடுகளாலும், பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் மீனாட்சிபுரத்துக்கு வந்ததனாலும் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது; ஹிந்துக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டது’ என்று சில ஆர்.எஸ்.எஸ். பிரசுரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணிக்கு பேட்டியளித்த மீனாட்சிபுரத்து மக்கள் வாஜ்பாயின் வருகையை வேறு விதமாக வருணித்தார்கள்.

‘வாஜ்பாய், ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்தோடு போனாரே தவிர எங்களை வந்து சந்திக்கவில்லை. நாங்களாவது மதம் மாறியவர்கள். மாறாத மற்ற குடும்பங்களையாவது அவர் சந்தித்திருக்கலாம். செய்யவில்லை. மாறாக, ஊர்வலத்தின் இறுதியில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தினார்கள். இஸ்லாத்தைத் தாக்கிப் பேசினார்கள். மதம் மாறாதே, அரபுப் பணத்துக்கு அடிமையாகாதே என்று கோஷமிட்டார்கள். பிறகு போய்விட்டார்கள். அதன்பின் நாங்கள் சென்று அவரைச் சந்தித்தோம். வெறுமனே சில வார்த்தைகள் பேசினார். போய்விட்டார். அவ்வளவுதான்.’

மீனாட்சிபுரத்தில் அறுபதுகளிலேயே ஒருமுறை மதமாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இதே போன்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சிலர் கிறிஸ்தவத்துக்கு மாறியிருக்கிறார்கள். சுமார் ஐம்பது குடும்பங்கள். ஆனால் அந்த மத மாற்றத்தால் அவர்களுடைய சமூக அந்தஸ்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை என்று இப்போது முஸ்லிமாக மாறியவர்கள் சொன்னார்கள்.

‘தாழ்த்தப்பட்டவன் கிறிஸ்தவனானால், இன்னொரு தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர் தான் பெண் கொடுத்து, பெண் எடுக்கிறார். ஒரு நாடார் கிறிஸ்டியன் தாழ்த்தப்பட்ட கிறிஸ்டியன் வீட்டில் சம்பந்தம் வைத்துக்கொள்வதில்லை என்பதைப் பார்த்தோம். அதனால்தான் நாங்கள் இம்முறை இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்தோம். தீண்டாதவன் என்ற வித்தியாசம் இல்லை பாருங்கள்!’

தேசிய அளவில் மாபெரும் கவன ஈர்ப்பை நிகழ்த்திய மீனாட்சிபுரம் மதமாற்றச் சம்பவத்தின் இறுதியில் (வாஜ்பாய் வந்து சென்ற பிறகு) ‘மதம் மாறியவர்கள் மீண்டும் தாய் மதத்துக்குத் திரும்புவார்கள்’ என்று

https://telegram.me/aedahamlibrary

ஆர்.எஸ்.எஸ்ஸும் அதன் தோழமை இயக்கங்களும் அறிவித்தன. ஏழெட்டுக் குடும்பங்கள் அப்படி மாறியதாகவும் சொல்லப்பட்டது.

உண்மையில் மீனாட்சிபுரம் ரஹ்மத் நகராக மாறியது பற்றிய வருத்தமும் விமரிசனமும் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு மட்டுமில்லை. அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆரே இதனை எதிர்த்தார். கண்டிக்கவும் செய்தார். இதன் விளைவாக திருநெல்வேலி மாவட்டத்தில் அ.தி.மு.க. உறுப்பினர்களாகவும் அனுதாபிகளாகவும் இருந்த இஸ்லாமியர்கள் எம்.ஜி.ஆர். மீது அதிருப்தி கொண்டார்கள். ஒரு சிலர் கட்சியில் இருந்தும் விலகி முஸ்லிம் லீக் போன்ற அமைப்புகளில் சேர்ந்தார்கள்.

*

மத மாற்றங்களுக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்ஸின் யுத்தங்களுக்கு, இந்திய சுதந்தரத்தின் வயதைக் காட்டிலும் கொஞ்சம்தான் குறைவு.

பிரிட்டிஷார் இந்தியாவில் இருந்து புறப்பட்டபோதே மிஷினரிகளும் கிளம்பத் தயாராகத்தான் இருந்தன. ஆனால் சுதந்தர இந்தியாவின் முதல் அரசு, தன்னை மதச்சார்பற்ற அரசாக அறிவித்துக்கொண்டபோதுதான் அவர்கள் தயங்கினார்கள், ஒத்திப்போட்டார்கள், அப்படியே தங்கியும் விட்டார்கள். முன்னர் செய்துகொண்டிருந்த வேலையைத் தொடர மட்டுமல்ல; அதற்குமுன் அவர்கள் நினைத்தே பார்த்திராத பிராந்தியங்களில் எல்லாம் போய் தங்கள் வேலையைச் செய்யவும் வழி செய்துகொடுத்துவிட்டது அரசு என்று ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர்களுள் ஒருவரான ஹெச்.வி. சேஷாத்ரி தமது RSS: A Vision in Action என்ற நூலில் கூறுகிறார்.

இந்தியாவில் சுமார் ஒரு லட்சத்துக்குச் சற்றுக் கூடுதலான மிஷினரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இவற்றுள் சுமார் பத்தாயிரம் மிஷினரிகள் வெளிநாடுகளைச் சேர்ந்தவை. சாதி ஒடுக்குமுறை அதிக அளவில் இருக்கும் பிகார், ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலும், பிரிவினைவாதம் பேசிப் போராடிக்கொண்டிருக்கும் வட கிழக்கு மாநிலங்களிலும் இவர்களுடைய பணி பெருமளவு நடைபெறுகிறது.

இம்மாநிலங்களில்தான் படிப்பறிவில்லாதோர் எண்ணிக்கையும் அதிகம். மலைவாழ் பழங்குடிகளும் அதிகம். மிஷினரிகளின் இலக்காக அவர்கள்தாம் முதலில் ஆட்படுகிறார்கள். மிகப்பெரிய பண பலத்துடன் மத மாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் இம்மிஷினரிகளைப் பொதுவாக

https://telegram.me/aedahamlibrary

மாநில அரசுகள் கண்டுகொள்வதில்லை. ஆதிவாசிகளுக்கான பள்ளிக்கூடங்கள், தங்கும் விடுதிகள் அமைப்பது, மருத்துவ முகாம்களை நடத்துவது, ஆதிவாசி கிராமங்களில் ஒரு மருத்துவர் கொண்ட மருத்துவமனைகள் அமைப்பது என்று இவர்கள் செய்கிற காரியங்கள் , மாநில அரசுகளின் ஒரு பக்கத் தலைவலியைச் சற்றே தீர்ப்பதை மறுக்க முடியாது.

எனவே சுதந்தரமாக அவர்கள் அடுத்தக் கட்டத்தை நோக்கி நகரத் தொடங்கிவிடுகிறார்கள். மதப்பிரசாரங்கள். பிரார்த்தனைக் கூட்டங்கள். நோய்நீக்குப் பிரார்த்தனைகள். எளிய மக்களை ஊடுருவ எளிய உத்திகள்.

இவர்களுடைய வலைப்பின்னல், செயல்வேகம், மத மாற்றத்தை முன்னிட்டுச் செலவழிக்கத் தயங்காத பணம் போன்றவை திகைப்பூட்டக்கூடியவை. கேரளத்தில் இயங்கும் ‘ஹிந்து விவேக் கேந்த்ரா’ என்னும் அமைப்பைச் சேர்ந்த பி. ஸ்ரீபிரகாஷ், பி. ஜெயப்பிரகாஷ் என்னும் இரண்டு ஆய்வாலர்கள், Conversions in India: Eloquent Evidence என்று எட்டு ஆண்டுகளுக்கு முன் ஓர் ஆய்வறிக்கை வெளியிட்டார்கள். மிஷினரிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை சொந்த அனுபவத்தின் அடிப்படையில் ஆதாரபூர்வமாக விளக்கும் அந்த அறிக்கையிலிருந்து ஒரு பகுதியைப் பார்க்கலாம். ஆர்.எஸ்.எஸ்ஸின் பதற்றத்துக்கான காரணம் விளங்கும்.

‘முதலில் சுமார் இருநூற்றைம்பது கிறிஸ்தவ மிஷினரிகளின் முகவரிகளைத் திரட்டினோம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக இயங்கும் மிஷினரிகள். அவர்களுக்குக் கடிதங்கள் எழுதினோம். கிறிஸ்தவத்தை அறிந்துகொள்ள வழிகாட்டும்படி எங்கள் கடிதங்களில் குறிப்பிட்டிருந்தோம். உடனடியாக அனைத்து மிஷினரிகளிடமிருந்தும் பதில்கள் வரத்தொடங்கின. கேட்பது யாரோ ஒரு தனி நபர் தானே என்று அவர்கள் நினைக்கவில்லை. ஒவ்வொரு நபருக்கும் பதிலளிக்கவேண்டுமென்பதை அவர்கள் கடமையாகக் கொண்டிருப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. அனைவரும் ‘இலவச பைபிள் கோர்ஸில்’ சேரச் சொல்லியிருந்தார்கள்...

தொடர்ந்து ஒவ்வொரு இடத்திலிருந்தும் பைபிள்கள், சிறு பிரசுரங்கள், விளக்கப் புத்தகங்கள், குறுஞ்செய்திகள் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் என்று வந்து குவிய ஆரம்பித்தன. ஒரு சில தினங்களுக்குள் எங்களிடம் முப்பது பைபிள்கள், 40 புதிய ஏற்பாடுகள், நூறு சிறு வெளியீடுகள் சேர்ந்துவிட்டன. எழுபத்தி இரண்டு ரூபாய் செலவிட்டு

https://telegram.me/aedahamlibrary

பதிவுத் தபாலில்கூட ஒரு பைபிள் அனுப்பப்பட்டிருந்தது. ஒரு பைபிள் பிரதியில் கிரஹாம் ஸ்டெயின்ஸ் என்று கையெழுத்திடப்பட்டிருந்தது. (ஒரிஸ்ஸாவில் பின்னாளில் வண்டியோடு கொளுத்தப்பட்ட ஆஸ்திரேலியப் பாதிரியார் இவர்.) என் ஒருவனுக்காக எப்படி இவர்கள் இத்தனை செலவிடுகிறார்கள் என்று வியந்துபோனேன். என்றால் எத்தனை லட்சம், கோடி மக்கள்! அத்தனை பேருக்குமாகச் சேர்த்து எவ்வளவு செலவிடுவார்கள்...'

ஆர்.எஸ்.எஸ். பதற்றம் கொண்டது இதனால்தான். நாகாலாந்து, மற்றும் மிசோரம் மாநிலங்கள் அநேகமாக முழு அளவில் கிறிஸ்தவ மாநிலங்களாக மாற்றப்பட்டுவிட்டதை முன்னிட்டே ஆர்.எஸ்.எஸ். தனது செயல்திட்டத்தில் வட கிழக்கு மாநிலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமான நிரல்களை வகுக்கத் தொடங்கியது.

இந்த மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ் அடிக்கடி ஹிந்துசமய மாநாடுகளை நடத்தத் தொடங்கியது. வி.எச்.பி. அவற்றை முன்னின்று நடத்தும். பாரதிய ஜனஜாதி சன்ஸ்க்ருதி மன்ச் (இந்திய மலைவாழ் மக்கள் கலாசார நிறுவனம்) என்ற அமைப்பை ஆரம்பித்தார்கள். மலைவாழ் மக்களுக்கு என்ன பிரச்னை? அவர்களுக்குச் செவி கொடுக்க யாருமில்லாததுதான் முதல் பிரச்னை. அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்ட ஆதிவாசிகளை நேரில் சென்று சந்திப்பது. அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வது. அவர்களோடு இருப்பது. அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்குபெறுவது.

மதம் மாறியிருக்கிறீர்களா? சரி. ஏன் மாறினீர்கள்? அதனால் உங்கள் வாழ்வில் எந்த மறுமலர்ச்சியும் வந்துவிடப் போவதில்லை. கொஞ்சம் பணம் கிடைத்திருக்கும். ஆனால் விரைவில் தீர்ந்துவிடும் அல்லவா? அப்போதும் இதே மலைவாசி மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளிலிருந்து உங்களுக்கு விடுதலை கிடைக்கப்போவதில்லை. மாறாக, உங்களுடைய கலாசார பலத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யலாமே? பாரம்பரியத்தைப் பாதியில் விடுவதால் நீங்கள் ஒரு பெரும்பிழை செய்கிறீர்கள். உங்களுடைய சந்ததிகளுக்கு, நீங்களும் உங்கள் முன்னோரும் பயின்ற அற்புதமான பாரதப் பண்பாட்டை அறிமுகப்படுத்தத் தவறியவர்களாகிறீர்கள். மேற்கின் மதம் உங்களுக்கு எப்படிப் பொருந்தும்? அது வெறும் சட்டை. ஆனால் உங்கள் உள்ளம் எதில் இருக்கிறது? பழம் பெருமைமிக்க நாகர் வழிபாட்டை விட்டுவிடுவீர்களா? முடியுமா உங்களால்? எங்கோ வடமூலையில் நீங்கள் கடைப்பிடிக்கும் இந்தவழிபாட்டு முறை தென்கோடியிலும்

https://telegram.me/aedahamlibrary

கன்யாகுமரியில் கடைப்பிடிக்கப்படுவது உங்களுக்கு என்ன செய்தி சொல்கிறது? நாம் அனைவரும் ஒரே புள்ளியில் கோக்கப்பட்டிருக்கும் அச்சுகள் என்று தெரியவில்லையா?

ஆர்.எஸ்.எஸ்ஸின் வனவாசி கல்யாண் ஆசிரமும் வி.எச்.பி நடத்தும் இந்த ஜனஜாதி சம்ஸ்க்ருதி மன்ச்சும் வடக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் மலைவாழ் பழங்குடி மக்களிடையே மிகப்பெரிய அளவில் தாக்கத்தை உண்டாக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

*

ஆனால் எல்லா சந்தர்ப்பங்களும் அமைதி வழியில் நகர்ந்துவிடுவதில்லை. எல்லா முயற்சிகளிலும் அன்பு ததும்பியிருப்பதுமில்லை. மதமாற்ற விவகாரங்கள் தொடர்பாக ஆர்.எஸ்.எஸ். தலையிட்ட சில சம்பவங்கள் பெரும் கலவரங்களில் முடிந்திருக்கின்றன. மதமாற்றமே முக்கியத்துவம் பெறாத சில சந்தர்ப்பங்களிலும் இரு வேறு மதங்களின் மோதல் தூபமிடப்பட்டிருக்கிறது. ஹிந்து எழுச்சி மாநாடுகளில், அதனையொட்டி நடைபெற்ற ஊர்வலங்களில், சங் பரிவார் குழுவில் ஓர் அமைப்பான இந்து முன்னணியின் விநாயகர் ஊர்வலங்களில் என்று எண்ணத் தொடங்கினால் ஏராளமாகக் கிடைக்கும்.

இவ்வகையில் கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காட்டில் நடைபெற்ற கலவரம் இந்திய அளவில் கவன ஈர்ப்பு நிகழ்த்திய இன்னொரு முக்கியமான சம்பவம்.

தமிழகத்திலேயே மிக அதிக அளவில் மதமாற்றங்கள் நிகழும் மாவட்டம், கன்யாகுமரி.  சுமார் நாநூற்று ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கேரளத்துக்குக் கடல் வழியே வந்த அன்னிய மிஷினரி அமைப்புகளின்மூலம் மீனவர்கள் மதமாற்றம் செய்யப்பட்டதுதான் இதன் தொடக்கம்.

பிறகு வெகுகாலம் வரை அடக்குமுறைகளுக்கும் உயர் சாதிக் கொடுமைகளுக்கும் இலக்கான நாடார் சமூகத்து மக்களில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவத்துக்கு மாறினார்கள். இன்றைக்கும் குமரி மாவட்டத்தில் உள்ள நாடார் சமூகத்தில் பாதிப்பேர் கிறிஸ்தவர்கள், பாதிப்பேர் ஹிந்துக்கள்.

வீடுகளிலேயே ஹிந்து-கிறிஸ்தவ மத நம்பிக்கையாளர்கள் ஒன்றாக

https://telegram.me/aedahamlibrary

வசிக்கும் காட்சியும் இம்மாவட்டத்துக்கே உரிய தனிச்சிறப்பு அல்லது தனிப் பிரச்னை.ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களில் ஒரு சிலர் ஹிந்துவாகவும் ஒரு சிலர் கிறிஸ்தவர்களாகவும் இருப்பார்கள்.

இவை ஒருபுறமிருக்க, குமரி மாவட்டத்தின் ஒரு சிற்றூரான மண்டைக்காடு செய்திகளுக்கு நடுவே வந்ததன் காரணத்தைப் பார்க்கலாம்.

மண்டைக்காடு, ஒரு கடற்கரையோர சிற்றூர். மீனவர்கள் கிறிஸ்தவர்களானாலும் மற்றவர்கள் ஹிந்துக்கள். பகவதியம்மன் பிரபலமானவள். அம்மன் கோயில் திருவிழா அதைவிடப் பிரபலம். 1982ம் ஆண்டுத் திருவிழா சமயம் அங்கு கலவர மேகம் மையம் கொண்டது.

மீனவர்களுக்கும் போலீசாருக்கும் ஏற்பட்ட சிறு கைகலப்பாக ஆரம்பமானது. காரணங்கள் குறித்த தெளிவு யாருக்குமில்லை. அல்லது அப்படியொரு குறிப்பிட்ட காரணமே இல்லை என்றும் சொல்லலாம்.எப்படியானாலும் போலீசார் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியது உண்மை. அதில் ஆறு மீனவர்கள் இறந்தது உண்மை.

நாகர்கோயில் கத்தோலிக்கப் பாதிரியார் ஆரோக்கியசாமி என்பவர் இதை கிறிஸ்தவர்கள்மீது ஹிந்துக் காவலர்கள் நிகழ்த்திய தாக்குதலாக வருணித்தார். சம்பவத்தைக் கண்டித்து ஓர் ஊர்வலத்தை அவர் ஒழுங்கு செய்தார். ஆட்சியில் இருந்த எம்.ஜி.ஆர். அரசு, அந்த ஊர்வலத்துக்குத் தடை விதித்தது.

அதில் ஆரம்பித்தது.

பத்து நாள் இடைவெளியில் மண்டைக்காட்டுக்குச் சற்றுத்தள்ளி உள்ள ஈத்தாமொழி என்னும் ஊரில் இருந்த ஹிந்துக்கள்மீது மீனவர்கள் தாக்குதலில் ஈடுபட்டார்கள். ஹிந்துக்கள் என்றால், அவர்கள் நாடார்கள். சம்பவத்துக்கு வெகு சில தினங்களுக்கு முன்னர், அந்தப் பகுதியில் நடைபெற்ற ஏதோ ஒரு கூட்டத்தில் முஸ்லிம்களுக்கு விரோதமாக அவர்கள் பேசியிருந்தார்கள்.

மீனவர்கள் அந்த விவரத்தை உள்ளூர் முஸ்லிம்களிடம் எடுத்துச் சென்று சூட்டை இன்னும் அதிகப்படுத்தினார்கள்.

ஆக, ஹிந்துக்கள் மீது நிகழ்த்த ஆரம்பிக்கப்பட்ட தாக்குதலில் கிறிஸ்தவ மீனவர்களுடன் உள்ளூர் முஸ்லிம்களும் கலந்துகொண்டார்கள்.

https://telegram.me/aedahamlibrary

பற்றிக்கொண்டது. மண்டைக்காடு கலவரம் என்று சொல்லப்பட்டாலும் மண்டைக்காட்டுக்கு வெளியே பல்வேறு கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் போதிய இடைவெளியில் தொடர்ந்து நடைபெற்ற இக்கலவரத்தை ஹிந்துக்கள் தரப்பில் முன்னெடுத்தது ஹிந்து முன்னணி மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

கிறிஸ்தவர்களால் தொடர்ந்து மிகக் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட ஹிந்துக்களைப் பாதுகாக்கிறோம் என்று களமிறங்கினார்கள். கொளுத்தப்பட்ட ஹிந்துக்களின் கடைகளுக்கும் வீடுகளுக்கும் பதிலாக கிறிஸ்தவர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களது இருப்பிடங்கள் கொளுத்தப்பட்டன.

கலவரம் அடுத்தக்கட்டத்தை நோக்கி நடந்தது. வெட்டரிவாள்களும் உருட்டுக்கட்டைகளும் தீப்பந்தங்களுமாக ஆரம்பித்தது, வெடிகுண்டுகளுக்கு இடம்பெயர்ந்தது. எங்கும் மரண ஓலம். பயத்தில் நடுங்கி வீடுகளை விட்டு வெளிவர அஞ்சிய மக்கள். தடுக்கச் சென்ற காவல் துறையினர் மீதும் கண்மண் தெரியாத தாக்குதல்கள் கிறிஸ்தவர்களால் நடத்தப்பட்டன.

ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என்று மூன்று மதத்தைச் சேர்ந்தவர்களும் மோதிக்கொண்ட இக்கலவரத்தைத் தடுத்து நிறுத்தி, அமைதியை நிலைநாட்ட குன்றக்குடி அடிகள் ஒரு முயற்சி மேற்கொண்டார்.

அவரது அமைதிப் பேச்சுகளால் ஆகப்போவது ஒன்றுமில்லை என்று குமரி மக்கள் சொல்லிவிட்டார்கள். கலவரத்தை ஆரம்பித்தது கிறிஸ்தவர்கள். வழி நடத்த உதவி செய்தது முஸ்லிம்கள். அடிபட்டவர்கள் பெருமளவு ஹிந்து நாடார் சமூகத்து மக்கள். குன்றக்குடி அடிகள் கிறிஸ்தவர்களுடனும் முஸ்லிம்களுடனும் இணக்கமாகப் போகச்சொல்லி சொற்பொழிவாற்றுவது வெட்கக்கேடு என்றது ஆர்.எஸ்.எஸ்.

கலவரம் நடந்த காலம் முழுதும் ஆர்.எஸ்.எஸ் மாவட்டமெங்கும் ஒட்டிய சுவரொட்டிகள், கலவரத்தின் சூட்டைக் குறைப்பதைக் காட்டிலும் அதிகப்படுத்துவதற்கு உதவுவதாகவே இருந்ததாகப் பெரும்பாலான மக்கள் சொன்னார்கள்.

‘அவர்கள் தொடங்கவில்லை. ஆனால் கிடைத்த வாய்ப்பை விடாமல் பயன்படுத்திக்கொண்டார்கள்’ என்று ஒரு சாராரும், ‘மண்டைக்காட்டுச் சம்பவம் அங்கேயே முடிந்திருக்க வேண்டியது. அது மாவட்டம் முழுதும்

https://telegram.me/aedahamlibrary

பரவியதற்கு ஆர்.எஸ்.எஸ்ஸும் ஹிந்து முன்னணியும்தான் காரணம்’ என்று இன்னொரு சாராரும் விமரிசித்தார்கள்.

கலவரம் நடந்த நாள்களிலேயே தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். கன்யாகுமரி மாவட்டத்துக்கு நேரில் சென்றார். கலவரத்தின் மையப்புள்ளி என்று வருணிக்கப்பட்ட தாணுலிங்க நாடாரை அவர் சந்தித்துப் பேசினார். வெகு விரைவில் தாணு லிங்க நாடார் ஹிந்து முன்னணியின் தலைவராக நியமிக்கப்பட்டதற்கும் அதற்கும் தொடர்பில்லை என்றாலும் குமரி மாவட்ட கிறிஸ்தவர்கள் மத்தியில் எம்.ஜி.ஆருக்கு இருந்த செல்வாக்கு சற்று சரிவதற்கு இந்தச் சந்திப்பு ஒரு காரணம் என்று பின்னால் பேசப்பட்டது.

மண்டைக்காடு கலவரம் குறித்து எழுதிய, பேசிய ஊடகங்கள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ்ஸை ஒரு அச்சுறுத்தக்கூடிய, அதிபயங்கரவாத  இயக்கமாக வருணித்தன. மதக் கலவரங்களுக்கு தூபமிட்டு, மக்களிடையே பெருமளவு பிளவுக்கு வித்திடும் இயக்கம் என்று குற்றம் சாட்டின. ஒரு தேசிய அபாயமாக ஆர்.எஸ்.எஸ்ஸை முன்வைத்துப் பேச, அதன் பரம்பரை விரோதிகளான இடதுசாரிகளுக்கு அது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்ததை மறுக்க முடியாது.

*

இம்மாதிரியான கலவரச் சூழல் வரை செல்லாதுபோனாலும், மத மாற்றங்களை முன்வைத்து வட மாநிலங்களில் பல சமயம் ஆர்.எஸ்.எஸ். மிகத் தீவிரமாகவும் உக்கிரமாகவும் கிறிஸ்தவ மிஷினரிகளுடன் போரிட்டிருக்கிறது. இதனாலேயே, சிறுபான்மையினரின் வோட்டு வங்கி குறித்துக் கவலைகொள்ளும் அரசியல் கட்சிகள் ஆர்.எஸ்.எஸ்ஸை ஒரு பயங்கரவாத இயக்கமாக முன்வைக்கத் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வந்திருக்கின்றன.

அவர்களுடைய குற்றச்சாட்டுகள் 1999ம் ஆண்டு வரை அர்த்தமில்லாத ஒன்றாகத்தான் இருந்துவந்திருக்கிறது. ஏனென்றால், மதச்சார்பற்ற அரசியல்வாதிகள் அச்சமூட்டிய அளவுக்கு ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாத நடவடிக்கை எதிலும் ஈடுபட்டதில்லை. 1999ம் ஆண்டு ஜனவரி 22ம் தேதி ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த தாரா சிங் என்னும் பஜ்ரங் தளத்து உறுப்பினர், தனது சில தோழர்களுடன் கிரஹாம் ஸ்டெயின்ஸ் என்னும் பாதிரியாரைக் குடும்பத்தோடு கொளுத்தியது, சங் பரிவார் அமைப்புகளைப் பற்றிய எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தியாக வேண்டிய அவசியத்தை உண்டாக்கிவிட்டது.

https://telegram.me/aedahamlibrary

கிரஹாம் ஸ்டூவர்ட் ஸ்டெயின்ஸ், பிற அனைத்து கிறிஸ்தவப் பாதிரியார்களையும்போல, இந்தியாவில் கிறிஸ்தவம் பரப்புவதற்காக ஆஸ்திரேலியாவில் இருந்து வந்தவர்.

1965ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த ஸ்டெயின்ஸ், மயூர்பஞ்ச் இவான்ஜலிகல் மிஷினரி சொசைடி என்னும் அமைப்புடன் இணைந்து, ஒரிஸ்ஸாவின் பின் தங்கிய, மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பணியாற்றத் தொடங்கினார். 1983ல் மிஷினரியின் ஒரு குறிப்பிட்ட பிரிவின் முழுப் பொறுப்பும் அவர்வசம் தரப்பட்டது. அவர் மயூர்பஞ்ச்சில் தொழுநோயாளிகளுக்கான மறுவாழ்வு நிலையம் ஒன்றைத் தொடங்கி நடத்த ஆரம்பித்தார். 83ல் திருமணம் செய்துகொண்டு, மூன்று குழந்தைகளுக்கும் தந்தையான ஸ்டெயின்ஸ், தனது தொழுநோயாளிகளுக்கான பணிகளைச் செய்ததுபோக, மிச்சப் பொழுதில் மதமாற்றங்களில் தீவிரமாக ஈடுபட்டதுதான் பிரச்னைக்குக் காரணம் என்று ஹிந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள்.

அவர் ஒரிஸ்ஸா பழங்குடிகளின் மொழியில் பைபிளை மொழிபெயர்க்கும் வேலையில் அப்போது ஈடுபட்டிருந்தார். தரைவிரிப்புகள் தயார் செய்தல், சிறு கூடைகள் முடைதல் போன்ற சிறுதொழில்களில் தேர்ச்சியுள்ளவரான ஸ்டெயின்ஸ், தனக்குத் தெரிந்த அந்தத் தொழில்களை மலைவாழ் மக்களுக்குச் சொல்லிக்கொடுப்பது வழக்கம். தொழில் கற்க வருவோரிடம் மதம் பரப்புவது அவர் வழக்கம்.

ஜனவரி 22ம் தேதி, ஒரு காட்டுப்பகுதியில் பிற பாதிரியார்கள், அவர்தம் குடும்பத்தினருடன் கூடி மகிழ்ந்து கொண்டாடிவிட்டுத் தன் இரு மகன்களுடன் ஜீப்பில் திரும்பிக் கொண்டிருந்தார் ஸ்டெயின்ஸ். இரவாகிவிட்டபடியால், மேற்கொண்டு பயணம் தொடராமல் வண்டியை ஒரு ஓரமாக நிறுத்தி உள்ளேயே அவர்கள் படுத்துத் தூங்கினார்கள்.

கணக்குப் போட்டுக் காத்திருந்த தாரா சிங்கும் கூட்டாளிகளும் அந்த வண்டியின்மீது பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தினார்கள். உறக்கத்தில் இருந்த ஸ்டெயின்ஸும் அவரது பிள்ளைகளும் தப்பிக்க முயற்சி செய்து, முடியாமல் போனது. காரோடு கருகியது அந்தக் குடும்பம்.

தாரா சிங் என்ற ரவீந்திர பால் சிங், உத்தரபிரதேசத்தைச் சேர்ந்தவன். டெல்லியில் சில காலம் வேலை பார்த்துவிட்டு, ஹிந்தி ஆசிரியராகப் பணியாற்றுவதற்காக ஒரிஸ்ஸாவுக்கு வந்தவன். தீவிரமான பஜ்ரங் தள் தொண்டன். பசு பாதுகாப்பு இயக்கத்தில் இணைந்து பணியாற்றிக்கொண்டிருந்தவன். பாதிரியாரைக் கொளுத்திக் கொன்றது

https://telegram.me/aedahamlibrary

பற்றி அவனுக்கு எந்த வருத்தமும் இல்லை. அவர் செய்தது ஹிந்து மதத்துக்கு எதிரான நாசகாரச் செயல். நான் செய்தது, ஓர் ஹிந்துவாக எனக்குத் திருப்தியளிக்கும் செயல். அவ்வளவுதான் என்று சொல்லிவிட்டான்.

*

படித்த, நகர்ப்புற மக்களிடையே மதமாற்ற நடவடிக்கைகளின் தீவிரம் பற்றிய புரிதல்கள் குறைவு. அவை பெரும்பாலும் பின் தங்கிய கிராமப்புறங்களில் நடப்பவை. ஆதிவாசிக் குடியிருப்புப் பகுதிகளில் நடப்பவை. 'பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி என்று மக்களை நெருங்கவிடாத அரசுகள், எப்படியோ அம்மாதிரியான பகுதிகளுக்கு மிஷினரிகளை மட்டும் தாராளமாக அனுமதிக்கின்றன' என்று எச்.வி. சேஷாத்ரி ஒரு கட்டுரையில் எழுதுகிறார்.

மதமாற்றத்துக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் தோழமை இயக்கங்களின் நடவடிக்கைகள் பிரசார வடிவிலும் தடுப்பு நடவடிக்கைகள் வடிவிலும் மீள்மாற்ற முயற்சிகளின் வடிவிலும் இருந்தவரை மிஷினரிகள் பற்றி அவர்கள் கூறிக்கொண்டிருக்கும் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் பொருட்படுத்திக் கேட்க நியாயமிருந்தது. ஸ்டெயின்ஸ் படுகொலைச் சம்பவத்துக்குப் பிறகு, சங் பரிவாரின் மதமாற்றத் தடுப்பு முயற்சிகள் எக்கணமும் அச்சமூட்டக்கூடிய பரிமாணமெடுக்கலாம் என்கிற அபாய அறிவிப்பைத் தருவதை மறுக்க முடியாது.

இதனாலேயே இடதுசாரிகள் மற்றும் மதச்சார்பற்றவர்களின் ஹிந்துத்துவ இயக்கங்களுக்கு எதிரான பிரசாரங்களுக்கு ஹிந்துக்கள் மத்தியிலேயே கணிசமான ஆதரவு சேரத் தொடங்குகிறது.

மதமல்ல, அமைதி ஒன்றே அடிப்படைத் தேவை என்பதுதான் பெரும்பாலான இந்தியர்களின் விருப்பம். ஆர்.எஸ்.எஸ். அதைப் புரிந்துகொள்ள மறுப்பதுதான் அதன் பெரிய சிக்கல்.

https://telegram.me/aedahamlibrary

# 10. காஷ்மீர் முதல் கேரளம் வரை - 1

‘ஆர்.எஸ்.எஸ்ஸின்மீது சுமத்தப்படும் தீவிரவாதம் மற்றும் முஸ்லிம் விரோத மனோபாவம் பற்றிய குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை. ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பு செலுத்துவது, ஒத்துழைத்துச் செல்வது, இணைந்து செயல்படுவது போன்றவற்றை முஸ்லிம்கள் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.’

என்று முன்னாள் குடியரசுத் தலைவர் ஜாகிர் ஹுசேன் 1949ம் ஆண்டு சொன்னதற்கும் (Post-independence India, Volumes 33-50, Om Prakash Ralhan),

‘முஸ்லிம்கள் தங்களை ஹிந்து என்று அழைக்க ஒப்புக்கொண்டால் அவர்களுக்கும் ஆர்.எஸ்.எஸ்ஸின் கதவு திறந்தே இருக்கும்’

என்று அதன் தலைவர்களுள் ஒருவரான சுதர்சன் சொன்னதற்கும் உள்ள மன விசாலம் சார்ந்த நுணுக்கமான வித்தியாசம் புரியுமென்றால், முஸ்லிம்கள் விஷயத்தில் ஆர்.எஸ்.எஸ்ஸின் நிலைபாடும் செயல்பாடுகளும் புரிவதில் பிரச்னை இராது.

‘ஹிந்து’ என்கிற பதத்துக்கு ஆர்.எஸ்.எஸ். தனது தொடக்ககாலம் முதல் வழங்கிவரும் வியாக்கியானத்தின் தொடர்ச்சியாகவே (வெறும் மத அடையாளமல்ல. இந்திய தேசிய அடையாளத்தை உணரக்கூடிய யாரும் ஹிந்துக்களே என்பது.) இதனைக் கொள்ளுமாறு சுதர்சன் சொன்னாலும், சட்டென்று எந்த முஸ்லிமையும் வெறுப்படையச் செய்யக்கூடிய அழைப்பு என்று உறுதியாகச் சொல்லலாம்.

ஆர்.எஸ்.எஸ்ஸுக்கும் இந்திய முஸ்லிம்களுக்குமான உறவுச் சீர்கேட்டின் சரித்திரம் காஷ்மீரில் தொடங்குவது. பிரிவினையின்போது நிகழ்ந்த கலவரங்கள், அதில் ஹிந்துக்கள் சார்பில் பங்குபெற்ற இயக்கங்களுள் ஒன்றாக ஆர்.எஸ்.எஸ். முஸ்லிம்கள்மீது நிகழ்த்திய தாக்குதல்களை இதில் சேர்க்க இயலாது.ஒட்டுமொத்த தேசத்தின் கொந்தளிப்பில், தனியொரு இயக்கத்தைக் குற்றம்சாட்ட அப்போது யாரும்தயாரில்லை. அதற்கான நியாயமும் போதுமான அளவு இல்லை.

ஆனால், காஷ்மீருக்குள் ஆர்.எஸ்.எஸ் நுழைந்த தருணம் முக்கியமானது.

https://telegram.me/aedahamlibrary

தனித்து கவனிக்கப்படவேண்டியது. இன்றுவரை இந்திய முஸ்லிம்கள் தமது ஆர்.எஸ்.எஸ். வெறுப்பை உயர்த்திப் பிடிப்பதற்கான வேர்கள் அங்குதான் இருக்கின்றன. இதில் இன்னொரு சிக்கல் உண்டு. வெறும் ஹிந்து - முஸ்லிம் விவகாரமாகக் காஷ்மீர் பிரச்னை முடிந்துவிடுவதில்லை. அது இந்திய தேசியம் - காஷ்மீர் தேசியம் என்னும் இரு பெரும் தேசிய அடையாளங்களுக்கு இடையிலான மோதலாக உருப்பெற்றுக்கொண்டிருந்த தருணம். இந்திய தேசியத்தின் மதச்சார்பற்ற பிரதிநிதியாகப் பண்டித நேருவும், மதம் சார்ந்த பிரதிநிதியாக ஆர்.எஸ்.எஸ்ஸும் காஷ்மீர் மக்களுக்கு அறிமுகமானார்கள். பெரும்பான்மை முஸ்லீம் மக்கள். தங்களைக் காஷ்மீரிகளாக அல்லாமல், ஒருபோதும் இந்தியர்களாக அதற்குமுன் உணராதவர்கள், உணர விரும்பாதவர்களும்கூட.

ஆர்.எஸ்.எஸ்ஸின் காஷ்மீர் காண்டத்துக்குள் நுழைவதற்குமுன் சுருக்கமாகக் காஷ்மீரின் பூர்வகதையைப் பார்த்துவிடலாம். அது அவசியம்.

*

அகண்ட இந்தியா, பிரிட்டனின் அதிகாரத்துக்கு உட்பட்டிருந்த காலத்தில், காஷ்மீர் சமஸ்தானம் பரம சுதந்தரமாக இயங்கிக்கொண்டிருந்தது. அதன் அப்போதைய மன்னர் ஹரி சிங், ஒரு ஹிந்து. பெரும்பாலும் பம்பாயில் இருப்பார். காஷ்மீரைக் காட்டிலும் பம்பாயின் குதிரைப் பந்தய மைதானங்கள் அவரை மிகவும் கவர்ந்தவை. சுகவாசி. 1933ம் ஆண்டே ரஹமத் அலி என்கிற முஸ்லிம் லீக் தலைவர் பாகிஸ்தான் இயக்கத்தைத் தொடங்கி, பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், காஷ்மீர், சிந்து, பலூசிஸ்தான் ஆகிய ஐந்து மாகாணங்களை ஒருங்கிணைத்து பாகிஸ்தானை உருவாக்க வேண்டும் என்று சொன்னபோது ஹரிசிங் அதைக் கண்டுகொள்ளவேயில்லை. பின்னால் மார்ச் 1940ல் நடைபெற்ற முஸ்லிம் லீகின் லாகூர் மாநாட்டிலும் இதே கருத்து திரும்ப வலியுறுத்தப்பட்டது. அப்போதும் ஹரி சிங் ஒப்புக்கும் கருத்து சொன்னதில்லை.

அவரைப் பொருத்தவரை காஷ்மீர் அவருடைய பரம்பரைச் சொத்து. முஸ்லிம் லீகும் காங்கிரசும் என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டு போகட்டும். யாருக்கென்ன கவலை?

பரம்பரைச் சொத்தா? அப்படித்தான் சொல்லவேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

ஹரி சிங்கின் பாட்டனார் குலாப் சிங் என்பவர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் நடைபெற்ற ஆங்கிலோ-சீக்கிய யுத்தத்தில் பிரிட்டிஷ் படைகளுக்கு உளவு சொல்லி, உதவி செய்து, பஞ்சாப் சமஸ்தானத்தை பிரிட்டன் வெற்றிகொள்ள வழிவகுத்தவர். அதற்குப் பரிசாக அவருக்கு பிரிட்டன் அளித்த நிலப்பரப்புதான் காஷ்மீர். எழுபத்தி ஐந்து லட்ச ரூபாய் பணம். தவிர ஆண்டுக் கப்பமாக ஒரு குதிரை, பன்னிரண்டு செம்மறி ஆடுகள் (ஆறு ஆண் ஆடுகள், ஆறு பெண் ஆடுகள்), மூன்று செட் காஷ்மீர் சால்வைகள்.

போதும் போ. காஷ்மீரை வைத்துக்கொண்டு நன்றாகப் பிழைத்திரு என்று ஆசீர்வதித்து அனுப்பிவிட்டார்கள்.

அதன்பின் பரம்பரையாகக் காஷ்மீரை ஆண்டு வந்தது குலாப் சிங்கின் குடும்பம். ஒரு ஹிந்து டோக்ரா சமஸ்தானமாக அது அறியப்பட்டாலும் வசித்த மக்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சுதந்தரம் வழங்கிவிட்டு, பிரிட்டன் கப்பலேற முடிவு செய்தபோது, காங்கிரஸ் தலைவர்களும் சரி, முஸ்லிம் லீக் தலைவர்களும் சரி. காஷ்மீர் தங்கள் தேசத்துடன் தான் இணையும் என்று வெகு இயல்பாக எதிர்பார்த்தார்கள்.

ஹரி சிங் ஓர் ஹிந்து மன்னர், நிச்சயமாக அவர் காஷ்மீரைப் பாகிஸ்தானுடன் இணைக்கமாட்டார் என்பது இந்தியர்களின் நம்பிக்கை. காஷ்மீரில் இருக்கும் தொண்ணூறு சதவீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் முஸ்லிம்கள். அவர்கள் பாகிஸ்தானுடன் இணைய விரும்புவதே இயல்பானது என்று முஸ்லிம் லீக் நினைத்தது.

ஹரி சிங், இந்த இரு தேசங்களுடனும் இணைய விரும்பவில்லை. எதற்கு இணையவேண்டும்? இது என் பாட்டன் சொத்து. காஷ்மீர் சமஸ்தானம் தனித்தே இயங்கும். வேண்டுமானால் இரு தேசங்களுடன் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம். மக்கள் இந்தப் பக்கம், அந்தப்பக்கம் போய்வருவதில் பிரச்னையில்லாதபடிக்கு ஒரு போக்குவரத்து ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். மற்றபடி இணைப்பு அவசியமில்லாதது என்று அவர் கருதினார்.

மவுண்ட் பேட்டனும் காந்தியும் நேருவும் மற்றபலரும் 'காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்துவிடுங்கள்' என்று திரும்பத் திரும்ப ஹரி சிங்கிடம் வற்புறுத்திக்கொண்டே இருந்தபோதும் அவர் சம்மதிக்கவில்லை. ஒரு கட்டத்தில் இணைப்பு விஷயமாகப் பேச வந்த மவுண்ட் பேட்டனைச் சந்திக்கக்கூட விரும்பாமல், உடம்பு சரியில்லை

https://telegram.me/aedahamlibrary

என்று சொல்லித் திருப்பி அனுப்பிவிடுமளவுக்கு அவர் இந்த விஷயத்தில் தீவிரமாக இருந்தார்.

ஆனால் தீவிரங்கள் நொறுங்கும் காலம் ஒன்று வரும். இயற்கையின் நியதி. அது ஹரி சிங்குக்கு உடனே உடனே வந்தது. காஷ்மீருக்காகப் பாகிஸ்தான் மேற்கொண்ட ஒரு மாபெரும் ஊடுருவல் முயற்சி. சுதந்தரம் அடைந்தவெகு சில நாள்களுக்குள்ளாகவே திட்டமிட்டு வடமேற்கு எல்லைப்புற மாகாண ஆதிவாசிகளைத் தயார் செய்து அவர்கள் அனுப்பினார்கள். பின்னாலேயே பாகிஸ்தானின் ராணுவமும் தயாராக நிற்கிற செய்தி முன்னாலேயே வந்து சேர்ந்தது.

எனவே, இந்தியாவின் ராணுவ உதவியைக் கேட்டார் ஹரி சிங். எனவே இந்தியாவுடன் இணைய அவர் சம்மதிக்கவேண்டி இருந்தது. எனவே இந்தியா-பாகிஸ்தான் முதல் யுத்தம் ஆரம்பித்தது. எனவே காஷ்மீர் ஒரு பிரச்னை பூமியாகிப் போனது.

இந்தப் பின்னணியில் நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. இந்தியாவுடன் இணைவது என்பதை ஹரி சிங் ஒரு நிர்ப்பந்தமாகத்தான் எதிர்கொண்டார் என்பதே அது. அது அவரது சுய விருப்பமல்ல. காலத்தின் கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. ஹரி சிங் மட்டுமல்ல. எந்தக் காஷ்மீரியும் தம் மண்ணை இந்தியாவின் ஒரு பகுதியாகவோ, பாகிஸ்தானின் ஒரு பகுதியாகவோ நினைத்துப் பார்க்க அன்று தயாராயில்லை. அவர்கள் மனத்தில் இருந்தது காஷ்மீர் தேசியம். பல நூறு ஆண்டுகளாக அதைத்தான் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இந்திய விடுதலைப் போர் நடந்துகொண்டிருந்தபோது காஷ்மீரிகளின் பங்களிப்பு என்று அதில் குறிப்பிடப் பெரிதாக ஒன்றும் இருந்ததில்லை. காஷ்மீரிலிருந்து இடம்பெயர்ந்து பிரிட்டிஷ் இந்தியாவின் பகுதிகளுக்குள் தலைமுறைகளுக்கு முன்னால் வந்து சேர்ந்தவர்கள் விஷயம் வேறு. காஷ்மீரிலேயே இருந்தவர்களுக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்னவென்று தெரியாது. அவர்கள் சுதந்தரமாக இருந்தார்கள். அவர்களுடைய போராட்டமெல்லாம், அவர்களுடைய மன்னருக்கு எதிராகத்தான். பெருவாரி முஸ்லிம் மக்களை ஒதுக்கி ஓரம் கட்டும் ஹிந்து மன்னர் ஹரி சிங். அவரது அடக்குமுறைகள். கொடுங்கோல் ஆட்சி. அதற்கெதிரான போராட்டங்கள். புரட்சிகள். ஊர்வலங்கள்.

சட்டென்று எல்லாம் மாறி, இந்தக் கணம் முதல் நீ இந்தியக் குடிமகன் என்றபோது ஏற்பதற்கு அவர்கள் தயக்கம் காட்டியது உண்மை. சரித்திரமல்ல; சமகால சௌகரியங்களே யதார்த்த வாழ்வின் ஆதாரம்

https://telegram.me/aedahamlibrary

என்பது அதன்பின் புரியத் தொடங்கிய விஷயம்தான்.

அது இயல்பாகப் புரிவதற்கான அவகாசத்தை இந்தியா அளித்திருக்கலாம். காஷ்மீரின் பாதுகாப்புக்கு மட்டும் உறுதியளித்துவிட்டு, இணைப்பு தொடர்பாகத் தீர்மானிக்கும் உரிமையைக் காஷ்மீர் மக்களிடமே விட்டிருந்தால் சுலபமாக அவர்கள் இந்தியாவுடன் இணைந்திருப்பார்கள். காஷ்மீருக்குள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்த பாகிஸ்தான் படைகளைக் கண்டு வெறுத்திருந்தவர்கள் அவர்கள். இந்திய ராணுவம் மேற்கொண்ட மீட்பு முயற்சிகளைக் கண்டு வியந்துபோயிருந்தவர்கள் அவர்கள்.

பெரும்பான்மை முஸ்லிம்கள் அல்லவா, என்ன முடிவெடுப்பார்களோ என்கிற அச்சமும் சந்தேகமும் இந்தியாவுக்கு இருந்ததுதான் பிரச்னை. அந்த அவநம்பிக்கையின் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே அங்கு அனைத்துக்குமான ஆதாரப் பிரச்னை.

*

ஹரி சிங், காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கவேண்டும். அதைத்தவிர வேறு வழியில்லை அவருக்கு. ஆனால் ஒப்புக்கொள்ள மறுக்கிறார். அங்கே பாகிஸ்தான் துருப்புகள் காஷ்மீருக்குள் நுழைந்துவிட்டன. எக்கணமும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். தலைவர்களும் ராஜதந்திரிகளும் எத்தனையோ முறை பேசிப் பார்த்துவிட்டார்கள். பயனில்லை. ஹரி சிங் கேட்க மறுக்கிறார். ஏதாவது செய்யவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால், காஷ்மீர், பாகிஸ்தானின் ஒரு பகுதியாகிவிடுவது உறுதி.

என்ன செய்யலாம்?

சர்தார் படேல், ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கரை அழைத்தார். ஹரி சிங்கிடம் பேசுங்கள். புரிய வையுங்கள். காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தே தீரவேண்டும். (Converted Kashmir: A bitter saga of Religius Conversion, Chapter 19, Narender Sehgal)

இங்கேதான் காஷ்மீருக்குள் நுழைகிறது ஆர்.எஸ்.எஸ். மகாராஷ்டிர மாநிலத்தில் எங்கோ சுற்றுப்பயணத்தில் இருந்த கோல்வால்கர் மறுகணமே தன் பணிகளை அப்படியே விட்டுவிட்டு டெல்லிக்கு விமானமேறி, அங்கிருந்து ஸ்ரீநகருக்குப் பறந்தார்.

ஹரி சிங் ஓர் ஹிந்து மன்னர். எனவே இந்தியாவில் ஹிந்துக்கள்

https://telegram.me/aedahamlibrary

மத்தியில் மதிப்புடன் செயல்பட்டுக்கொண்டிருந்த தேசிய இயக்கமான ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர் சென்று பேசினால் மனம் மாறலாம் என்று படேல் கருதியிருக்கலாம்.

கோல்வால்கர் ஹரி சிங்கைச் சந்தித்துப் பேசினார். (அக்டோபர் 18, 1947). படேல் தெரிவிக்க விரும்பிய அனைத்தையும் மற்ற சமாதானத் தூதுவர்களைப் போலவே அவரும்தெரிவித்தார். அவர் ஒரு ஹிந்து மன்னர். எனவே, ஹிந்து தர்மம், ஹிந்து ராஷ்டிரம், ஹிந்து உணர்வைக் கட்டிக்காக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அவசியம் எடுத்துச் சொல்லியிருப்பார். ஒரு முஸ்லிம் தேசத்தின் கரங்களில் காஷ்மீர் விழுந்துவிடுவதைத்தான் ஹரி சிங் விரும்புகிறாரா என்று கேட்டிருப்பார்.

கோல்வால்கர் பேசியதால்தான் ஹரி சிங் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க ஒப்புக்கொண்டார் என்பதல்ல. பேச்சுவார்த்தைகளின் ஓர் அத்தியாயத்தில் ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர் இருக்கும்படியான சூழலை சர்தார் படேல் உருவாக்கினார் என்பதுதான் இங்கு முக்கியம்.

1946லேயே ஜம்முவில் ஆர்.எஸ்.எஸ்ஸின் ஷாகாக்கள் சில செயல்பட ஆரம்பித்திருந்தன. காஷ்மீர் மாநிலத்திலேயே ஹிந்துக்கள் மிகுதியாக வசித்துக்கொண்டிருந்த இடம் ஜம்மு. முழு சமஸ்தானத்தில் வெறும் பத்து சதவீத சிறுபான்மையினராக இருந்த ஹிந்துக்கள் மத்தியில் இந்த ஷாகாக்கள் பெருமளவு செல்வாக்குப் பெற்றிருந்ததை மறுக்க முடியாது. அவர்கள் ஒரு பாதுகாப்பை விரும்பினார்கள். மன்னர் தரக்கூடிய பாதுகாப்புக்கு மேலாக ஒரு பாதுகாப்பு. பக்கத்தில் பூஞ்ச் பகுதிகளில் ஹரி சிங்குக்கு எதிராக முஸ்லிம்கள் கலகம் தொடங்கியிருந்த நிலையில், ஒரு பிரச்னை என்று வந்தால் முதல் இலக்கு ஜம்மு ஹிந்துக்கள்தான் என்று அவர்களுக்கு வெகு நிச்சயமாகத் தெரிந்தது. எனவே ஆர்.எஸ்.எஸ் சேவகர்கள் தங்கள் மத்தியில் இருப்பது எப்படிப் பார்த்தாலும் நல்லதே என்று காஷ்மீரி ஹிந்துக்கள் நினைத்தார்கள்.

சிறுபான்மையினருக்கு எப்போதும், எங்குமிருக்கும் அச்ச உணர்வின் வெளிப்பாடு.

*

இந்திய-பாகிஸ்தான் இடையிலான முதல் யுத்தம் தொடங்கிய வேளையில் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் இந்திய ராணுவத்துக்கு உதவும் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டது இதன்

https://telegram.me/aedahamlibrary

இரண்டாம் கட்டம். சிலர் இதில் உயிர்த் தியாகமும் செய்திருக்கிறார்கள்.

காஷ்மீரில் இருந்த பாகிஸ்தான் ஆதரவு முஸ்லிம்களுக்கு எதிரான சிறு தாக்குதல்கள், அவர்கள் பறக்கவிட்டிருந்த பாகிஸ்தான் கொடிகளைப் பிடுங்கிப் போட்டது, எங்கும் எப்போதும் 'பாரத் மாதாகீ ஜே' என்று கத்தியபடி சென்றது, ஜம்மு ஹிந்துக்களுக்கு அரணாக இருப்பதன்பொருட்டு, அங்கிருந்த முஸ்லிம்கள்மீது போர்க்காலத்தில் சந்தேகக்கண் வைத்தது, போரில் இந்தியா வென்றது உறுதியானதும் அதைப் பொதுவான முஸ்லிம்களுக்கு எதிரான வெற்றியாகச் சில கொண்டாட்டங்கள் நிகழ்த்தியது என்று பல விஷயங்கள் ஒன்று சேர்ந்தன. காஷ்மீரின் பெரும்பான்மை இனமான முஸ்லிம்கள் ஆர்.எஸ்.எஸ்ஸை முதல் முதலில் விரோதபாவத்துடன் நோக்கத் தொடங்கியது அப்போதுதான்.

ஏற்கெனவே ஹிந்து மன்னர் மீது அவர்களுக்கு இருந்த வெறுப்பு, அவரது அரவணைப்பில் சுகமாக இருந்த காரணத்தினாலேயே (ஹரி சிங் காலத்தில் அனைத்து அரசுப்பணிகளிலும் ஹிந்துக்கள்தான் இருந்தார்கள். முஸ்லிம்களுக்கு எங்கும் இடம் கிடையாது. தவிர பெரும் நில உடைமையாளர்களாகவும் ஹிந்துக்களே இருந்தார்கள். முஸ்லிம்களில் பெரும்பாலானோர் விவசாயக்கூலிகளாகவும் ஆடு மாடு மேய்ப்பவர்களாகவுமே இருக்க முடிந்தது.) ஹிந்துக்கள்மீது படர்ந்த வெறுப்பு, பெரும்பான்மை சமூகமாக இருந்தாலும் முஸ்லிம்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுவது பற்றிய இயல்பான மனக்கசப்பு, இவற்றுடன் இப்போது காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது, ஹிந்துக்களின் காவலனாக ஆர்.எஸ்.எஸ். ஜம்முவில் நடமாடத் தொடங்கியதும் சேர்ந்துகொள்ள, முஸ்லிம்களின் முழு வெறுப்பும் கோபமும் கசப்புணர்வும் அவர்கள் பக்கம் திரும்பியது.

ஆர்.எஸ்.எஸ்ஸுக்குக் காஷ்மீரில் இன்னொரு பெரிய பிரச்னை ஷேக் அப்துல்லா. காஷ்மீர், இந்தியாவுடன் இணைவது தவிர வேறு வழியில்லை; ஆனால் அது மக்கள் விருப்பமாக இருக்கவேண்டும். நேரு வாக்களித்தபடி மக்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தவர். அதனாலேயே ஹிந்து தேசியவாதிகளால், பாகிஸ்தான் ஆதரவாளர் என்று முத்திரை குத்தப்பட்டவர்.

அப்துல்லா, காஷ்மீரின் மக்கள் தலைவர். நேருவின் வற்புறுத்தலால் ஹரி சிங் காலத்திலேயே காஷ்மீரின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றவர். பெரும்பான்மை காஷ்மீர் மக்கள் அவரது ஆதரவாளர்கள். காங்கிரசில்

https://telegram.me/aedahamlibrary

மட்டுமல்லாமல் முஸ்லிம் லீகிலும் அவருக்கு நண்பர்கள் உண்டு. இந்தக் காரணத்தாலேயே அவருடைய வாக்கெடுப்புக் கோரிக்கையை விமரிசித்து அவரைப் பாகிஸ்தான் ஆதரவாளர் என்று குற்றம் சாட்டியது ஆர்.எஸ்.எஸ்.

காஷ்மீர் இணைப்புக்குப் பிறகு, வெகு நிச்சயமாக அது இந்தியாவின் ஒரு பகுதிதான் என்று நேரு அநேகமாக தினசரி ஒருமுறையாவது சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் காஷ்மீருக்கான சிறப்பு அதிகாரங்கள், சட்டங்கள், நடைமுறைகள் என்று ஹிந்து தேசியவாதிகள் எதிர்ப்பதற்குப் பல விஷயங்களை அந்த மண் தன் தரப்பில் ஏந்தியிருந்தது.

எளிய உதாரணம் ஒன்று சொல்லலாம். பர்மிட்.

காஷ்மீருக்குள் நுழைய அன்றைக்கு ஒரு பர்மிட் இருந்தாக வேண்டியது அவசியம். காஷ்மீர் அரசு வழங்கும் பர்மிட். இந்தியாவின் ஒரு பகுதிதான் என்று நேரு சொல்வது உண்மையானால் காஷ்மீருக்குப் போவதற்கு பர்மிட் எதற்கு?

ஆர்.எஸ்.எஸ்ஸின் இடைவிடாத கேள்வி இது. இதை பாரதீய ஜன சங்கத்தைத் தோற்றுவித்திருந்த ஹிந்துத்துவவாதி டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ஓர் அரசியல் ஓரங்க நாடகமாக நடத்திக்காட்டி தேசத்துக்குப் புரியவைக்கத் தீர்மானித்தார்.

ஏற்கெனவே பார்த்தபடி, சுதந்தர இந்தியாவின் முதல் பொதுத்தேர்தல்களில் பங்குபெற்ற ஜன சங்கம், வெறும் மூன்று இடங்களில் மட்டும் வெற்றி பெற்று மனம் தளர்ந்திருந்த தருணம். தொண்டர்களுக்கு உற்சாகமூட்டவேண்டும். தீவிர அரசியலில் மீண்டும் துடிப்புடன் ஈடுபட உத்வேகம் தரவேண்டும். காஷ்மீர் அதற்கு உதவும்.

ஏற்கெனவே ஜம்மு பிரஜா பரிஷத் என்ற ஹிந்து அமைப்பு காஷ்மீரைக் கலக்கிக்கொண்டிருந்த தருணம் அது. ஜம்மு ஹிந்துக்களுக்கு அரசியல் ரீதியிலான பாதுகாப்பு தருவதற்காக உருவான அமைப்பு. ஆர்.எஸ்.எஸ். காஷ்மீருக்குள் நுழைந்த பிறகு உருவாக்கிவைத்த அமைப்பு. ஷேக் அப்துல்லாவின்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லிவிட்டு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு. ஷேக் அப்துல்லாவின் ஜென்ம எதிரியான முன்னாள் மன்னர் ஹரி சிங்கின் ஆதரவு பெற்ற அமைப்பு. அதனாலேயே முஸ்லிம்களின் விரோதத்தைச் சம்பாதித்த அமைப்பு.

காஷ்மீரில் அவர்கள் தினமும் ஷேக் அப்துல்லாவுக்கு எதிராக ஏதாவது

https://telegram.me/aedahamlibrary

ஒரு போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

இரண்டு விஷயங்களில் அவர்கள் மிகத் தீவிரமாக இருந்தார்கள். முதலாவது, இந்திய தேசியக் கொடிக்கு நிகராக காஷ்மீரின் கொடி சமஸ்தானத்தில் எங்கும் பறக்கக்கூடாது. (பறக்கலாம் என்று இந்திய அரசு அனுமதித்திருந்தது.) பறந்தால், போய் இறக்கிவிட்டுத்தான் மறுவேலை. இரண்டாவது, காஷ்மீரின் ஆட்சித் தலைவராகப் பிரதமரே (அதாவது அப்துல்லாவே) இருக்கக்கூடாது என்னும் கோரிக்கை. இந்தியாவின் மற்ற மாநிலங்களில் அப்படியா இருக்கிறது? ஆளும் கட்சியின் தலைவராக முதல் அமைச்சர் இருப்பார். ஆட்சித் தலைவர் என்றால் கவர்னரே அல்லவா?

முன்பே குறிப்பிட்டதுதான். காஷ்மீருக்கென எந்தச் சிறப்புச் சலுகையும் கூடாது. அது இந்தியாவின் இன்னொரு மாநிலம். தீர்ந்தது விஷயம்.

ஜம்மு ஹிந்துக்கள் அநேகமாக இந்த விஷயத்தில் நூறு சதவீதம் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பரிஷத்தின் கருத்தை ஏற்றுக்கொண்டுவிட்டிருந்தார்கள். தங்களுடைய பாதுகாப்பு என்பது ஒரு பூரண இந்திய தேசியப் பாதுகாப்பாக இருந்தால் மட்டுமே முழுமையுறும் என்று அவர்கள் நம்பத் தொடங்கினார்கள். முஸ்லிம் பெரும்பான்மை உள்ள மாநிலமான ஜம்மு காஷ்மீரில், என்னதான் மதச்சார்பற்ற அரசியல் பேசினாலும், அப்துல்லா என்கிற 'பிரதமர்' ஒரு முஸ்லிம். பதவிக்கு வந்தக் கணம் முதல் அவரது செயல்பாடுகள் அனைத்தும் முஸ்லிம்களுக்கு ஆதரவாகவே இருந்துவருகிறது. இந்நிலையில் ஆர்.எஸ்.எஸ்ஸும் பிரஜா பரிஷத்தும் கேட்பதில் என்ன தவறு? சிறுபான்மை ஹிந்துக்களை முஸ்லிம்கள் முற்றிலுமாக ஒழித்துக்கட்டிவிட மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?

எனவே அவர்கள் பிரஜா பரிஷத்தைத் தீவிரமாக ஆதரித்தார்கள். குறிப்பாக டோக்ராக்கள் என்ன செய்யவும் தயாராகக் களத்தில் இருந்தார்கள்.

ஒரு சம்பவம். இந்திய தேசியக் கொடிக்குப் பக்கத்தில் அதே உயரத்தில் பறந்துகொண்டிருந்த தேசிய மாநாட்டுக் கட்சியின் கொடியை பிரஜா பரிஷத் உறுப்பினர்கள் சிலர் சேர்ந்து கீழே இறக்கினார்கள். இந்த வைபவத்துக்கு ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் பாதுகாப்பு கொடுத்தார்கள்.

பற்றிக்கொண்டுவிட்டது. வினாடிப் பொழுதில் பரிஷத் உறுப்பினர்களுக்கும் மாநாட்டுக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே

https://telegram.me/aedahamlibrary

மூண்ட கலவரம், யுத்தம்போல் பரிமாணம் பெற்றுவிட, அடிதடி, கதவடைப்பு, ஊரடங்கு உத்தரவு என்று சூடேறிக்கொண்டேபோய் நூற்றுக்கணக்கான பரிஷத் உறுப்பினர்களைக் காஷ்மீர் காவல் துறை கைது செய்து சிறையில் தள்ளியது. பரிஷத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரும் கைதானார்.

இந்தச் செய்தி, தீ மாதிரி தேசமெங்கும் பரவத் தொடங்கியது. தேசம் முழுதுமென்றால், இந்தியா முழுதும்.

நேரு கவலை கொண்டார். வெகு நிச்சயமாக இது இந்தியா முழுதுமுள்ள இந்துக்களிடையே பதற்றத்தை உண்டாக்கும் என்று அஞ்சிய நேரு, பரிஷத்தின் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்துவிடும்படி அப்துல்லாவைக் கேட்டுக்கொண்டார்.

பல்லைக் கடித்தார் அப்துல்லா. விருப்பமின்றிதான் விடுவித்தார். ஆனால் வெறுமனே அல்ல. நேருவுக்கு ஓர் எச்சரிக்கையுடன். இந்தியாவைக் கபளீகரம் செய்ய விரும்பும் மதவாத சக்திகளை எப்போது நீங்கள் முழுதாக அடக்கி ஒடுக்குகிறீர்களோ, அப்போதுதான் காஷ்மீர் இந்தியாவுடன் முழுமையாக இணையும், ஜாக்கிரதை.

இந்த ஒரு வரி, அப்துல்லாவைப் பிரிவினைவாதியாகக் குற்றம் சாட்ட ஆர்.எஸ்.எஸ்ஸுக்குப் போதுமானதாக இருந்தது. தேசத்துரோகியாக வருணிக்கவும் வசதியாக இருந்தது.

இரு பக்கமும் சிக்கலுள்ள சூழ்நிலைதான். நேரு நிச்சயமாக காஷ்மீர் ஹிந்துக்களைப் பகைத்துக்கொள்ளும் விதமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளத் தயாராக இல்லை. இந்திய தேசியத்தைத் தீவிரமாக ஆதரிக்கும் அவர்களை அவரால் எப்படிப் பகைத்துக்கொள்ள முடியும்?

நேரு அவர்களை இந்தியர்களாகவே பார்த்தார். அப்துல்லா ஹிந்துக்களாகவே பார்த்தார். அதுதான் பிரச்னை.

*

இந்தச் சூழ்நிலையில்தான் பர்மிட் இல்லாமல் காஷ்மீருக்குள் நுழைந்து பார்த்து, அது இந்தியாவின் ஒரு பகுதிதான் என்று நேரு சொல்வது உண்மையா என்று ‘ஆராய்ச்சி’ செய்ய ஷ்யாமா பிரசாத் முகர்ஜி முடிவு செய்கிறார்.(மார்ச் 11, 1953)

பஞ்சாபிலிருந்து ஜம்முவுக்குப் புறப்பட்ட டாக்டர் முகர்ஜியை

https://telegram.me/aedahamlibrary

எல்லையில் காஷ்மீர் போலிஸ் கைது செய்தது.

முகர்ஜி ஏற்கெனவே உடல்நலம் சரியில்லாமல் இருந்தார். சிறையில் இருந்தபோது மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தார். தற்செயலாக அங்கே அவர் இறந்துவிட, பகீரெனப் பற்றிக்கொண்டது காஷ்மீர்.

அப்துல்லா, டாக்டர் முகர்ஜியை விஷ ஊசி போட்டுக் கொன்றுவிட்டார் என்று குற்றம் சாட்டினார்கள் காஷ்மீரில் இருந்த ஹிந்துத்துவ ஆதரவாளர்கள். பிரஜா பரிஷத் மற்றும் ஆர்.எஸ்.எஸ்ஸின் ஊழியர்கள் இந்தப் பிரச்னையின் தீவிரத்தை யோசிக்காமல், உடனடியாக அப்துல்லாவைக் குற்றம் சாட்டியது மிகப்பெரிய, மோசமான விளைவுகளுக்குக் காரணமானது.

செய்தி ஜம்மு பகுதி முழுதும் பரவி, கணப்பொழுதில் இந்தியா முழுதும் ஆக்கிரமித்து, பெரும் பதற்றத்துக்கு வித்திட்டது. தேசமெங்கும் ஹிந்துக்கள் அப்துல்லாவுக்கு எதிரான கண்டனக் கூட்டங்களும் எதிர்ப்புக் கோஷங்களும் எழுப்ப, ஜம்மு ஹிந்துக்களோ, கண்டதும் கொன்றுவிடுவோம் என்றே பகிரங்கமாக அறிவித்து ஊரை இரண்டாக்கிக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர் முகர்ஜியின் மரணம், அவரது உடல்நிலை காரணத்தால் விளைந்ததுதான். பின்னால் இதனை நேரு பல தரப்புகளில் விசாரித்து உறுதி செய்தார். ஆனால் மாநிலத்தில் அப்துல்லாவின் செல்வாக்கு கணிசமாகச் சரிய - குறிப்பாக ஹிந்துக்கள் அவர்மீது முற்றிலும் நம்பிக்கை இழக்க இது ஒரு முக்கியக் காரணமானதை மறுக்க இயலாது.

முகர்ஜியின் மரணம் இயல்பானதுதான் என்று பிறகு விசாரித்துச் சொன்ன நேருகூட, சம்பவம் நடந்த சூட்டில் அது பற்றிய 'சுதந்தரமான' நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யச் சொல்லி அப்துல்லாவைக் கேட்டார். அவர்கள் இருவருக்கிடையிலும் கசப்புணர்வு வலுப்பெற இது ஒரு காரணம். மிக முக்கியக் காரணம்.

*

இந்தியா சுதந்தரம் அடைந்த நாளாக, காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட நாளாக, காஷ்மீரில் ஷாகா தொடங்கிப் பணியாற்ற ஆரம்பித்த ஆர்.எஸ்.எஸ்ஸுக்கும் காஷ்மீர் முஸ்லிம்களுக்கும் எப்போதும் பிரச்னை இருந்தது. காஷ்மீரின் இயல்பான அரசியல் பிரச்னைக்கு, ஆர்.எஸ்.எஸ். ஒரு மத வண்ணம் சேர்த்தது மிக

https://telegram.me/aedahamlibrary

முக்கியமான விஷயம். இந்தியாவா, பாகிஸ்தானா என்று மட்டுமே விவாதங்கள் ஓடிக்கொண்டிருந்த காலத்தில் ஹிந்துக்கள்-முஸ்லிம்கள் என்ற பிரிவினை காஷ்மீரில் ஆழமாக வேரூன்றவும், அது பிரச்னையாக வளரவும் ஆர்.எஸ்.எஸ்., பிரஜா பரிஷத் போன்ற இயக்கங்கள் அங்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் மிக முக்கியக் காரணம்.

முஸ்லிம்களிடமிருந்து ஹிந்துக்களைக் காப்பாற்றத்தான் அங்கு சென்றோம் என்று ஆர்.எஸ்.எஸ். சொல்லும். நீ வந்ததன்பிறகுதான் இந்த பேதமே அதிகரித்தது என்று காஷ்மீர் மக்கள் சொல்வார்கள். அதாவது பெரும்பான்மை மக்கள்.

கவனித்துப் பார்த்தால் ஒன்று புரியும். ஜம்மு ஹிந்துக்களுக்கும் காஷ்மீர் முஸ்லிம்களுக்குமான பிரச்னை ஹரி சிங்கால் ஏற்பட்டது. அவரது பாரபட்ச நடவடிக்கைகளின் விளைவு. மன்னர், தன்னை மிக மோசமான ஆட்சியாளராக வெளிப்படுத்திக்கொண்டதன் பரிசு, அந்த விரோதபாவம். காஷ்மீர், சட்டபூர்வமாக இந்தியாவின் ஒரு மாநிலமாக ஆகிவிட்ட பிறகு இந்திய அரசே நேரடியாக இரு தரப்புப் பிரச்னைகளைத் தீர்த்திருக்கலாம். முஸ்லிம்களுக்கு வேலை வாய்ப்பு, கல்வி வசதிகளைப் பெருமளவு செய்து தருவதன்மூலமேயே தீர்ந்திருக்கக்கூடிய பிரச்னை.

இந்தியாவுக்குப் பாகிஸ்தானை கவனிப்பதுதான் முக்கியமாக இருந்தது. எனவே ஹிந்துக்களை கவனிக்க ஹிந்து இயக்கங்கள் தயாராயின. அதனாலேயே ஜம்மு ஹிந்துக்கள் மீதான காஷ்மீர் மாநிலத்து முஸ்லிம்களின் வன்மம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போனது. தோதாக, காஷ்மீர் மாநில அரசியலில் தொடர்ந்து நடைபெற்ற அதிகார துஷ்பிரயோகங்கள், தேர்தல் தில்லுமுல்லுகள் அவர்களை இந்திய அரசுக்கு எதிரான மிகக் கடுமையான நிலையெடுக்கத் தூண்டின.

1987ம் ஆண்டு காஷ்மீரில் நடைபெற்ற பொதுத்தேர்தலும், அதில் கையாளப்பட்ட ஆளுங்கட்சியின் அளவுக்கதிகமான அதிகார துஷ்பிரயோகங்களும் தகிடுதத்தங்களும் காஷ்மீர் இளைஞர்களை ஆயுதமேந்த வைத்தன. இனி ஆயுதப் போராட்டம் ஒன்றுதான் வழி என்ற முடிவுக்கு அவர்களைத் தள்ளிய சம்பவம், அந்தத் தேர்தல்தான். பாகிஸ்தான் அவர்களை அரவணைத்தது. ஆயுதம் கொடுத்தது. பயிற்சி கொடுத்தது. தீவிரவாத மனோபாவம் மேலோங்கிய காஷ்மீர் முஸ்லிம்களை, ‘விடுதலைப் போராட்ட வீரர்கள்’ என்று சொல்லிக் கொம்புசீவி விட்டது.

https://telegram.me/aedahamlibrary

காஷ்மீரின் ஆட்சியாளர்கள், இந்திய அரசு, அதற்கு ஆதரவளிக்கும் ஜம்மு ஹிந்துக்கள், அவர்களுடைய பிரதிநிதிகள் அத்தனை பேரையும் ஒழித்துக்கட்டுவது என்று முடிவுசெய்து அவர்கள் வெறிகொள்ளத் தொடங்கிய தருணம் அது. எளிய முதல் இலக்காக ஜம்மு ஹிந்துக்கள் அவர்களுக்கு அமைந்துவிட்டார்கள்.

தீர்மானமாக அவர்கள் குறிவைத்துக் கொல்லத் தொடங்கினார்கள். அப்படித் தாக்க ஆரம்பித்த இயக்கங்களுள் சிலவற்றுக்கு பண்டிட்கள் மீது குறிப்பாக வன்மம் இருந்தது. ஹிந்துக்களின் மற்ற பிரிவினரையும் ஒழிப்பது அவசியமே. ஆனால் பண்டிட்டுகள் மிக முக்கியம். காஷ்மீர் மண்ணில் ஒரே ஒரு பண்டிட்கூட இல்லாது போகும்நாளில்தான் நமது பூரண சுதந்தரத்துக்கான முழுக்கதவும் திறக்கும் என்று ஓர் அறிக்கையில் தெள்ளத்தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது, அல்-பர்க் (அடூ ஆதணுஙு) என்ற ஓர் இயக்கம். காஷ்மீர் ஹிந்துக்களிடையே ஆர்.எஸ்.எஸ்ஸின் செல்வாக்கு அழுத்தமாக வேரூன்றுவதற்கு அங்கிருந்த பண்டிட்கள் (பிராமணர்கள்) முக்கியக் காரணம் என்பதை இங்கே நினைவுகூர்வது அவசியம். சிறுபான்மையினராக இருந்தாலும் ஹரி சிங்கின் காலத்தில் அவர்கள்தான் முஸ்லிம்களை அடக்கி ஆண்டார்கள் என்பதை நினைவுகூரவேண்டியது அதைவிட அவசியம்.

முஸ்லிம் ஜன்பஜ் ஃபோர்ஸ், அல்-உமர், அல்-ஜிஹாத், இக்வான் உல் முஸ்லிம், ஹிஸ்புல் முஜாஹிதீன் போன்ற இயக்கங்களும் பண்டிட்கள் விஷயத்தில் அல் பர்க்கின் கருத்தையே கொண்டிருந்தன.

என்ன செய்யலாம்? என்னவும் செய்யலாம். கடத்தலாம். சுட்டுக்கொல்லலாம். தூக்கிலிடலாம். வீடுகளைக் கொளுத்தலாம். பெண்கள் என்றால் மானபங்கப்படுத்தலாம். அதன்பின் கொல்லலாம். சிறுவர், சிறுமியரும் விலக்கல்ல. ஹிந்துக்கள் வாழும் பகுதிகளில் உள்ள கோயில்களை இடித்துத் தள்ளலாம். கொள்ளை அடிக்கலாம். அவர்களது பண்டிகைகள், திருவிழாக்கள் நடைபெறும் சமயங்களில் குண்டு வீசலாம் அல்லது வைக்கலாம்.

காரணங்கள் தேவையில்லை என்று அவர்கள் முடிவு செய்திருந்தார்கள். காஷ்மீரில் வசிக்கும் ஹிந்துக்களின் இனம் முழுவதையும் அழித்து ஒழிப்பது இலக்கு. ஒரு முழுமையான இஸ்லாமிய மாநிலமாக, மாற்று மதத்தவர்கள் யாரும் நெருங்க அச்சப்படக்கூடிய பிரதேசமாக மாற்றிவிட்ட பிறகு அடுத்தக்கட்டத்தை நோக்கி நகர வசதி.

பண்டிட்கள் சுமார் ஐந்து லட்சம் பேர் அப்போது ஜம்முவில்

https://telegram.me/aedahamlibrary

இருந்தார்கள். தொடர்ந்து இருக்கமுடியுமா என்னும் அச்சத்தில் இருந்தார்கள். ஒவ்வொரு நாள் பொழுது விடியும்போது இன்றைய பலிப்பட்டியலில் நாம் இருப்போமா என்ற எண்ணத்துடனே இருந்தார்கள்.

சுடப்பட்டுச் செத்தவர்கள்கூடப் பரவாயில்லை. கத்திக் குத்தும் துப்பாக்கிக் குண்டுகளும் சரியாகப் படாமல் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்க நேர்ந்தவர்களின் நிலைமைதான் மிக மோசம். அவர்களுக்கு யாரும் மருத்துவம் பார்க்கக்கூடாது என்று பெரும்பாலும் அனைத்துத் தீவிரவாத இயக்கங்களும் உத்தரவிட்டிருந்தன.

சாலையில் ஒரு பண்டிட் சுடப்பட்டு ரத்த வெள்ளத்தில் துடித்துக்கொண்டிருந்தால், போகிற வருகிற நல்லவர்கள் வெறுமனே பார்க்கத்தான் வேண்டும். ஓடிப்போய் தூக்கினாலோ, மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றாலோ, அடுத்த பலி கண்டிப்பாக அவர்தான்.

இதற்காகவே, ஒவ்வொரு கொலைச் சம்பவத்துக்கும் 'பாதுகாவலாக' ஓர் ஒற்றரை நியமிப்பது தீவிரவாதிகளின் வழக்கம். சம்பவம் நடந்து, அடுத்த சில மணி நேரங்கள் வரை அவர் அங்கே இருப்பார். யாராவது தாக்கப்பட்டவருக்கு உதவி செய்தால் உடனே விஷயம் போய்விடும். தாக்கிவிட்டுப் போனவர்கள் திரும்ப வந்துவிடுவார்கள்.

சுமார் ஆயிரத்தி முன்னூறு பண்டிட்கள் இம்மாதிரி, அரைகுறை உயிருடன் நாள் கணக்கில் ஊசலாடி, பிறகு இறந்திருக்கிறார்கள் என்கிறது ஓர் ஆய்வறிக்கை.

சர்வானந்த் கவுல் ப்ரேமி என்று ஒரு கவிஞர் இருந்தார் காஷ்மீரில். ஹிந்து பண்டிட். புகழ்பெற்ற கவிஞர், எழுத்தாளர். எண்பத்தி ஏழாம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு காஷ்மீர் மாநிலம் சந்தித்துவரும் தீவிரவாதப் பிரச்னை குறித்துக் கவலைகொண்டு அவர் ஒரு கட்டுரை எழுதி உள்ளூர் பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பிவைத்தார்.

கட்டுரை பிரசுரமானது. அதற்கு மறுநாள் காலை கவிஞர் வீட்டுக்கு ஒரு குழு வந்தது. அப்போது கவிஞரும் அவருடைய இருபத்தி ஏழு வயது மகனும் அங்கு இருந்தார்கள்.

நீதான் அந்தக் கட்டுரையை எழுதினாயா?

ஆம் என்றார் கவிஞர். சுட்டுவிட்டார்கள். அலறிக்கொண்டு ஓடிவந்த அவர் மகனுக்கும் ஒரு குண்டு.

https://telegram.me/aedahamlibrary

காந்தியவாதி. இந்திய சுதந்தரப் போராட்ட காலத்தில் டெல்லியில் இருந்தவர் என்பதால், பல தலைவர்களுடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர். மற்ற காஷ்மீரிகளைப் போல் அல்லாமல், அபூர்வமாக இந்திய சுதந்தரப் போராட்டத்தில் பங்குபெற்றவரும்கூட. இந்திய தேசிய உணர்வு என்பது அவருடைய ரத்தத்தில் கலந்தது.

அதனால்தான் அந்த ரத்தத்தை வெளியே எடுத்தோம் என்றார்கள் அவர்கள். முஜாஹித் சயீப் என்னும் இயக்கம், கவிஞரைக் கொன்றது தாங்கள்தான் என்று பொறுப்பேற்றுக்கொண்டது.

பல கவிஞர்கள். பல எழுத்தாளர்கள். பல கலைஞர்கள். அறிஞர்கள். அரசு ஊழியர்கள். பெண்கள். குழந்தைகள். விவசாயிகள். வேலையற்றவர்கள். ஊனமுற்றவர்கள். முதியவர்கள்.

காஷ்மீரின் சரித்திரத்தில் அழிக்கமுடியாத பெரும் ரத்தக்கறை படிந்த பக்கம் இது.  பண்டிட்டுகள் மீதான முஸ்லிம்களின் இன ஒழிப்பு நடவடிக்கை.  சந்தேகமில்லை. பல லட்சக்கணக்கான காஷ்மீரி ஹிந்துக்கள் அகதிகளாகப் புறப்பட்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த துயரச் சம்பவம் இதன் தொடர்ச்சியாக நடைபெற்றது. இன்றுவரை வீடின்றி, வாசலின்றி, சந்தோஷம் சற்றும் இன்றி சொந்த தேசத்தில் அவர்கள் அகதிகளாகத்தான் திரிந்துகொண்டிருக்கிறார்கள்.

அந்த 89ம் ஆண்டுக் காலக்கட்டத்தில் காஷ்மீர் ஹிந்துக்களுக்குப் 'பாதுகாப்பு'க் கொடுப்பதற்காக பாரதிய ஜனதாவின் ஆளான ஜக்மோகனை காஷ்மீரின் கவர்னராக நியமித்தது மத்தியில் ஆண்டுகொண்டிருந்த வி.பி. சிங் அரசு. (பாரதிய ஜனதா அப்போது தேசிய முன்னணியின் கூட்டணியில் இருந்த ஒரு கட்சி.)

ஒரு பக்கம், ஹிந்துக்களைத் தாக்கிய முஸ்லிம்களுக்கு ஆர்.எஸ்.எஸ். ஜம்முவில் பதிலடி கொடுத்துக்கொண்டிருந்தது. யார் செய்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பது தெரியாதவிதமான திடீர்த் தாக்குதல்கள். மறுபக்கம், அப்படித் தாக்குவதற்கு அனுமதியளிக்கக்கூடிய விதமாக வந்து சேர்ந்த  ஆளுநர் ஜக்மோகன்.

காஷ்மீர் முஸ்லிம்கள் ஜக்மோகனை வெறுத்த அளவு இன்னொரு ஹிந்துவை வெறுத்ததில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். மிகத் தெளிவாக, ஹிந்துக்கள் ஆதரவு நிலைபாடு எடுத்து, முஸ்லிம்களுக்கு எதிராக, காஷ்மீரில் இயங்கிக்கொண்டிருந்த ஹிந்து இயக்கங்களைத் தூண்டிவிட்டவர் ஜக்மோகன்.

https://telegram.me/aedahamlibrary

ஆரம்பித்தது அவர்களா நாங்களா என்னும் கேள்வியை முன்வைத்து இன்றுவரை இதன் அரசியல் முற்றுப்பெறாமல் விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. முஸ்லிம்கள் கொன்ற முதல் காஷ்மீர் பண்டிட்டே ஒரு ஆர்.எஸ்.காரர்தான். திக்கா லால் தப்லு என்பது அவர் பெயர். மாநில பாரதிய ஜனதா கட்சியின் துணைத்தலைவர். அதற்கு பதிலடியாக இவர்கள் ஆரம்பிக்க, பதிலுக்கு பதிலாக அவர்கள் முன்னேற, கொலையளவுக்கு வன்மத்தை வளர்த்தது ஆர்.எஸ்.எஸ்.தான் என்று முஸ்லிம்கள் குற்றம் சாட்டினார்கள்.

இரு தரப்புக்கும் பொறுப்பு இருக்கிறது. இரு தரப்பிலும் பிழைகளும் இருக்கின்றன. ஆனால் பேசித் தீர்க்கும் சாத்தியங்களை முற்றிலும் நிராகரித்துவிட்டு, பிரச்னையை பூதாகாரமாக்கியதில் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கும் அதன் தோழமை இயக்கங்களுக்கும்  சம பங்கு இருந்ததை மறுக்க முடியாதது. சிறுபான்மை இனமான காஷ்மீர் ஹிந்துக்கள் பாதுகாப்பாக அங்கே வாழ்வதுதான் முக்கியம் என்று இந்த இயக்கங்கள் கருதியிருந்தால் நிச்சயமாக பதில் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். அமைதி வழியில்தான் தீர்வு தேடியிருப்பார்கள்.

ஒரு பரிதாபத்துக்குரிய இனமாக காஷ்மீர் பண்டிட்டுகள் இந்திய சரித்திரத்தில் இடம் பெற்றதுதவிர இதனால் வேறு எந்த லாபமும் ஏற்படவில்லை.

https://telegram.me/aedahamlibrary

# 11. காஷ்மீர் முதல் கேரளம் வரை - 2

இந்திய முஸ்லிம்கள், தம்மை முஸ்லிம்களாக அன்றி, இந்தியர்களாக உணர்வதே இல்லை என்பதுதான் தனது சரித்திரம் முழுதும் ஆர்.எஸ்.எஸ். முஸ்லிம்கள் மீது வைத்துவரும் முதன்மையான விமரிசனம். முஸ்லிம்களின் தேசிய உணர்வின்மீது ஆர்.எஸ்.எஸ். கொள்ளும் தீராத சந்தேகமே இருதரப்புப் பகையின் அடிப்படை.

1947லேயே லேசாக ஆரம்பித்து, 1967ம் ஆண்டு கம்யூனிஸ்டுகள் தலைமையில் ஐக்கிய முன்னணி கேரளத்தின் ஆட்சியைப் பிடித்தபோது அதில் அங்கம் வகித்த முஸ்லிம் லீகால் திரும்பவும் முன்வைக்கப்பட்ட ‘மோப்லாஸ்தான்’ கோரிக்கையை இதற்கான தொடக்ககால உதாரணங்களுள் ஒன்றாகக் காட்டுகிறார்  எச்.வி. சேஷாத்ரி. (RSS: A Vision in Action, பக். 48)

கேரளத்தில், தெற்கு மலபார் - மலப்புரம் பகுதியில் முஸ்லிம்கள் மிகுதி. பாகிஸ்தான் என்ற தனி தேசம் குறித்த கனவிலும் கவனத்திலும் இருந்த முஸ்லிம் லீகுக்கு, இந்தப் பகுதி முஸ்லிம்கள் தமது நிலப்பரப்பைத் தனி மாவட்டமாக ஆக்கித்தரச் சொல்லிக் கேட்டபோது அந்த யோசனை உடனடியாகப் பிடித்துப் போனதில் வியப்பில்லை. ஆனால் அது நடைமுறை சாத்தியமாக அப்போது இல்லை. ஜின்னாவே அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆனால் ‘இந்தியா சுதந்தரமடைந்தபிறகு, மாநில சட்டமன்றத்தில் இதனை ஒரு கோரிக்கையாக வைக்கலாம்’ என்று அவர் ஆலோசனை சொல்லிவிட்டுப் பாகிஸ்தானுக்குப் போய்விட்டார்.

சுதந்தர இந்தியாவில் அறுபதுகளின் பிற்பகுதியில்தான் முதல் முதலில் காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் ஆட்சிக்கான வாய்ப்புகள் வரத் தொடங்கின. 1967ல் இடதுசாரிகள் கேரளத்தில் ஆட்சியமைத்தபோது, அதில் அங்கம் வகித்த முஸ்லிம் லீக், இந்த ‘மோப்லாஸ்தான்’ கோரிக்கையைத் தூசு தட்டி மீண்டும் எடுத்தது. முஸ்லிம்களுக்குத் தனி மாவட்டம்.

ஆர்.எஸ்.எஸ். மிகக் கடுமையாகக் களத்தில் இறங்கிப் போராடிய சந்தர்ப்பம் இது.

https://telegram.me/aedahamlibrary

என்ன அபத்தம்? இந்தியாவுக்குள் ஒரு குட்டி பாகிஸ்தானை அமைக்கச் சொல்லிக் கேட்க வெக்கமாக இல்லை? எதற்காக மோப்லாஸ்தான்? இந்தியாவில் முஸ்லிம்களுக்கு என்ன குறை? தேசமெங்கும் வசிக்கும் முஸ்லிம்கள் அத்தனை பேரும் பிராந்தியவாரியாகத் தனி மாவட்டம் கேட்கத் தொடங்கினால் எவ்வளவு கேவலம்! முஸ்லிம்கள் அதிகமாக வசித்தால் உடனே அது முஸ்லிம் பிராந்தியமாகுமா? இந்தியாவைப் பிரிக்காதீர்கள். இந்தியராக உணர முடியாதவர்கள் ஓடிப்போய்விடுங்கள்.

ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் தேசம் முழுதும் உள்ள அனைத்து முக்கியப் பத்திரிகைகளிலும் இந்த விஷயத்தைப் பேசச் சொல்லி வற்புறுத்தினார்கள். ஹிந்துஸ்தான் டைம்ஸ், டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஃப்ரீ ப்ரஸ் ஜர்னல் உள்ளிட்ட அனைத்து நாளிதழ்களும் முஸ்லிம் லீகின் கோரிக்கையைக் கடுமையாகக் கண்டித்தன. கம்யூனிஸ்டுகளும் முஸ்லிம் அடிப்படை வாதிகளும் சேர்ந்து இந்திய ஒருமைப்பாட்டுக்கு வைக்கிற உலை என்று இது வருணிக்கப்பட்டது.

ஆயினும் கேரள அரசு, முஸ்லிம்களுக்கான மாவட்டத்தைப் பிரிப்பதில் உறுதியாக இருக்கவே, ஆர்.எஸ்.எஸ். சத்தியாகிரகத்தில் இறங்கியது. பாரதிய ஜன சங்கத்தின் உறுப்பினர்களுடன் இணைந்து கேரள மாநிலம் முழுதுமுள்ள ஹிந்துக்களிடையே இந்த விஷயத்தின் தீவிரத்தை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரசுக்கு எதிரான கிளர்ச்சிக்கு மிகத் தீவிரமாகத் தூண்டினார்கள்.

இத்தனையும் மீறி ஜூன் 6, 1969 அன்று புதிய மாவட்டத்தின் பிறப்பைக் கேரள இடதுசாரி அரசு அறிவித்தது.

அதுவரை ஐம்பது, நூறு என்ற எண்ணிக்கையில் தினசரி சத்தியாகிரகத்துக்கு வந்துகொண்டிருந்த சங்கத்தினர் ஆயிரக்கணக்கில் திரள ஆரம்பித்தார்கள். கேரள ஹிந்துக்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளத் தயாராவதை மத்திய அரசு கவனித்தது. வெகு நிச்சயமாக தேசமெங்கும் இது ஒரு தவறான முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளப்படுவதற்கான அபாயத்தைச் சுட்டிக்காட்டி ஊடகங்கள் அனைத்தும் கேரள அரசைக் கண்டித்தன.

எங்கும் ஊர்வலம். பேரணி. கறுப்புக்கொடிப் போராட்டங்கள். கடையடைப்புகள். சத்தியாகிரகம் செய்ய வந்த ஜன சங்கத்தைச் சேர்ந்தவர்களையும் ஆர்.எஸ்.எஸ்காரர்களையும் கேரள போலீஸ் கைது செய்து சிறையில் வைத்தது.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் சட்டென்று பல்வேறு பிராந்தியங்களிலிருந்து போராட்டக்காரர்கள் வந்து குவிய ஆரம்பித்தார்கள். ஆளில்லாத காரணத்தால் போராட்டம் தடைப்பட்டுவிடக்கூடாது என்று எங்கெங்கிருந்தோ கொண்டு குவித்துக்கொண்டே இருந்தார்கள்.

இந்தச் சம்பவம், கேரள ஹிந்துக்களிடையே ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு ஓர் அழுத்தமான அறிமுகத்தையும் நல்ல அபிப்பிராயத்தையும் பெற்றுத் தரக் காரணமானது. 'மோப்லாஸ்தான்' என்ற பெயர் இல்லையே தவிர, மலப்புரம் மாவட்டம் பிரிக்கப்பட்டதும் முஸ்லிம் பல்கலைக்கழகம் ஒன்று அங்கே தொடங்கப்பட்டதும் அதன்கீழ் ஆறு கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டதும் தொடர்ந்து அந்தப் பகுதியை அறிவிக்கப்படாத முஸ்லிம் பிராந்தியமாகவே அரசு பாவிக்கத் தொடங்கியதும் சரித்திரம்.

இந்தப் பிரிவினை உணர்வுதான் முஸ்லிம்களிடம் உள்ள தலையாய பிரச்னை என்கிறது ஆர்.எஸ்.எஸ்.

*

1970-71 காலக்கட்டங்களில் பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்துக்குச் சற்று முன்னதாகக் கிழக்கு வங்காளத்திலிருந்து லட்ச லட்சமாக அகதிகள் இந்தியாவுக்கு வந்தார்கள். மேற்கு வங்காளம், அஸ்ஸாம், மேகாலயா போன்ற மாநிலங்களில் இவர்கள் எல்லா இடங்களிலும் பரவி நிறையத் தொடங்கினார்கள். அகதிகள் பிரச்னை, ஒரு தேசியப் பிரச்னையாகப் பரிமாணமெடுத்த சமயம்.

உள்நாட்டு அரசியல் குழப்பங்களால் வாழ வழியற்று, வேறிடம் தேடி வந்த கிழக்கு பாகிஸ்தான் மக்களை இந்திய அரசு ஏற்றது. தங்க இடம் கொடுத்தது. வடகிழக்கு மாநிலங்களில் அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்திய மக்கள் அத்தனை பேரும் கிழக்கு வங்காளிகளைத் தம்மில் ஒருவராக பாவிக்கத் தொடங்கியிருந்த தருணம். அவர்களது விடுதலைக்கு இந்தியா உதவ ஆரம்பித்திருந்ததுதான் காரணம். அது பாகிஸ்தான் அரசுக்கு எதிரான நடவடிக்கை என்பது அடிப்படைக் காரணம்.

ஆனால் ஆர்.எஸ்.எஸ்., கிழக்கு வங்காளத்திலிருந்து அகதிகளாக வந்த ஹிந்துக்களை ஏற்றுக்கொள்ளலாம், முஸ்லிம்களை இந்தியாவில் தங்கவிடக்கூடாது என்று கொடி பிடித்தது. 'அவர்கள் அஸ்ஸாமை ஒரு

https://telegram.me/aedahamlibrary

முஸ்லிம் மாநிலமாக்கும் நோக்கத்துடன் வருகிறார்கள். உண்மையில் முஸ்லிம்கள் கிழக்கு வங்காளத்தில் - உள்நாட்டுப் பிரச்னை சமயத்திலும் - இருப்பதில் எந்த இருப்பியல் பிரச்னையும் இல்லை' என்றது ஆர்.எஸ்.எஸ்.

அதுவரை அஸ்ஸாமில் ஆர்.எஸ்.எஸ்ஸுக்குப் பெரிய தளம் ஏதுமில்லை. மிகச் சில இடங்களில் ஷாகாக்கள் திறக்கப்பட்டிருந்தது தவிர வேறு செயல்பாடுகளை அவர்கள் அங்கே வைத்துக்கொண்டிருக்கவில்லை.

ஆனால் கிழக்கு பாகிஸ்தான் முஸ்லிம்கள் வந்து குவியத் தொடங்கியதும் வரிந்துகட்டிக்கொண்டு அஸ்ஸாமில் வேலை பார்க்க ஆரம்பித்தது ஆர்.எஸ்.எஸ்.

அஸ்ஸாம் ஹிந்துக்களுடன் இணைந்து, முஸ்லிம்களை அங்கே நிரந்தரமாகத் தங்கவிடாதபடிக்கு நடவடிக்கைகளை முடுக்கிவிட ஆரம்பித்தது. உண்மையில், முஸ்லிம்கள் என்றில்லை, பொதுவாகவே அகதிகள் வரத்தால் திணறிக்கொண்டிருந்தது அஸ்ஸாம். கிட்டத்தட்ட ஒரு கோடிப்பேர் கிழக்கு பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் வந்துவிட்டிருந்தார்கள். அத்தனை பேருக்கும் தங்குமிடம், உணவு வசதிகளைச் செய்து தரும் பொறுப்பு அந்தந்த மாநில அரசாங்கங்களுக்கு இருந்தது. தார்மீக ரீதியில் அவர்களை அரவணைக்கவேண்டிய பொறுப்பை மத்திய அரசு ஏற்றிருந்ததே காரணம்.

இதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மாநில மக்களைப் பெருமளவு பாதித்தது. ஏற்கெனவே அதிருப்தியில் இருந்த வடகிழக்கு மாநில மக்கள், இந்த அகதிப் பிரச்னைக்கு இந்திய அரசுதான் காரணம் என்று குற்றம் சாட்டி அரசு விரோத நடவடிக்கைகளில் இறங்க ஆரம்பித்ததும், போராளி இயக்கங்கள் இதன் தொடர்ச்சியாகவே அங்கு தோன்றத் தொடங்கியதும் சரித்திரம்.

அஸ்ஸாமைப் பொருத்தவரை அங்கே அகதிகளாக வந்த முஸ்லிம்கள் மீது உள்ளூர் ஹிந்துக்கள் நிகழ்த்திய தாக்குதல் சம்பவங்கள் பல. இச்சம்பவங்களின் பின்னணியில் ஆர்.எஸ்.எஸ். இருந்திருக்க முடியாது என்று நம்புவதற்கு எந்த நியாயமும் இல்லை.

சுதந்தர இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் பல்வேறு காலக்கட்டங்களில் நடந்துள்ள ஹிந்து-முஸ்லிம் கலவரங்களின் பின்னணியில், ஆர்.எஸ்.எஸ். ஹிந்துக்கள் தரப்பில் அதை முன்னெடுத்ததாகத் தொடர்ந்து குற்றச்சாட்டுகள் எழுந்துவந்துள்ளன. ஆனால் எந்தக் கலவரத்தையும் தான் தொடங்கியதில்லை என்று

https://telegram.me/aedahamlibrary

ஆர்.எஸ்.எஸ். சொல்லி வந்திருக்கிறது.

ஹிந்து இயக்கமாகவே அறியப்பட்டாலும் சிவசேனா முன்னின்று நடத்திய மும்பைக் கலவரங்கள் தவிர, (ஆர்.எஸ்.எஸ். முற்றிலும் நிராகரிக்கக்கூடிய இயக்கம் அது என்பதால். 'நாங்கள் தேசபக்தர்கள். அவர்கள் ரவுடிகள்' என்று இந்நூலுக்காகப் பேசிய ஆர்.எஸ்.எஸ்.காரர்களுள் ஒருவர் குறிப்பிட்டார்.) மற்றவற்றில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆர்.எஸ்.எஸ். பங்குபற்றி வந்தே இருக்கிறது.

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை என்பதை, முஸ்லிம்கள் பணிந்து போகிற செயல்பாடாக மட்டுமே ஆர்.எஸ்.எஸ். மனத்தளவில் ஏற்கக்கூடிய இயக்கமாக இருக்கிறது. இந்த ஆதிக்க மனோபாவம் அதன் தேசியப் பார்வையின் ஒரு பகுதி என்று அவர்கள் கருதலாம். தேசியப் பிரச்னையின் ஒரு பகுதி என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கிறது.

இந்தப் பின்னணியில் அயோத்திப் பிரச்னையில் ஆர்.எஸ்.எஸ்ஸின் பங்களிப்பை நாம் அணுகினால், அவர்களைப் புரிந்துகொள்வது மேலும் எளிதாக இருக்கும்.

https://telegram.me/aedahamlibrary

# 12. அயோத்தி

1992ம் ஆண்டு டிசம்பர் 6ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை அயோத்தியில் பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கியது ஆர்.எஸ்.எஸ்ஸும் அதன் தோழமைப் பரிவாரங்களும். கரசேவகர்கள் என்னும் பொதுப்பெயரில், காரியத்தைச் செய்தது ராமபக்தர்களாகிய பொதுமக்களே என்று நிறுவ மேற்கொள்ளப்பட்ட முயற்சியெல்லாம் முக்கியமே இல்லை. நினைத்தது, ஆர்.எஸ்.எஸ். வழி நடத்தியது, உத்திரபிரதேசத்தை ஆண்ட பாரதிய ஜனதா அரசு. செய்து முடித்தது பரிவாரங்கள். தீர்ந்தது விஷயம்.

இதன் நியாய அநியாயங்கள், வாத விவாதங்களில் ஆரம்பித்து அக்டோபர் 1, 2010 அன்று வெளியான அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு வரை பதினெட்டு ஆண்டுக் காலம் குறையாத பதற்றத்தை இந்தியாவுக்குக் கொடையாக அளித்தது ஆர்.எஸ்.எஸ்.

ஆர்.எஸ்.எஸ் தோற்றுவித்த அதன் மதம் சார்ந்த பிரச்னைகளுக்கான கிளை அமைப்பான விஸ்வ ஹிந்து பரிஷத்தும், விஸ்வ ஹிந்து பரிஷத் தனது அறிவிக்காத ராணுவமாக உருவாக்கி வளர்த்த பஜ்ரங் தளமும் இந்த விஷயத்தில் தாம் நினைத்ததைச் சாதித்தன. இடிக்கப்பட்டது மசூதியல்ல, கும்மட்டம்தான் என்று சாதிப்பவர்களால், இடித்தது தவறுதான் என்று இன்றளவும் ஒப்புக்கொள்ள முடிவதில்லை. விரும்பவில்லை என்பது இன்னும் பொருந்தும்.

மசூதி இடிப்பு செயல்திட்டத்தில் இல்லவேயில்லை என்று பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ‘ஒரு குழு ஆவேசத்தில் எதிர்பாராவிதமாக நடந்துவிட்டது’ என்றார்கள்.

பதினெட்டு வருடங்கள் கழித்து, சங் பரிவார் அமைப்புகளே எதிர்பார்த்திருக்க முடியாதபடிக்கு, ‘ராமர் அங்குதான் பிறந்தார்’ என்று அலகாபாத் உயர்நீதிமன்றமே சொல்லிவிட்டது. மசூதியின் மையப்பகுதி - ராமர் சிலை வைக்கப்பட்டிருந்த பகுதி, ஹிந்துக்களுக்கே சொந்தம் என்று அறிவித்துவிட்டது. ஒரு கடவுளுக்குச் சாதகமான இப்படியொரு தீர்ப்பு உலக வரலாற்றில் வேறெங்கும் வழங்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

https://telegram.me/aedahamlibrary

எதிர்பாராத இதெல்லாமே சாத்தியம். ஆனால் ‘இடித்ததற்கு வருத்தம்’ என்கிற ஒருவரி அவர்களுக்கு சாத்தியமில்லை. மேல் முறையீட்டுக்குச் சென்றாலும், இந்தத் தீர்ப்பின் வருத்தம் இந்திய முஸ்லிம்களுக்கு ஆறப்போவதில்லை என்பது வெளிப்படை. பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகும் தான் செய்தது சரியே என்று நினைக்கிற ஆர்.எஸ்.எஸ் பரிவாரங்கள், இந்த ஒரு விஷயத்துக்காகவே (அவர்களுடைய தேசபக்தியைக்கூட மறந்து) கலவரமூட்டும் இயக்கங்களாகத் தோற்றமளிக்கின்றன.

மதத்தை முன்வைத்த ஆர்.எஸ்.எஸ்ஸின் தேசியவாதம், தேசத்தின் அமைதி குலைந்தாலும் மதம் முக்கியம் என்று கருதுகிற எல்லைக்குப் போய்விட்டது. இவ்வகையில், ‘முஸ்லிம்களுக்கு தேசத்தைவிட அவர்களுடைய மதம்தான் முக்கியம்’ என்கிற ஆர்.எஸ்.எஸ்ஸின் பிரதானக் குற்றச்சாட்டுக்கு அர்த்தமில்லாது போய்விடுகிறது.

அதையே ஆர்.எஸ்.எஸ்ஸை நோக்கியும் சொல்ல முடியுமல்லவா? ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு மதம்தான் முக்கியம்; தேச ஒருமைப்பாடல்ல, தேச அமைதியல்ல. கலவரமற்ற சூழல் அல்ல.

எண்ணிப்பார்த்தால் வியப்பாக இருக்கும். ஒரு சம்பவம். நியாயமாக அயோத்தி அளவுக்கு - அதைவிடச் சற்று அதிகமாகவே தேசத்தின் கவனத்தை ஈர்த்திருக்க வேண்டிய சம்பவம். ஆர்.எஸ்.எஸ். சம்பந்தப்பட்டதுதான். இதே போன்ற ஓர் இரு மதப் பிரச்னைதான். இதே போன்ற இடப்பிரச்னையும், கட்டுமானப் பிரச்னையும்கூட.

ஆனால் எந்தத் தரப்புக்கும் சேதாரமில்லாமல் எத்தனை புத்திசாலித்தனமாக ஓர் ஆர்.எஸ்.எஸ். தலைவர் அதனைத் தீர்த்தார் என்று தெரிந்தால் வியக்காதிருக்க முடியாது. அதே சமயம், அப்படியொரு செயலைச் சாதித்த ஆர்.எஸ்.எஸ். தனது பரிமாண வளர்ச்சியில் எப்படி இப்படியொரு இடத்துக்கு இறங்கிவந்தது என்று யோசிக்காதிருக்கவும் முடியாது.

அது தமிழகத்தில் நடந்ததுதான். கன்னியாகுமரியில்.

*

1963 ஜனவரி முதல் 1964 ஜனவரி வரை இந்திய அரசு, விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட முடிவு செய்தது. விவேகானந்தர் ஓர் ஹிந்துத் துறவி மட்டுமல்ல. ஒரு தேசிய

https://telegram.me/aedahamlibrary

அடையாளம். கொண்டாட்டம் அவசியமானது. மேற்கு வங்காளம் முதல் கன்னியாகுமரி வரை அவரைத் தெரியாதவர்கள் கிடையாது. ஆராதிக்காதவர்கள் கிடையாது. அவரால் உந்தப்படாதவர்களோ, உத்வேகம் அடையாதவர்களோ கிடையாது.

குமரி மாவட்ட மக்களுக்கு இந்தக் கொண்டாட்ட அறிவிப்பு சற்றே கூடுதல் மகிழ்ச்சியை அளித்தது. காரணம், விவேகானந்தர் கன்னியாகுமரிக்கு வந்திருக்கிறார். கடலுக்குள் சற்றுத் தொலைவில் உள்ள ஒரு பெரும் பாறைக்கு நீந்திச் சென்று, மூன்று தினங்கள் (டிசம்பர் 25,26,27) அமர்ந்து தியானம் செய்திருக்கிறார்.

இந்த நூற்றாண்டு விழாச் சமயத்தில் அந்தப் பாறையில் அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பினால் என்ன? பாறைக்குச் சென்றுவர ஒரு பாலமும் சேர்த்துப் போட முடிந்தால் நல்லது.

அந்தப் பாறைக்கு விவேகானந்தருக்கு முன்னால் சென்று தவமிருந்தது, தேவி கன்னியாகுமரி. இறைவி. சிவபெருமானை மணப்பதன்பொருட்டு அங்கே அவள் தவமிருந்ததாக ஐதீகம். பாறையில் பதிந்துள்ள பாதம் அவளுடையதுதான் என்பது ஹிந்துக்களின் நம்பிக்கை. ஸ்ரீபாதப் பாறை என்று அந்த இடத்தைக் குறிப்பிடுவார்கள்.

இது ஒரு புறமிருக்க, பாறையில் விவேகானந்தருக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்கலாம் என்று தீர்மானித்ததும் அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டது. வேலாயுதம் பிள்ளை என்பவர் தலைமையில் அமைந்த அந்தக் குழுவில் சில ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்களும் இருந்தார்கள். விஷயத்தையும் திட்டத்தையும் ராமகிருஷ்ண மடத்துக்குத் தெரிவித்தார்கள். ராமகிருஷ்ண மடத்தில் இருந்து விலகி, ராமகிருஷ்ண தபோவனம் என்ற இன்னொரு அமைப்பைத் தொடங்கி நடத்திக்கொண்டிருந்த சுவாமி சித்பவானந்தருக்கும் விஷயம் சொன்னார்கள்.

விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் அமைப்பதில் யாருக்குக் கருத்து வேறுபாடு இருக்க முடியும்? எனவே எந்தத் தடையுமின்றிப் பரபரவென்று ஆலோசனைகள் நடைபெறத் தொடங்கின. விஷயம் வேகமாக வெளியே பரவ ஆரம்பித்தது.

சிக்கல், கன்னியாகுமரி கிறிஸ்தவர்கள் வடிவில் வந்தது. பாறையில் விவேகானந்தருக்கு நினைவுச்சின்னம் அமைப்பதை ஏற்க முடியாது. நாநூறு வருடங்களுக்கு முன்னால் புனித சேவியர் இங்கு வந்தபோது அவர் அமர்ந்து ஜபம் செய்த பாறை அது. கிறிஸ்தவர்களுக்குச்

https://telegram.me/aedahamlibrary

சொந்தமானது.

குரலெழுப்பியவர்கள், குமரி மீனவர்கள். பாறையின் நீள அகலம் என்ன என்றுகூட மக்கள் யாருக்கும் தெரியாத நிலையில், தினமும் மீன்பிடிக்கச் செல்லும் அவர்கள்தாம் பாறையில் இறங்கி இளைப்பாறுகிறவர்கள். அவர்களை இந்த விஷயத்தில் தூண்டி விட்டவர் உள்ளூரில் இருந்த ஒரு பாதிரியார். கத்தோலிக்கர். விடாதீர்கள். அந்தப் பாறை கிறிஸ்தவர்களுக்கே சொந்தம். நாம் அதை நிறுவியாகவேண்டும்.

மீனவர்கள் ஒரு காரியம் செய்தார்கள். யாருமறியாத ஓர் இரவில் பாறையின்மீது பெரிதாக ஒரு சிலுவையைக் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்தார்கள். கரையில் இருந்து பார்த்தாலே தெரியக்கூடிய அளவுக்குப் பெரிய சிலுவை.

சூடு ஏறத் தொடங்கிய தருணம் அது. கன்னியாகுமரி மக்கள், பாறையில் சிலுவையைக் கண்டதும் கொதித்துப் போய் அரசுக்குக் கடிதங்கள் எழுத ஆரம்பித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு அளிக்கப்பட்டது. மூலைக்கொரு கண்டனக் கூட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள் என்று ஆரம்பிக்கப்பட்டன. 'ஸ்ரீபாதப்பாறை' என்று அழைக்கப்பட்ட இடம். கிறிஸ்தவர்கள் எப்படி அங்கே சிலுவை நடலாம்?

மக்கள் ஒருபுறம் போராடிக்கொண்டிருக்க, தேவி கன்னியாகுமரி ஆலய நிர்வாகம், தன் பங்குக்குப் பாறை தனக்குத்தான் சொந்தம் என்று இன்னொரு தாக்குதலைத் தொடுத்தது.

எனவே விவேகானந்தர் நினைவுச் சின்னம் அமைக்க விரும்பிய குழு, கோயில் நிர்வாகத்துக்கு ஒரு கடிதம் எழுதியது. பாறையில் ஒரு நினைவுச்சின்னம் எழுப்பவும் போய்வர ஒரு பாலம் கட்டவும் அனுமதி வேண்டும்.

கோயில் நிர்வாகத்துக்குக் கிறிஸ்தவர்களைப் பற்றித்தான் கவலை. விவேகானந்தரைப் பற்றி அல்ல. எனவே அவர்கள் குழுவுக்கு அனுமதி கொடுத்தார்கள். நினைவுச் சின்னமும் பாலமும் கட்டலாம். ஆனால் எல்லாம் முடிந்ததும் அனைத்தையும் கோயிலின் பொறுப்பில் கொடுத்துவிட்டு ஒதுங்கிவிட வேண்டும்.

இதனிடையில் பாறையின் உரிமை குறித்த கோஷங்கள் மிகவே, அரசு இதில் தலையிட முடிவு செய்தது. பாறை யாருக்குச் சொந்தம்? விசாரணையில், நிச்சயமாக கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமில்லை என்று தெரிந்தது. எனவே பாறையில் அத்துமீறி நிறுவியிருந்த சிலுவையை

https://telegram.me/aedahamlibrary

அகற்றும்படி வருவாய்த் துறைக்கு உத்தரவு போனது.

இப்போது சிக்கல் பெரிதாகத் தொடங்கியது. ஏற்கெனவே நாநூறு வருடங்களுக்கு முன்னர் அங்கு சிலுவை இருந்தது. காலப்போக்கில் யாரோ அதை அழித்துவிட்டார்கள். இப்போது நடப்பட்ட சிலுவையைப் பாதுகாக்கவேண்டியது தமிழக அரசின் கடமை என்று கேரளத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ அமைப்புகளும் செய்தி ஊடகங்களும் பேச ஆரம்பித்தார்கள். வெறுமனே சிலுவை அமைத்தால் போதாது. புனித சேவியருக்கு அங்கொரு நினைவுச் சின்னமும் எழுப்பியாக வேண்டும்.

தமிழக அரசு யோசித்தது. அதைவிட, முதல்வர் பக்தவத்சலம் யோசித்தார் என்று சொல்லலாம். எதற்குப் பிரச்னை? விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் என்று ஆரம்பித்ததால்தானே இத்தனை விவகாரங்கள்? வெகு நிச்சயமாக ஒரு மதக்கலவரத்துக்கு தூபம் போடுவதுபோல் இது அமைந்துவிடும்.

எனவே சிலுவையும் வேண்டாம், விவேகானந்தரும் வேண்டாம், பாறையை அப்படியே விடுங்கள் என்று பக்தவத்சலம் சொல்லிவிட்டார்.

ஆனால் தனிப்பட்ட முறையில் அவர் அந்தப் பாறையில் விவேகானந்தர் தவமிருந்ததை ஒப்புக்கொள்ளக்கூடியவராக இருந்தார். நிச்சயமாக அது சேவியர் பாறையல்ல. விவேகானந்தர் பாறைதான். வேண்டுமானால் ஒரு பலகை வைக்கலாம். இங்கே விவேகானந்தர் வந்தார். தவமிருந்தார். அவ்வளவுதான். வேறொன்றும் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

*

எனவே விவேகானந்தர் நினைவுச்சின்னக் குழுவில் இருந்த ஆர்.எஸ்.எஸ்காரர்கள் விஷயத்தைத் தம் தலைவருக்கு எடுத்துச் சென்றார்கள். எப்படியாவது பாறையில் விவேகானந்தருக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைத்தாக வேண்டும். கிறிஸ்தவர்கள் பிரச்னை செய்கிறார்கள். கோயில் நிர்வாகம் குறுக்கே நிற்கிறது. முதலமைச்சரும் ஒத்துழைப்பதாயில்லை. அனைத்தையும் மீறி நினைவுச் சின்னம் எழுப்பப்படவேண்டும். ஒரு வழி சொல்லுங்கள்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் அப்போதைய தலைவர் கோல்வால்கர், ஏக்நாத் ரானடே என்பவரை அனுப்ப முடிவு செய்தார். ரானடே, அப்போது ஆர்.எஸ்.எஸ்ஸின் அகில இந்தியப் பொதுச்செயலாளர். தமிழகத்தைப் பற்றியோ, தமிழ்நாட்டின் அரசியல் சூழ்நிலை குறித்தோ, கன்னியாகுமரி

https://telegram.me/aedahamlibrary

மாவட்டத்தின் மதச்சிடுக்குகள் குறித்தோ அவருக்கு ஒன்றும் தெரியாது. அவர் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்.

விவேகானந்தருக்காகக் கன்னியாகுமரியில் ரானடே ஒரு கரசேவையைத் தொடங்க உத்தேசிப்பாரா? அல்லது வேறு ஏதேனும் திட்டம் வைத்திருப்பாரா?

குமரி மக்கள் காத்திருந்தார்கள். ஆர்.எஸ்.எஸ்காரர்கள் அதைவிட ஆர்வமுடன் காத்திருந்தார்கள்.

ரானடே யாருடனும் விவாதிக்கவில்லை. அமைதியாக அமர்ந்து பாறை குறித்த அனைத்து வழக்கு விவகாரங்களையும் அது தொடர்பான அறிக்கைகளையும் அனைத்துத் தரப்பு வாதங்களையும் விரிவாகப் படித்தார். அன்றைய சூழ்நிலையில் பாறையில் விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் கூடாது என்று தீவிரமாகச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் இரண்டு பேர். ஒருவர் தமிழக முதல்வர் பக்தவத்சலம். இன்னொருவர் ஹுமாயூன் கபீர். அன்றைய கலாசாரத்துறை மத்திய அமைச்சர்.

சரியான எதிர்ப்பாளர்கள்தாம். மாநில முதல்வரும் மாற்று மதத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ஒருவரும். சரி, பரவாயில்லை. பார்த்துவிடலாம் என்று ரானடே முதலில் கல்கத்தாவுக்குப் போனார். அது ஹுமாயூன் கபீரின் தொகுதி. கல்கத்தாவில் இருந்து வெளிவரும் அனைத்துப் பத்திரிகை ஆசிரியர்களையும் அவர் சந்தித்தார்.

பிரச்னை இதுதான். வங்கத்தின் தங்கமான விவேகானந்தருக்குக் குமரி முனையில் ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதை உங்கள் வங்காளத்து எம்.பியும் மத்திய அமைச்சருமான ஒருவர் எதிர்க்கிறார். எனவே இது குமரி மக்களின் பிரச்னையல்ல. உங்களுடைய பிரச்னை.

அந்த புத்திசாலித்தனம் வேலை செய்தது. மேற்கு வங்கப் பத்திரிகைகள் அனைத்தும் ஹுமாயூன் கபீரை விமரிசித்து எழுதின. அமைச்சர் பயந்துவிட்டார். நினைவுச் சின்னம் அமைத்தால் சுற்றுச்சூழல் கெடும் என்ற அர்த்தத்தில்தான் நான் சொன்னேன், அதற்குப் பிரச்னையில்லை என்றால் எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை என்று சொல்லிவிட்டார்.

அடுத்தவர் பக்தவத்சலம். முதல்வர். மாநிலத்தின் அமைதி அவருக்கு முக்கியம். ஒரு மதக்கலவரத்தைத் தவிர்க்கும் நல்ல நோக்கம்தான். ஆனால் விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் அவசியம். தவிரவும்

https://telegram.me/aedahamlibrary

அதைச் செய்யாமல் விடுத்தால் பாறையைக் கிறிஸ்தவர்கள் அபகரித்துவிடுவார்கள்.

ரானடே, லால் பகதூர் சாஸ்திரியிடம் பேசினார். சாஸ்திரியை உதவச் சொல்லிக் கேட்டார். நீங்கள் நேருவிடம் சொல்லி, பக்தவத்சலத்தைச் சம்மதிக்கச் செய்ய வேண்டும்.

மறுபுறம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் தேடித்தேடி விவேகானந்தர் நினைவுச் சின்னம் அமைக்க அவர்களது சம்மதத்தைப் பெறும் விதமாக ஒரு கையெழுத்து இயக்கத்தையும் தனி மனிதராக நடத்தினார். அத்தனை பேரும் ஆதரிப்பதை பக்தவத்சலம் ஒருத்தர் எதிர்த்துவிடுவாரா? பார்த்துவிடலாம்.

அதோடு அவர் நிறுத்தவில்லை. கன்னியாகுமரி முக்கியஸ்தர்களும் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்களும் மட்டும் இருந்த நினைவுச் சின்ன கமிட்டியை விஸ்தரிக்க முடிவு செய்தார். தி.மு.க. தலைவர் அண்ணாதுரையைச் சந்தித்தார். அவரை கமிட்டிக்குள் இழுத்தார். காங்கிரஸ்காரர்களுடன் பேசினார். அவர்களையும் அழைத்தார். கம்யூனிஸ்டுகளை நாடினார். உச்சக்கட்டம், ஜோதிபாசுவிடம் போய் நினைவுச் சின்னம் அமைக்க நன்கொடை கேட்டது.

‘நான் எப்படி விவேகானந்தருக்கு நினைவாலயம் அமைக்க நன்கொடை தருவேன்? என் கட்சிக்கொள்கை இடம் தராது’ என்று அவர் சொன்னபோது, உங்கள் மனைவி கம்யூனிஸ்ட் கட்சியில்இல்லையே, அவரை இழுத்துவிடுங்கள் என்று கொக்கிபோட்டு இழுத்தார். பணக்கார பிர்லாக்களைப் பேசிப்பேசி  மசியவைத்தார். கிறிஸ்தவர்கள் மிகுந்த நாகாலாந்து மாநிலத்துக்குப் போய், முதலமைச்சரிடம் பேசி மக்களிடம் பணம் வசூலிக்க ஒப்புக்கொள்ள வைத்தார்.

ஒரு விஷயம். நாகாலாந்து மக்களுக்கு விவேகானந்தரைப் பற்றி அப்போது ஒன்றுமே தெரியாது. பெயர்கூடக் கேள்விப்பட்டதில்லை. ‘வெறும் ஆயிரம் ரூபாய் வசூலானால் போதும். எண்ணிக்கையல்ல, அவர்களது பங்களிப்புதான் முக்கியம்’ என்றார்  ரானடே.

விவேகானந்தர் என்னும் சன்னியாசியை, ஹிந்து மதத் துறவியாக அல்லாமல், இந்தியாவின் அடையாளங்களுள் ஒன்றாகக் காட்டுவதற்காக மேற்கொண்ட முயற்சி அது. பல்வேறு கட்சிகள், பல்வேறு கொள்கைகள், பல்வேறு கோஷங்கள், பல்வேறு கருத்தியல் நிலைபாடுகள்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் ஏக்நாத் ரானடே என்னும் ஆர்.எஸ்.எஸ்.காரரால், தனி மனிதராக அத்தனைத் தரப்பையும் சமாளித்து, கன்னியாகுமரி கிறிஸ்தவர்களின் அதிருப்தியையும் சரி செய்து, எந்தப் பிரச்னையும் இல்லாமல் - திட்டமிட்டதைவிடப் பெரிய அளவில் குமரிக் கடலில் விவேகானந்தருக்கு மாபெரும் நினைவாலயம் எழுப்ப முடிந்தது.

*

பாறையின் இடத்தில் மசூதி. கிறிஸ்தவர்களின் இடத்தில் முஸ்லிம்கள். ரானடேவின் இடத்தில் அத்வானியும் வாஜ்பாயும் பரிவாரக் கூட்டங்களும்.

சந்தேகமில்லை. அயோத்தி, ஆர்.எஸ்.எஸ்ஸைப் பொறுத்தவரை ஒரு பரிமாண வீழ்ச்சி.

https://telegram.me/aedahamlibrary

# 13. நெருடாத உறவு

ஆர்.எஸ்.எஸ்ஸால் ஒரு சிற்பியின் கவனத்துடன் செதுக்கிச் செதுக்கி வடிவமைக்கப்பட்ட அரசியல் கட்சி பாரதிய ஜனதா. மிகச் சமீப காலங்களில் அந்தக் கட்சியில் இணைந்தவர்கள் தவிர பெரும்பாலான அதன் உறுப்பினர்கள் ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்களில் தயாரானவர்களே. ஆர்.எஸ்.எஸ்ஸின் ஹிந்து தேசியக் கனவுக்கு ஜனநாயக அரசியல் பாதையில் நடைமுறை வடிவம் கொடுப்பதைத் தவிர பா.ஜ.கவுக்கு வேறு பெரிய நீண்டநாள் செயல் திட்டம் இருந்துவிட முடியாது.

எண்பதுகளின் தொடக்கத்தில் உருவான பாரதிய ஜனதாவுக்கு, 1992ம் ஆண்டு நடைபெற்ற அயோத்திச் சம்பவத்தின் தொடர்ச்சியாக 1996ல் முதல் முதலாக தேசத்தை ஆள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அப்படியொரு தருணத்துக்காகத்தான் அவர்கள் துடித்துக்கொண்டிருந்தார்கள். அயோத்தியில் ராமர் கோயில் எழுப்பியே தீருவோம் என்கிற கோஷம் கொடுத்த பரிசு என்று அதைச் சொல்லலாம். பெருவாரி வட இந்திய ஹிந்துக்களை அந்த ஒரு காரணம் பற்றியே அவர்களால் நெருங்கிவிட முடிந்தது. திரும்பத் திரும்ப ராமரை முன்வைத்த அரசியல், மத உணர்வை ஒரு விழிப்புணர்வாக மறு அறிமுகப்படுத்திய சாமர்த்தியம், தீவிரவாத முஸ்லிம்களின் நாசகாரச் செயல்பாடுகளுக்கு, ஒட்டுமொத்த முஸ்லிம்களைப் பொறுப்பாளர்களாக்கும்விதமான சொற்பொழிவுகள் அனைத்தும், அனைத்தும், ஆர்.எஸ்.எஸ். பள்ளி பாரதிய ஜனதாவுக்கு அளித்த பயிற்சியின் துல்லியமான வெளிப்பாடுகளே.

இடைவிடாத போராட்டங்கள், முயற்சிகளுக்கு ஒரு பலனாகக் கிடைத்ததுதான் அந்த வாய்ப்பு. ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம். ஆனால், துரதிருஷ்டவசமாகப் பதிமூன்று தினங்களுக்குமேல் அவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. நாடாளுமன்றத்தில் தனிப்பெரும் கட்சியாக அடையாளம் காணப்பட்டாலும் ஆட்சியமைக்கத் தேவையான எண்ணிக்கையில் பாரதிய ஜனதாவுக்கு எம்.பிக்கள் இல்லை. இந்திய மக்களின் பொதுவான அதிருப்தி வெளிப்பட்ட தேர்தல் அது. எந்தக் கட்சிக்கும் பெரிய மெஜாரிடி தராத அவர்களுடைய தீர்ப்பில் தொக்கியிருந்த விமரிசனத்தை யாரும் புரிந்துகொள்ளவில்லை.

https://telegram.me/aedahamlibrary

உள்ளதிலேயே பெரிய கட்சி என்று பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. பலம் போதிய அளவு இல்லாததால் வாஜ்பாய் அமைச்சரவை வெளியேற வேண்டியிருந்தது.

வெளியேறத்தான் போகிறோம் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆனாலும் இருவாரங்களுக்காக ஓர் ஆட்சி அமைக்க ஒப்புக்கொண்டதிலும் பிறகு பதவி விலகியதிலும் பாரதிய ஜனதா சொல்ல விரும்பிய செய்தி என்ன? நாங்கள் மேலே வந்துவிட்டோம். இன்னும் சில படிகள்தான்.

இடைப்பட்ட நாள்களில் இரண்டு அரசுகள் கவிழ்ந்து, 1998ல் மீண்டும் ஆட்சியமைத்தது பாரதிய ஜனதா. மீண்டும் கூட்டணி. எனவே மீண்டும் குழப்பங்கள். இம்முறை ஆட்சியைக் கவிழ்த்த பெருமையை ஜெயலலிதா தட்டிச் சென்றார். பதிமூன்று மாதங்கள் நீடித்த வாஜ்பாயின் அரசுக்குத் தாம் அளித்து வந்த ஆதரவை அவர் விலக்கிக்கொண்டார்.

இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். போன்ற ஓர் இயக்கத்தை நடத்துவது சுலபம். அரசியல் நடத்துவது அத்தனை எளிதல்ல என்பதை ஆர்.எஸ்.எஸ்ஸும் பாரதிய ஜனதாவும் புரிந்துகொள்ளக் கிடைத்த சந்தர்ப்பங்கள்.

அந்தக் குறுகிய காலத்தில் பாரதிய ஜனதா அரசு இரண்டு விஷயங்களைச் சாதித்தது. இந்திய சரித்திரத்தில் மிக முக்கியமான தருணங்கள். போக்ரன் அணுகுண்டுச் சோதனை (மே 1998) ஒன்று. கார்கில் யுத்தத்தின் (1999) வெற்றி இன்னொன்று.

இரண்டுமே தேசத்தின் பலத்தை உலகறியச் செய்யும் விஷயங்கள் என்ற வகையில் பெருவாரி இந்திய மக்களின் வரவேற்பைப் பெற்ற தருணங்களாயின. குறிப்பாக, கார்கில் யுத்த சமயத்தை, இந்திய மக்களின் தேசிய உணர்வைத் தட்டியெழுப்பக் கிடைத்த வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டதில் பா.ஜ.கவும் ஆர்.எஸ்.எஸ்ஸும் சர்வ நிச்சயமாக வெற்றியடைந்தன. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள மக்கள் அனைவரின் கவனத்தையும் ஈடுபாட்டையும் பிரார்த்தனைகளையும் உதவிகளையும் கார்கில் வீரர்களுக்குக் கொண்டு சேர்ப்பதைத் தனது அரசிய சகாவான பா.ஜ.கவுக்காக முழு மனத்துடன் செய்தது ஆர்.எஸ்.எஸ்.

பாகிஸ்தான், பொது எதிரி. அது ஒரு முஸ்லிம் தேசம், அதனால் எதிரி என்று இந்தியர்கள் கருதுவதில்லை. தொடக்கம் முதலே இந்தியாவுக்கு அச்சுறுத்தலும் பிரச்னைகளும் தலைவலியும் தருகிற ஒரு ரவுடி அண்டை

https://telegram.me/aedahamlibrary

தேசம். அவ்வளவுதான். ஒவ்வொரு யுத்தத்தின்போதும் இந்தியர்கள் அரசுக்கு அளித்துவந்த பரிபூரண ஆதரவைத்தான் கார்கில் யுத்தத்தின்போதும் வழங்கினார்கள்.

இந்தியர்களின் இந்தப் புரிதலை ஹிந்துக்களின்  எழுச்சி அடையாளமாக சங் பரிவார் இயக்கங்கள் தேசமெங்கும் பிரசாரம் செய்தன. இது மூன்றாவது முறை வாஜ்பாய் பிரதமராகப் பதவியேற்க வழி செய்தது. ஒரு தேசிய ஹீரோவாக முன்னிறுத்தப்பட்ட வாஜ்பாய்க்கு இம்முறை பதவியில் நீடிப்பதில் அத்தனை பெரிய பிரச்னை இருக்காது. பா.ஜ.க. கூட்டணிக்கு 304 இடங்கள். பெரிய மெஜாரிடிதான்.

*

ஐந்து முழு வருடங்கள், பதிமூன்று மாதங்கள், பதிமூன்று தினங்கள்.தன் வாய்ப்பில் மொத்தம் இரண்டாயிரத்தி இருநூற்று முப்பத்தி மூன்று தினங்கள் பாரதிய ஜனதா கட்சி இந்தியாவை ஆண்டிருக்கிறது.

இந்தக் காலங்களில் பாஜகவின் தலைவர்கள் ஒருபோதும் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு விரோதமாக ஒரு சொல்லும் பேசியதில்லை. அரசியல் ரீதியில் அவர்கள் எடுத்த பல முடிவுகள் ஆர்.எஸ்.எஸ்ஸின் கொள்கைகளுக்கு விரோதமாகி, அதன் கண்டனம் அரசுக்கு வந்திருக்கிறது. பாரதிய ஜனதாவைக் கடுமையாகக் கண்டித்து ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர்கள் தொடர்ந்து பேசுவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. அவற்றை ஒரு தாயின் கண்டிப்பாக மட்டுமே பாஜகவின் தலைவர்கள் கருதியிருக்கிறார்கள். இந்திய ஜனநாயகத்தின் நெளிவு சுளிவுகளைத் தெரிந்துகொள்வதில் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு எப்போதும் விருப்பம் இருந்ததில்லை. ஒரு முரட்டுத்தனத்துடன் தான் முன்வைக்கும் ஹிந்து தேசியத்தைக் கட்டியெழுப்புவதில் பாரதிய ஜனதா தடுமாறும்போதெல்லாம் அது வீறுகொண்டிருக்கிறது. காலத்தை அனுசரிக்க விரும்பாத தாத்தாவை, அவரது சகல பலவீனங்களுடனும் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு சமர்த்துப் பேரனைப் போலவே பாரதிய ஜனதா இயங்கி வந்திருக்கிறது.

வருடம் இரண்டாயிரம். மாதம் அக்டோபர். தேதி ஏழு. அன்றைக்கு விஜயதசமி. நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ்ஸின் எழுபத்தி ஐந்தாவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டுக்கொண்டிருந்தது. ஆர்.எஸ்.எஸ்ஸின் ஐந்தாவது தலைவராக அப்போது செயல்பட்டுக்கொண்டிருந்த சுதர்சன் பேசுகிறார்.

https://telegram.me/aedahamlibrary

இந்திய கிறிஸ்தவர்களும் இந்திய முஸ்லிம்களும் சுதேசி மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவேண்டும். சுதேசி சர்ச்சுகளை உருவாக்கவேண்டும். இந்தியத்தன்மை அதில் இருக்கவேண்டும். முஸ்லிம்கள் இஸ்லாத்தை இந்தியமயப்படுத்தவேண்டும். இரு சமூகத்து மக்களும் தேசிய நீரோட்டத்தில் இணையவேண்டும்.

ஒருவார இடைவெளியில் ஆக்ராவில் திரும்பவும் ஒரு ஆர்.எஸ்.எஸ் மாநாடு நடக்கிறது. அங்கே திரும்பவும் சுதர்சன் பேசுகிறார்.(அக்டோபர் 15)

‘இந்திய முஸ்லிம்களின் நரம்புகளுக்குள் ஓடும் ரத்தத்தில் ராமரும் கிருஷ்ணரும் கலந்திருக்கிறார்கள். ஏன் இன்னும் அந்நியப் படையெடுப்பாளரான பாபருடன் உங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறீர்கள்? அவரது சொந்த தேசமான ஆப்கனிஸ்தானிலேயே அவரது சமாதியைச் சீந்த நாதியற்றுப் போய்விட்டதை கவனியுங்கள்.’

உள்துறை அமைச்சராக அப்போது பணியாற்றிக்கொண்டிருந்த எல். கே. அத்வானி அந்த மாநாட்டுப் பந்தலின் முதல் வரிசையில்தான் இருந்தார். கிட்டத்தட்ட ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்.எஸ்.எஸ். ஸ்வயம்சேவகர்களுள் ஒருவராக சுதர்சனின் பேச்சை அவரும் அமைதியாகத்தான் கேட்டுக்கொண்டிருந்தார். ஒரு மதச்சார்பற்ற தேசத்தின் முக்கிய அரசியல் பிரதிநிதியாக அப்போது அவர் தம்மை உணரவில்லை. மாறாக, அவர் ஒரு ஆர்.எஸ்.எஸ். மாணவர். இயக்கத்தின் இனிய தயாரிப்பு.

எதிர்க்கட்சிகள் எகிறிக் குதித்துத் தாண்டவமாட அது ஒரு சந்தர்ப்பமானது.என்ன அக்கிரமம் இது? முற்றிலும் தேச அமைதியைக் குலைக்கக்கூடிய விதமான பேச்சு. மத மோதல்களுக்கு தூபமிடுவது போன்ற பேச்சு. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருக்கும் கொஞ்சநஞ்ச நல்லுறவையும் நசுக்கி எறியத்தக்க பேச்சு. பாகிஸ்தான், பாகிஸ்தானாக இருப்பதற்குக் காரணம், மதத்தை முன்வைத்து அங்கு நடைபெறும் அரசியல். இந்தியா, இந்தியாவாக இருப்பதற்குக் காரணம் மதச்சார்பற்ற அதன் அணுகுமுறை. இந்தியாவைப் பாகிஸ்தான் போல் ஆக்காமல் இந்த ஹிந்துத்துவ இயக்கங்கள் ஓயப்போவதில்லையா?

அத்வானி அமைதியாக பதில் சொன்னார். ‘நாங்கள் ஜனதாவிலிருந்து பிரிந்து வந்ததே, எங்களுடைய ஆர்.எஸ்.எஸ் அடையாளத்தை அவர்கள் ஒரு பிரச்னையாக முன்வைத்ததனால்தான்.’

ஒரு வரியில் ஒரு கட்சியின் நிலைபாட்டை இதைக்காட்டிலும் தெளிவாக

https://telegram.me/aedahamlibrary

விளக்கிவிட முடியாது. அரசியல் தேவை. ஆட்சி தேவை. அதிகாரம் தேவை. பதவி தேவை. இதெல்லாம் எதற்கு? ஆர்.எஸ்.எஸ்ஸின் கனவுகளை நனவாக்குவதற்காக மட்டும். ஆர்.எஸ்.எஸ். அடையாளத்தை விலக்கிவிட்டுத்தான் இந்திய அரசியல் அரங்கில் பங்குகொள்ள முடியுமென்றால் அதற்கு நாங்கள் தயாரில்லை.

இதனால்தான் ஆர்.எஸ்.எஸ்ஸின் 'ஹிந்து ராஷ்டிர'க் கனவை பாரதிய ஜனதா தனது மறைமுகச் செயல்திட்டமாக வைத்துக்கொண்டிருக்கிறது என்று எதிர்கட்சிகள் ஓயாமல் குற்றம் சாட்டின.

இந்திய முஸ்லிம்கள் மீதும் கிறிஸ்தவர்கள்மீதும் ஆர்.எஸ்.எஸ். சுமத்தும் குற்றச்சாட்டுகள் எவை குறித்தும் பாரதிய ஜனதாவுக்கு ஒருபோதும் விமரிசனம் இருந்ததில்லை. முகலாயப் படையெடுப்புகளுக்கு முன்னால் இருந்த அகண்ட பாரத ஹிந்து சாம்ராஜ்ஜியத்தைத் திரும்பக் கொண்டுவரவேண்டுமென்ற அதன் பெருங்கனவு, நடைமுறையில் சாத்தியமற்றது என்பது பாரதிய ஜனதாவின் தலைவர்களுக்குத் தெரியும். ஆனாலும் அதற்கான ஆர்.எஸ்.எஸ்ஸின் முயற்சிகள், விடுக்கும் அறைகூவல்கள் பெரும்பாலும் தேசிய அமைதியைச் சிதைக்கும்படியானவையாகவே இருந்துவிடுவதன் நடைமுறைப் பிரச்னைகளைத் தமது சரித்திரம் முழுதும் அக்கட்சி எதிர்கொண்டு வந்திருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. எந்த எல்லைக்கும் சென்று அது முஸ்லிம்களை விமரிசிக்கும். அவர்களது நம்பிக்கையைக் குறை சொல்லும். ராமரும் கிருஷ்ணரும் உங்கள் ரத்தத்தில் உள்ளார்கள் என்று உசுப்பேற்றும். கிறிஸ்தவ மிஷனரிகளின் மதமாற்ற நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கும் விதமான செயல்பாடுகளில் இறங்கும். 'உங்கள் வேர்கள் ஜெருசலேமில் இருக்கின்றன' என்று பேசிய சாவர்க்கரின் கருத்தை வேறு சொற்களில் மறுபதிப்பு செய்யும்.

அதன் இயல்பு அதுதான். அதன் நோக்கம் அதுதான். மிகத் தெளிவாக, மிகத் தீர்மானமாக இந்தியாவுக்குள் இருக்கும் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் வெறுக்கிற அமைப்பாகவே தன்னைக் கட்டமைத்து வந்திருக்கிறது. அதற்கான சரித்திரக் காரணங்களையும் அவற்றைச் சுட்டிக்காட்டும் ஆதாரங்களையும் பட்டியலிட அவர்கள் எப்போதும் தயார். கிறிஸ்தவர்களின் மதமாற்ற நடவடிக்கைகள். முஸ்லிம்கள் முன்னெடுத்த கலவர உற்சவங்கள்.

ஆனாலும் ஒரு வாதம் என்று வந்தால், அப்படி இல்லை என்றே

https://telegram.me/aedahamlibrary

ஆர்.எஸ்.எஸ். முதலில் மறுக்கும். ஆர்.எஸ்.எஸ்ஸிலேயே முஸ்லிம் உறுப்பினர்கள் உண்டு என்று ஆதாரம் காட்டவும் அவர்களால் முடியும். அவர்கள் தங்களை இந்தியர்களாக உணர்ந்தால் எங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லை என்பார்கள்.

ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு ஜாதி மதப் பாகுபாடுகள் சற்றும் கிடையாது. ஹிந்து சமூகத்துக்குள்ளேயே தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கிவைக்கப்பட்ட சகோதரர்களையும் அரவணைத்து இயங்கும் ஒரே தேசிய இயக்கம், இந்த மண்ணில் நம்மோடு இணைந்து வாழும் முஸ்லிம்-கிறிஸ்தவ சகோதரர்களை விலக்கியா பேசும்? விமரிசிப்பது, அவர்களுடைய செயல்பாடுகளை. சிந்தனைப் போக்கை. அதை மாற்றிக்கொண்டால் ஒரு பிரச்னையும் இல்லை.

திரும்பத் திரும்பச் சொல்லுவார்கள். வேறு வேறு சொற்களில். வேறு வேறு வடிவங்களில். வேறு வேறு பொருள்களிலும்கூட.

ஆனால், ஆர்.எஸ்.எஸ்., தலித்துகளையும் மலைவாழ் பழங்குடியினரையும் இயக்கத்தில் சேர்ப்பதே கலவர காலங்களில் முஸ்லிம்களைத் தாக்குவதற்குத்தான் என்று இடதுசாரிகள் குற்றம் சாட்டுவார்கள்.

உண்மையிலேயே சாதி வித்தியாசம் பார்க்காத அமைப்பு என்றால் ஆர்.எஸ்.எஸ். பிறப்பித்த பரிவாரங்கள் ஏதாவது ஒன்றேனும் பிராமணர் அல்லாத தலைமையுடன் தொடங்கப்பட்டிருக்கிறதா? அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்தை ஆரம்பித்தபோது ஒரு பிராமணத் தலைவரை அதற்கு அளித்தார்கள். தொழிற்சங்கம் தொடங்கியபோதும் பிராமணத் தலைமை. பாரதிய ஜன சங்கத்தின் முதல் தலைவர் ஒரு பிராமணர். கிறிஸ்தவ மிஷினரிகளுக்கு பதிலடி கொடுக்கவென்று ஆரம்பிக்கப்பட்ட வனவாசி கல்யாண் ஆசிரம் இயக்கத்தின் தலைவரும்கூட ஒரு பிராமணர். விஸ்வ ஹிந்து பரிஷத் - கேட்கவே வேண்டாம். வழி நடத்துவது, கட்டளையிடுவது எல்லாம் பிராமணர்கள். களத்தில் இறங்கி அடிப்பதற்கு தலித்துகளும் ஆதிவாசிகளும் தேவைப்படுகிறார்கள்.

கிறிஸ்டஃப் ஜஃபர்லாட் முன்வைக்கும் (The Sangh Parivar-A Reader) குற்றச்சாட்டு இது.

பாரதிய ஜனதா கட்சிக்கு, அது தோன்றிய நாளாக இந்த விமரிசனங்களும் குற்றச்சாட்டுகளும் அத்துப்படி. இதன் தொடர்ச்சியாக, தான் அமைதிகாக்க வேண்டியதும், விமரிசனங்கள், கண்டனங்கள் வரும்போது கண்டுகொள்ளாதிருக்க வேண்டும் என்பதும்

https://telegram.me/aedahamlibrary

அதன் ரத்தத்தில் ஊறிவிட்ட சூட்சுமம்.

இந்தியர்களிடையே தேசிய உணர்வைத் தட்டி எழுப்புவதிலும் தேசபக்தியை ஊட்டுவதிலும் வளர்ப்பதிலும் ஆர்.எஸ்.எஸ்ஸின் செயல்பாடுகள் சந்தேகத்துக்கு இடமில்லாத அளவு நேர்மையானவை. ஆனால், ஹிந்து தேசியம் என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து இந்தியாவில் உள்ள சிறுபான்மையினரை, அவர்களுடைய நம்பிக்கைகளைத் தொடர்ந்து தாக்குவது எந்த வகையிலும் தேச ஒருமைப்பாட்டுக்கு உதவக்கூடியதில்லை என்பதை பாரதிய ஜனதா கட்சி வெகு நன்றாக அறியும்.

ஆனாலும் அது வாய் திறக்காது. செல்லப்பிள்ளைகள் ஒருபோதும் எதிர்த்துப் பேசுவதில்லை என்பது காரணம்.

https://telegram.me/aedahamlibrary

# 14. மோடி வித்தை

தீவிர மதச்சார்பு. தீவிர தேசியவாதம். தீவிர வலதுசாரி மனோபாவம். மிகத் தீவிர தேசபக்தி. சாதி பேதமற்ற இயக்கம். அப்துல் கலாமைக் குடியரசுத் தலைவராக்கி, அவர் கையால் நாடாளுமன்றத்தில் வீர் சாவர்க்கர் படத்தைத் திறக்கவைத்து, ஒரு விதமான காக்டெயில் சமாதான சங்கேதம் காட்டினாலும் ஆர்.எஸ்.எஸ்ஸும் அதன் வழித்தோன்றல்களும் காலம்தோறும் இந்தியாவில் விமரிசனத்துக்கும் கண்டனத்துக்கும் உள்ளாகிக்கொண்டேதான் இருந்தாகவேண்டும். ஒரு மதச்சார்பற்ற தேசமாக இது இருப்பதன்பொருட்டு நாம் அனுபவிக்கும் சௌகரியங்களுக்கும் சந்தோஷங்களுக்கும், தேச பக்தி மிக்க ஆர்.எஸ்.எஸ். கொடுத்தே தீரவேண்டிய விலை அது.

ஆனால், தனது நீண்ட சரித்திரத்தில் அயோத்திக்கு அடுத்தபடி போதிய இடைவெளியில் ஆர்.எஸ்.எஸ்ஸும் அதன் துணை இயக்கங்களும் பங்குபெற்ற மாபெரும் கலவரக்காண்டம் குஜராத்தில் 2002ம் ஆண்டு நடைபெற்றபோது, அதன் தேசபக்தி கண்டு எழும் வியப்பைக் காட்டிலும் மத வெறி கண்டு எழும் கலவர உணர்வு அதிகமாக இருந்தது.

திரும்பவும் அதே வாதம்தான். ஆரம்பித்தது நாங்கள் இல்லை, முஸ்லிம்கள்தான். கோத்ராவில் அவர்கள் ரயில் பெட்டியை எரித்தார்கள். அயோத்தியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த சபர்மதி எக்ஸ்பிரஸில் பயணம் செய்துகொண்டிருந்த ஹிந்துக்கள் நிறைந்த பெட்டி. பதிலுக்கு ஹிந்துக்கள் தாக்கினார்கள்.

அமைப்பு ரீதியில் யாரும் தூண்டிவிடாத பட்சத்தில் உலகில் எந்த இடத்திலும் கலவரம் என்பது தானாக மூள்வதில்லை. மதமல்ல; மதம் சார்ந்த அமைப்புகளே இதன் மூல காரணமாக இருந்து வந்திருக்கின்றன. சரித்திரம்தோறும். நூற்றாண்டுகள் தோறும். ஒவ்வொரு இனக்குழு தோறும்.

குஜராத் கலவரங்களுக்கும் அதன் அனைத்து கோர விளைவுகளுக்கும் முதல்வர் நரேந்திர மோடி பின்னணியில் இருந்தார். ஆர்.எஸ்.எஸ்ஸில் பிறந்து வளர்ந்த அதி தீவிர ஹிந்துத்துவவாதி. டெஹல்கா இதனை

https://telegram.me/aedahamlibrary

அங்கம் அங்கமாக நிரூபித்துப் பக்கம் பக்கமாக எழுதிவிட்டது.

டெஹல்காவின் அரசியல் நோக்கம் குறித்து பாரதிய ஜனதாவும் சங் பரிவார் இயக்கங்களும் பேச முடிந்தது, விமரிசிக்க முடிந்ததே தவிர, அது முன்வைத்த குற்றச்சாட்டுகளை யாரும் மறுக்க முடியவில்லை. ரகசிய கேமரா கொண்டு படமெடுப்பதும் பேட்டியென்று சொல்லாமல் பேச வைத்துப் பதிவு செய்வதும் பத்திரிகை தருமம் இல்லை என்று சொல்லலாம். ஆனால் செய்த பிழை வெளிவர உதவுகிறதல்லவா? (முன்னரும் ஒரு சமயம் நடந்தது. பாரதிய ஜனதாவின் பங்காரு லக்ஷ்மணன் பணம் வாங்கிய தருணம்.)

குஜராத்தில், நரேந்திரமோடியின் ஆதரவுடன்  தீவிரவாத ஹிந்துக்கள், முஸ்லிம்கள்மீது தாக்குதல் நடத்தியது உண்மை. ஊடகங்கள் சொன்னபடி அதில் உயிரிழந்த முஸ்லிம்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் என்பது சற்றே மிகை. நிச்சயம் ஆயிரத்துக்கு மேல். அதில் சந்தேகமில்லை. (750 பேர் என்பது ஆர்.எஸ்.எஸ்ஸின் கணக்கு.) சபர்மதி எக்ஸ்பிரஸில் இறந்த 59 பேரைத் தவிர இந்தக் கலவர காலத்தில் உயிரிழந்த ஹிந்துக்களின் எண்ணிக்கை 250.

இருநூறா எழுநூறா ஆயிரமா இரண்டாயிரமா என்பதல்ல. முதலில் தாக்கியதா, பதிலுக்குத் தாக்கியதா என்பதுமல்ல. ஒரு தேசிய இயக்கமாக, இந்திய அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட அமைப்பாகத் தன்னைச் சொல்லிக்கொள்ளும் ஆர்.எஸ்.எஸ். மதக்கலவரங்களின் விஷயத்தில் மட்டும் ஒரு தீவிரவாத இயக்கத்தின் நிலைபாட்டைத் தயங்காமல் எடுப்பது மிக நிச்சயமாக நெருடக்கூடியது.

கலவரங்களில், நாசகாரச் செயல்களில்  நாங்கள் ஈடுபடுவதில்லை என்று ஆர்.எஸ்.எஸ். மறுக்கலாம். கலவரக்காரர்களுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று அடித்துப் பேசலாம். ஆதாரங்கள் நீட்டலாம். ஆதரவு திரட்டி அணி வகுக்கச் செய்யலாம்.

ஆனால் இந்திய சரித்திரத்தில் ஹிந்துக்கள் சம்பந்தப்படும் எந்த ஒரு மதக்கலவரத்தின் பின்னணியிலும் ஏதேனுமொரு வகையில் சங் பரிவார் அமைப்புகள் இருந்தே வந்திருக்கின்றன. ஹிந்துக்களைக் காப்பது எங்கள் பணி என்று அவர்கள் சொல்வார்கள். ஹிந்துக்களைக் காப்பதென்பது இதர மதத்தவர்களைத் தாக்குவதாக மட்டுமே பெரும்பாலும் வெளிப்படுவதுதான் ஆர்.எஸ்.எஸ்ஸைப் பொருத்தவரை விசேஷமான வெளிப்பாடு.

இந்த இடத்தில் திரும்பவும் மகாத்மா காந்தியின் படுகொலைச்

https://telegram.me/aedahamlibrary

சம்பவத்தை நினைவுகூர வேண்டியிருக்கிறது. நாதுராம் கோட்சே என்னும் முன்னாள் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர், அப்போதைய ஹிந்து மகாசபை உறுப்பினர் தனது சக ஹிந்து தீவிரவாதத் தோழர்களுடன் இணைந்து மேற்கொண்ட  செயல்.

ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு விதிக்கப்பட்ட தடை, நீண்ட வழக்கு, நெடிய விசாரணைகள், ஆர்.எஸ்.எஸ். குற்றமற்றது என்று வெளிவந்த தீர்ப்பு, பிறகும் தொடர்ந்த குற்றச்சாட்டுகள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த இயக்கம் அதை மறுத்து, காந்தி கொலைக்கும் தங்களுக்கும் சற்றும் சம்பந்தமில்லை என்று சொல்லிவந்தது - அனைவருக்கும் தெரியும். புதிய தலைமுறை ஆர்.எஸ்.எஸ். இளைஞர்கள் இதைப் பொருட்படுத்துவதுகூட இல்லை. காந்தி கொலையா? அதெல்லாம் பழைய விஷயம். இயக்கத்துக்கும் அதற்கும் என்ன தொடர்பு? ஒன்றுமில்லை. ஒன்றுமே இல்லை. ஆர்.எஸ்.எஸ். ஒரு பெருங்கடல். லட்சக்கணக்கில் வருவார்கள், போவார்கள். குற்றம்சாட்டக் காரணம் தேடாதீர்கள்.

சொல்வார்கள். சொன்னார்கள். இந்நூலுக்காகப் பேசிய சில ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் இதே கருத்தைத்தான் பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தினார்கள். ஆனால் புவிக்கு அடியில் ஓடும் சரஸ்வதியை நம்பி ஏற்பதுபோல்  புதையுண்ட உண்மைகளையும் ஏற்கத்தானே வேண்டும்?

வருடம் 1994. ஜனவரி 28ம் தேதியிட்ட ஃப்ரண்ட் லைன் இதழில் நாதுராம் கோட்சேவின் சகோதரரும் காந்தி கொலை வழக்கில் முக்கியக் குற்றவாளிகளுள் ஒருவரும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, அனுபவித்து முடித்து வெளியே வந்தவருமான கோபால் கோட்சே பேசுகிறார்.

‘நாங்கள் அனைவரும் ஆர்.எஸ்.எஸ்ஸில் இருந்தோம். நாதுராம், தத்தாத்ரேயா, நான், கோவிந்த். எல்லோரும். எங்கள் வீட்டில் நாங்கள் வளர்ந்ததைவிட ஆர்.எஸ்.எஸ்ஸில் வளர்ந்தவர்கள் என்று சொல்வதுதான் பொருத்தம். ஆர்.எஸ்.எஸ்.தான் எங்கள் குடும்பம். நாதுராம் அதில் பவுத்திக் காரியவாஹாகப் (சிந்தனையாளர், அறிவுத்தளச் செயல்பாட்டாளர் என்று பொருள்.) பணியாற்றினார். தன் வாக்குமூலத்தில் நாதுராம், தான் ஆர்.எஸ்.எஸ்ஸைவிட்டு வெளியேறிவிட்டதாகச் சொன்னார். காரணம், கோல்வால்கரும் ஆர்.எஸ்.எஸ்ஸும் கொலைச் சம்பவத்துக்குப் பிறகு மிகுந்த நெருக்கடிக்கு உட்பட்டிருந்ததுதான். உண்மையில் நாதுராம்

https://telegram.me/aedahamlibrary

ஆர்.எஸ்.எஸ்ஸைவிட்டு விலகவில்லை.’

காந்தியைக் கொல்ல நாங்கள் தீர்மானம் நிறைவேற்றவில்லை, போய்க் கொன்றுவிட்டுவா என்று உத்தரவிடவில்லை  என்று ஆர்.எஸ்.எஸ். சொல்லலாம். அத்வானி சொல்லலாம். ஆனால் நாதுராமை இயக்கத்துக்குத் தொடர்பற்றவன் என்பதுபோல் பேசுவது சரியல்ல என்று அந்தப் பேட்டியில் கோபால் கோட்சே கூறியிருந்தார். ஆர்.எஸ்.எஸ்ஸில் உறுப்பினராக இருந்தபோதுதான் நாதுராம் ஹிந்து மகாசபையின் பணிகளிலும் ஈடுபட்டார். கொலைச் சம்பவத்துக்குப் பிறகு ஹிந்துமகா சபை அவரைக் கைவிடவில்லையே என்றும் கேட்டிருந்தார்.

கோபால் கோட்சே சொல்வதே பொய் என்று ஆர்.எஸ்.எஸ். சொல்லலாம். தன் பெயரைக் கெடுக்க திட்டமிட்ட சதி என்று வாதிடலாம். படேல் எழுதிய கடிதம் போல் இன்னும் பல ஆதாரங்களை முன்வைத்துப் பொங்கி எழலாம்.

அடிப்படை ஒன்றுதான். சர்வ நிச்சயமாக காந்தி கொலைக்கு ஆர்.எஸ்.எஸ். காரணமில்லை. நாதுராம் கோட்சேவை அது தூண்டிவிடவில்லை. இதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால், இளம் வயது முதல் மத உணர்வுகளை எத்தனை ஆழமாக மனத்துக்குள் செலுத்தியிருந்தால், அது ஒரு படுகொலைச் சம்பவம் வரை ஒரு மனிதனை இட்டுச்சென்றிருக்கும்!

குஜராத் கலவரத்தில் ஈடுபட்ட தீவிரவாத ஹிந்துக்கள் விஷயத்திலும் இதுவேதான். கலவரத்தில் ஈடுபடச் சொல்லி ஆர்.எஸ்.எஸ் தலைமை உத்தரவிடவில்லை. நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக்கொண்டு அதை ஆரம்பிக்கவும் இல்லை. ஆனால் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் எந்த மத நம்பிக்கையுமற்ற அரசியல் அடியாள்கள் அல்லர். நிச்சயமாக மத உணர்வால் உந்தப்பட்டவர்கள். ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் கொளுத்தித் தீர்த்துவிடக்கூடிய அளவுக்கு அவர்களுடைய மத உணர்வைக் கொதிநிலையில் வைத்திருப்பது யார்?

ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயகரமான இயக்கம் என்று பாரதிய ஜனதா நீங்கலாக இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தொடர்ந்து கூக்குரலிடுவதன் காரணம் இதுதான்.

*

https://telegram.me/aedahamlibrary

இத்தனையும் பேசி முடித்தபின் ஒரு வினா - ஒரே ஒரு வினா மனத்தில் மேலோங்கி நிற்கும். நிற்க வேண்டும்.

அவ்வளவு பெரிய மதக்கலவரத்துக்கு வழி வகுத்துக் கொடுத்தவரென்றால், அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைதான் என்றால், அதற்குப் பிறகும் எப்படி நரேந்திர மோடி குஜராத்தின் முதல்வராக நீடிக்க முடிகிறது? குஜராத்தில் உள்ள மக்கள் அத்தனை பேரும் ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தைச் சேர்ந்தவர்களா? அத்தனை பேருமே ஹிந்து தேசியத்தைத் தூக்கிப் பிடிப்பவர்களா? 2002 சட்டமன்றத் தேர்தல்களிலும் சரி. 2004 நாடாளுமன்றத் தேர்தல்களிலும் சரி. திரும்பவும் 2007 சட்டமன்றத் தேர்தல்களும் சரி. குஜராத்தில் மட்டும் தொடர்ந்து எப்படி பாரதிய ஜனதா கட்சியே வெற்றி வாகை சூடுகிறது?

இதற்கு பதில் மிக எளிதானது. தன் ஷாகாக்களுக்கு வந்து சேரும் சிறுவர்களையும் இளைஞர்களையும் தீவிரமான மதவாதிகளாகவும் நேர்மையான தேசியவாதிகளாகவும் கட்டி வளர்க்கிறது ஆர்.எஸ்.எஸ்.

ஒரு மதவாதியாக நரேந்திர மோடியின் 2002ம் ஆண்டுச் செயல்பாடுகள் மிகக் கோரமான விளைவுகளை குஜராத்தில் ஏற்படுத்தியது. ஹிந்து - முஸ்லிம்களிடையே அங்கு தீராப்பகை வளரக் காரணமாக அமைந்தது.

அதே சமயம் ஒரு நேர்மையான அரசியல்வாதியாகத் தன் மாநிலத்துக்கு அவர் செய்த, செய்யும் நல்ல காரியங்கள், அதற்குமுன் எந்த குஜராத் முதல்வராலும் (காங்கிரஸ் முதல்வர்களால்) செய்யப்படாதவை. கல்வித் துறையிலும் தொழில் துறையிலும் நவீன விவசாயத் துறையிலும் இன்று குஜராத், இந்தியாவின் முன்னோடி மாநிலம்.

நானோ கார் தொழிற்சாலை என்னுமொரு தங்கச் சுரங்கத்தைக் கொள்கை பேசி இழந்த மேற்கு வங்க இடது சாரிகளையும், அதே திட்டத்தை அள்ளி எடுத்து வந்து குஜராத்தில் நிறுவி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்புகளுக்கும் வழி செய்த மோடியையும் ஒரு உதாரணத்துக்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சராசரி மக்களுக்குக் கொள்கைகளும் சித்தாந்தங்களும் இரண்டாம் பட்சம். தனி நபர் வளர்ச்சி சார்ந்த அக்கறைகளுக்கு முன்னால் கட்சிகளின் கொள்கைகள் ஒன்றுமில்லை. மேற்கு வங்கக் கம்யூனிஸ்டுகளுக்குக் கொள்கைதான் முக்கியம். குஜராத்தின் மோடிக்குக் குடிமக்களே முக்கியம்.

அடிப்படை இதுதான். குஜராத்தின் இன்றைய வளர்ச்சி, சுதந்தரம்

https://telegram.me/aedahamlibrary

அடைந்த நாளாக அந்த மாநிலம் காணாதது. மிகவும் பிரம்மாண்டமானது. மக்களுக்கு வளர்ச்சிதான் முக்கியம். வசதிகளே முக்கியம். குஜராத் என்றல்ல. உலகெங்கும் இதுதான். இது மட்டும்தான்.

மோடி போன்ற, மக்கள் பணியில் வஞ்சனை வைக்காத, ஆனால் ஒரு மதச்சார்பற்ற அரசியல்வாதி கிடைக்கக்கூடுமென்றால் குஜராத் மக்கள் மோடியை நகர்த்திவிடத் தயங்கமாட்டார்கள்.

இந்த உண்மை ஆர்.எஸ்.எஸ்ஸுக்குப் புரியும் காலம் வர நாளாகலாம். புரியாமலேயும் போகலாம். அல்லது புரிந்துகொள்ள விரும்பாமல்.

***

https://telegram.me/aedahamlibrary

# கால வரிசை

1925 - டாக்டர் கேசவ பலிராம் ஹெட்கேவர், நாக்பூரில் ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக் சங்கைத் தொடங்குகிறார்.

1927 - வழக்கமான ஷாகாக்கள் தவிர, அதிகாரிகள் பயிற்சி முகாம் என்ற பெயரில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படுகின்றன.

1929 - பாலாஜி ஹட்டர் என்பவர் முதல் பொதுச்செயலாளராகவும், மார்த்தாண்டராவ் ஜோக் என்பவர் தலைமைப் பயிற்சியாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

1930 - பூரண சுயராஜ்ஜியத் தீர்மானத்தை காங்கிரஸ் நிறைவேற்றுகிறது. ஜனவரி 26ம் தேதியை அனைத்து ஷாகாக்களிலும் சுதந்தர தினமாகக் கொண்டாடச் சொல்லி ஹெட்கேவார் உத்தரவிடுகிறார். சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு சிறை செல்கிறார்.

1931 - ஹெட்கேவார் சிறையிலிருந்து விடுதலையாகிறார். நாக்பூருக்கு வெளியே பல இடங்களில் ஷாகாக்கள் திறக்கப்படுகின்றன. காசியில் ஒரு ஷாகா திறக்கச் சென்றபோது, ஹெட்கேவாரின் நண்பர் பையாஜி தானி என்பவர், மாதவ சதாசிவ கோல்வால்கரை ஹெட்கேவாருக்கு அறிமுகப்படுத்துகிறார்.

1932 - அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்ஸில் சேரக்கூடாது என்ற உத்தரவை அரசாங்கம் வெளியிடுகிறது.

1934 - அந்தத் தடை, ஆட்சி மன்ற உறுப்பினர்களின் ஒருமித்த எதிர்ப்பால் நீங்குகிறது. வார்தாவில் ஒரு ஆர்.எஸ்.எஸ். முகாமுக்கு மகாத்மா காந்தி விஜயம் செய்கிறார். தீண்டாமை கடைப்பிடிக்காத இயக்கம் என்பதற்காகப் பாராட்டுகிறார்.

1936 - ராஷ்ட்ரிய சேவிகா சமிதி என்னும் பெண்கள் பிரிவு தோற்றுவிக்கப்படுகிறது.

1939 - கோல்வால்கர் ஆர்.எஸ்.எஸ்ஸின் பொதுச்செயலாளராக அறிவிக்கப்படுகிறார்.

1940 - டாக்டர் ஹெட்கேவார் காலமானார். சாவர்க்கர், டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி போன்றோர் ஷாகாக்களுக்கு விஜயம் செய்து,

https://telegram.me/aedahamlibrary

நட்புணர்வை உறுதி செய்கிறார்கள். கோல்வால்கர் தலைவராகிறார்.

1942 - காங்கிரஸ் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தொடங்குகிறது.

1946 - முஸ்லிம் லீக், நேரடி நடவடிக்கை அறிவிப்பை வெளியிடுகிறது. லாகூரில் தொடங்கி வட மாநிலங்களெங்கும் கலவரம் பரவுகிறது. ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் கொல்லப்படுவதை அடுத்து, ஆர்.எஸ்.எஸ். முஸ்லிம்கள் மீது பதில் தாக்குதல் தொடுக்கிறது.

1947 - இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்தரமடைகின்றன. பிரிவினைக் கலவரங்களில் ஆர்.எஸ்.எஸ். மிகத் தீவிரமாக ஹிந்துக்கள் தரப்பில் கலந்துகொள்கிறது. அகதி முகாம்களில் ஹிந்துக்களுக்கு சேவையாற்றுகிறது. காஷ்மீரை இந்தியாவுடன் இணைப்பதற்கான பேச்சுவார்த்தைக்காக கோல்வால்கர் ஸ்ரீநகரில் ஹரி சிங்கைச் சந்திக்கிறார்.

1948 - மகாத்மா காந்தி, நாதுராம் கோட்சேவால் படுகொலை செய்யப்படுகிறார். ஆர்.எஸ்.எஸ்ஸுக்குத் தடை விதிக்கப்படுகிறது. கோல்வால்கர் கைது செய்யப்படுகிறார். தேசமெங்கும் சுமார் 17000 ஸ்வயம்சேவகர்கள் கைதாகிறார்கள்.

1949 - நிபந்தனைகளின் அடிப்படையில் தடை நீக்கப்படுகிறது. சங்கத்துக்கான சட்ட திட்டங்கள் வரையப்படுகின்றன. அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத் தொடங்கப்படுகிறது.
1951 - டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி பாரதிய ஜன சங்கத்தைத் தோற்றுவிக்கிறார்.

1952 - பசு பாதுகாப்பு இயக்கம் தொடங்குகிறது.

1953 - ஷ்யாமா பிரசாத் முகர்ஜி காஷ்மீரில் காலமானார்.

1954 - தாத்ரா-நாகர் ஹவேலி மீட்புப் போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் பங்குபெறுகிறார்கள். அதன் தொடர்ச்சியாக அடுத்த ஆண்டு கோவா விடுதலைக்கான சத்தியாகிரகப் போராட்டம் நடைபெறுகிறது.

1956 - ஏக்நாத் ரானடே பொதுச்செயலாளராக அறிவிக்கப்படுகிறார்.

1962 - கன்னியாகுமரி விவேகானந்தர் பாறை நினைவுச்சின்னப் பணிகள் ஆரம்பமாகின்றன. ஏக்நாத் ரானடே பொறுப்பேற்கிறார்.

https://telegram.me/aedahamlibrary

1963 - இந்திய சீன யுத்த சமயத்தில் சிறப்பான பங்களிப்பாற்றியதற்குப் பரிசாக ஜவாஹர்லால் நேரு, ஆர்.எஸ்.எஸ்ஸை குடியரசு தின அணிவகுப்பில் பங்குபெற அழைக்கிறார்.

1964 - விஸ்வ ஹிந்து பரிஷத் தோற்றுவிக்கப்படுகிறது.

1965 - இரண்டாவது இந்திய பாகிஸ்தான் யுத்தம். ஆர்.எஸ்.எஸ். அரசுக்கு ஆதரவு தெரிவித்து, பல தன்னார்வச் சேவைகள் புரிகிறது. மதுகர் தத்தாத்ரேய தியோரஸ் பொதுச்செயலாளராகிறார்.

1966 - பிகாரில் ஆர்.எஸ்.எஸ்ஸின் தன்னலமற்ற மக்கள் பணியைப் பார்த்து ஜெயப்பிரகாஷ் நாராயண் பாராட்டுகிறார்.

1972 - விவேகானந்தர் நினைவாலயப் பணிகள் நிறைவடைகின்றன. ஜனாதிபதி வி.வி. கிரி திறந்து வைக்கிறார்.

1973 - கோல்வால்கர் காலமானார். பாலாசாஹேப் தியோரஸ் ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவராகப் பொறுப்பேற்கிறார்.

1975 - நெருக்கடி நிலைப் பிரகடனத்தை அடுத்து ஆர்.எஸ்.எஸ். மீண்டும் தடை செய்யப்படுகிறது.

1977 - பாரதிய ஜன சங்கம், ஜனதா கட்சியில் ஐக்கியமாகிறது.

1977 - வி.எச்.பி நடத்திய மாபெரும் சமய மாநாட்டில் தலாய் லாமா கலந்துகொள்கிறார்.

1980 - ஆர்.எஸ்.எஸ். தொடர்பை விட முடியாது என்று உறுதியாக இருந்தபடியால், ஜனதா கட்சியிலிருந்து ஜன சங்கத்தினர் பிரிந்து வந்து பாரதிய ஜனதா கட்சியைத் தொடங்குகிறார்கள்.

1981 - மீனாட்சிபுரம் மதமாற்றச் சம்பவம். மீனாட்சிபுரத்தின் பெயர் ரஹமத் நகராகிறது. வி.எச்.பியும் இந்து முன்னணியும் மதமாற்றத்தைத் தடுப்பதற்கும், மாறியவர்களை மீண்டும் ஹிந்து மதத்துக்கு மாற்றவும் முயற்சி மேற்கொள்கின்றன.

1990 - முலாயம் சிங் அரசின் அனைத்துத் தடைகளையும் மீறி அயோத்தியில் கரசேவை தொடங்கப்படுகிறது.

1992 - பாபர் மசூதி இடிக்கப்படுகிறது.

2000 - கே.எஸ். சுதர்சன் ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவர் ஆகிறார்.

https://telegram.me/aedahamlibrary

2001 - குஜராத் பூகம்பம். மீட்புப்பணியில் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் மிகத் தீவிரமாக ஈடுபடுகிறார்கள்.

2002 - குஜராத் கலவரம்.  மிக மோசமான ஹிந்து முஸ்லிம் கலவரத்துக்கு நரேந்திர மோடி அரசு காரணமாகிறது.

2009 - மோகன் மதுகர் பாகவத் ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைவராகிறார்.

2010 - அலகாபாத் உயர்நீதிமன்றம் அயோத்தி வழக்கில் தீர்ப்பளிக்கிறது. சர்ச்சைக்குரிய மசூதி வளாகத்தின் மையப்பகுதி ஹிந்துக்களுக்கே சொந்தம் என்று தீர்ப்பு சொல்கிறது. தீர்ப்பு வெளியானதும் வீடுகளின் வாசலில் அகல் விளக்கேற்றி வைத்து அமைதியாக வழிபடச் சொல்லி ஆர்.எஸ்.எஸ். தன் உறுப்பினர்களுக்கு அறிவிக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

# உதவிய நூல்கள், ஆதாரங்கள்


§ Partition days: The Fiery Saga of RSS, Manik Chandra Vajpayee, Shridhar Paradkar
§ RSS - A Vision in Action - H.V. Seshadri
§ High Courts on RSS - Sahithya Sindu Prakashana, Bangalore
§ The Sangh Parivar - A Reader - edited by Christophe Jaffrelot
§ Living in Harmony - Swami Mitranandaji
§ Hindutva Ideology - Unique and Universal - P. Parameswaran
§ Do all Religions have the same goal? - Swami Dayananda Saraswathi
§ RSS Resolves... (Full Text of Resolutions) - RSS, Karnataka
§ Converted Kashmir - Narendra Sehgal
§ Hindu Nationalism and the Language of politics in late calonial India - William Gould
§ The emergence of Hindu nationalism in India - John Zavos
§ The RSS and the BJP: a division of labour - AG Noorani
§ Forced Migration and Ethnic Cleansing in Lahore in 1947 - Ishtiaq Ahmed
§ Hindu Nationalism - A reader - Christophe Jeffrelot
§ Why Hindu Rashtra? - KS Sudharshan, K. Sooryanarayan rao, H.V. Seshadri
§ Bunch of Thoughts - MS Golwalkar
§ காக்கி உடையும் காவிக் கொடியும் - ஓரியண்ட் லாங்மன்
§ விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னத்தின் கதை - விவேகானந்த கேந்திரம் வெளியீடு
§ மனு வாதமும் ஆர்.எஸ்.எஸ்ஸும் - ரமேஷ் பதங்கே
§ Indian Take: RSS-Sangh: http://indiantake.blogspot.com/search/label/RSS-Sangh
§ Shakha 2.0: http://www.outlookindia.com/article.aspx?267563
§ Savarkar and Gandhi: http://hinduonnet.com/fline/fl2006/stories/20030328003603400.htm
§ Goa's Freedom Movement:


https://telegram.me/aedahamlibrary

http://www.goacom.com/culture/history/history4.html

§ Graham Stains Murder Case: http://www.rediff.com/news/staines.htm

§ Ban and the Sangh: http://www.golwalkarguruji.org/shri-guruji/articles/first-ban-in-1948-and-the-sangh

https://telegram.me/aedahamlibrary